Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

முரசு – 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 தை 15 செவ்வாய்க்கிழமை (28.01.2014) பக்கங்கள் 20 ஓசை – 119

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

# ஜெனிவாவை எதிர்கொள்ள சர்வதேச ஆதரவு தேட முயற்சி

(கொழும்பு)

ஜெனிவாவில் இலங்கை தொடர்பான அமெரிக்கத் தீர்மானத்தை தோற்கடிப்பதற்கான சர்வதேச ஆதரவைத் திரட்டும் முயற்சியில் அரசு தீவிர நடவடிக்கையில் இறங்கியுள்ளது.

இதற்காக சர்வதேச அளவில் பரப்புரை செய்யும் நடவடிக்கைகளை அரசு தீவிரப்படுத்தியுள்ளது.

ஜனாதிபதியின் செயலாளர் தலைமையில் இதற்கென விசேட செயலணி ஒன்றும் உருவாக்கப்பட்டிருக்கிறது.

இலங்கைக்கு எதிராக வரும் மார்ச் மாதம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் கொண்டு வரப்படவுள்ள தீர்மானத்தைத் தோற்கடிப்பதற்கு பெரியளவிலான இராஜதந்திர முயற்சிகளில் அரசாங்கம் இறங்கியுள்ளது.

ஐ.நா. மனிதஉரிமைகள் பேரவையின் 25ஆவது கூட்டத் தொடரில், இலங்கை மீது மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று அனைத்துலக சமூகத்திடம் அமெரிக்கா கோரிக்கை விடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தநிலையில், ஜெனிவாவில் இந்த தீர்மானத்துக்கு எதிரான மிகப்பெரியளவிலான பரப்புரைகளில் ஈடுபட அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

ஜெனிவாவில் இந்தப் பரப்புரைகளை மேற்கொள்வதற்காக ஜனாதிபதியின் செயலரும், நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கான தேசிய திட்டத்துக்குப் பொறுப்பானவருமான

(19) பக்கம் பார்க்க...

## ஜெனிவாவில் இந்திய ஆதரவு பீரிஸ் விரைவில் டில்லிக்கு



இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித்தினை சந்தித்து இருதரப்பு பேச்சுவார்த்தையில் ஈடுபடும் அதேநேரம் புதுடில்லியிலுள்ள வெளிநாட்டுத் தூதுவர்களை சந்தித்து இலங்கையின் அபிவிருத்தி மற்றும் நல்லிணக்கச் செயற்பாடுகள் குறித்தும் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் விரிவாக விளக்கமளிக்கவுள்ளார்.

அபுதாபிக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள அமைச்சர் அங்கிருந்து புதுடில்லிக்கு நேரடியாக விஜயம் செய்யவிருப்பதாக அமைச்சரின் ஊடகப்பிரிவு தெரிவித்தது.

அதேநேரம், வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் இன்னும் ஓரிரு தினங்களில் அமைச்சர் சல்மான் குர்ஷித்தினை டில்லியில் இரண்டாவது தடவையாகவும் சந்திக்க விருப்பதனை இலங்கையிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகர் சின்ஹாவும் உறுதிப்படுத்தினார்.

எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 25 ஆவது அமர்வில் இலங்கை கலந்து கொள்ளவுள்ளமையை முன்னிட்டு மோதல்களுக்குப் பின்னர் துரித கதியில் நாட்டில் முன்னெடுக்கப்பட்டு வரும் அபிவிருத்திகள் மற்றும் நல்லிணக்கச் செயற்பாடுகள் குறித்து உலக நாடுகளுக்கு விளக்கமளிக்க அரசாங்கம் ஏற்கனவே திட்டமிட்டிருந்தது.

அதற்கமைய ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க

(19) பக்கம் பார்க்க...

## வடக்கில் கண்ணிவெடி அகற்ற மீண்டும் ஜப்பான் நிதி உதவி

(கொழும்பு)

வடக்கில் கண்ணி வெடிகளை அகற்றுவதற்கு ஜப்பானிய அரசாங்கம் 11.5 மில்லியன் அமெரிக்க டொலர்களை நேற்றைய தினம் வழங்கியுள்ளது.

இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் நொபுட் கிட்டோ ஹோபோ இது தொடர்பான ஒப்பந்தத்தில் நேற்றைய தினம் கைச்சாத்திட்டுள்ளார். இதன் போது கருத்தத் தெரிவித்த தூதுவர் ஹோபோ,

வடக்கில் கண்ணிவெடி அகற்றும் செயற்பாடு முடிவுறும்

(19) பக்கம் பார்க்க...

## எல்லைதாண்டிய கடற்றொழில்; சென்னைப் பேச்சில் சுமூகத் தீர்வு



இந்திய மற்றும் இலங்கை மீனவர்களுக்கு இடையில் சென்னையில் நேற்று நடந்த பேச்சுவார்த்தைகள் சுமுகமாகவும், பயனுள்ளதாகவும், முன்னேற்றமளிக்கும் வகையிலும் நடைபெற்றது என்று இரு தரப்பு மீனவர் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

தமிழக மீனவர்கள் இலங்கை கடற்பரப்பில் மீன்பிடிப்பதாகக் கூறப்பட்டு அது தொடர்பாக அவர்கள் இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்படுவது, படகுகள் பறிமுதல் செய்யப்படுவது போன்ற பிரச்சினைகள் குறித்து இரு தரப்புகளிடையே தீர்வைக் காண்பதற்காக சென்னையில் நேற்றுக காலை 10.00 மணியிலிருந்து பேச்சுவார்த்தைகள் நடந்தன.

இந்திய தரப்பில் மீன்வளத் துறை அமைச்சர் தனபால், மீன்வளத்துறை செயலர் எஸ். விஜயக்குமார், மற்றும் மீன்வளத்துறை இயக்குநர் முனியநாதன், தமிழக மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இலங்கையிலிருந்து இல

(19) பக்கம் பார்க்க...

## மன்னாரில் மண்டை ஓடுகள் நேற்று மட்டும் மூன்று மீட்பு

மன்னார் மனிதப் புதைகுழியிலிருந்து நேற்றும் மூன்று மண்டையோடுகள் மீட்கப்பட்டுள்ளன.

நேற்று மீட்கப்பட்டுள்ள மண்டையோடுகளுடன் மொத்தமாக இதுவரை 48 மனித மண்டையோடுகள் மீட்கப்பட்டுள்ளன.

மன்னார், திருக்கேதீஸ்வரம் பகுதியிலுள்ள மனிதப் புதைகுழியில் நேற்றுக் காலை மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட அகழ்வுப் பணிகள் மாலை வரை தொடர்ந்து இடம்பெற்றது

மன்னார் மாவட்ட நீதவான் ஆனந்தி கனகரட்ணம் முன்னிலையில் அகழ்வுப் பணிகள் இடம்பெற்றன.

திருக்கேதீஸ்வரம் ஆலயம் மாந்தை வீதியினூடாக குடிநீர் வழங்குவதற்காக நீர் குழாய்கள் பதிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் கடந்த வருடம் டிசம்பர் 20 ஆம் திகதி இந்த மனிதப் புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டிருந்தது.

அதனைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட அகழ்வுப் பணிகளின்போது 48 மண்டையோடுகள் மற்றும் எலும்புக் கூடுகள் உள்ளிட்ட மனித எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸ்

(19) பக்கம் பார்க்க...

## பிரதம செயலாளரை இடமாற்றக்கூடாது

### ஜனாதிபதிக்கு அவசர கடிதம்

வடக்கின் அபிவிருத்திக்கு பல்வேறு வழிகளிலும் வினைத்திறனாகச் செயற்படும் வடமகாண பிரதம செயலாளர் திருமதி ரமேஷ் விஜயலட்சுமியை அவரது பதவியிலிருந்து இடமாற்றவோ அன்றி விலக்கவோ ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்வரக்கூடாது.

இவ்வாறு வலி.தென்மேற்கு மானிப்பாயில் உள்ள ஹேமலதா ஞாபகார்த்த நிதியம் என்ற பொது அமைப்பு அவசர கடிதம் ஒன்றை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு அனுப்பி வைத்துள்ளது.

வடமாகாண அபிவிருத்திக்கு வலுச்சேர்க்கும் பிரதம செயலாளர் திருமதி ரமேஷ் விஜயலட்சுமியை

(19) பக்கம் பார்க்க...

## மாகாண அமைச்சுக்களை சாடுகிறார் சிவாஜிலிங்கம்

### ஒன்றுக்கும் வக்கில்லாத அமைச்சுக்கள் எனவும் வர்ணிப்பு

(யாழ்ப்பாணம்)

ஒரு சிறிய விசாரணையைக் கூட நடத்தக்கூடிய அளவிற்கு வக்கில்லாத அளவில்தான் எமது மாகாண அமைச்சுக்கள் இருக்கின்றன. இந்த இலட்சணத்தை யாரிடம் போய்ச் சொல்வது என காரசாரமாக குற்றம் சுமத்தினார் சிவாஜிலிங்கம்.

உள்ளூராட்சி மன்றங்கள் வடமாகாண சபையின் தீர்மானங்களுக்கு எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுப்பதில்லை என்பது குறித்து விளக்கமளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

உள்ளூராட்சி அமைச்சர் விழித்துக் கொண்டிருக்கிறாரா? இதற்கு உள்ளூராட்சி அமைச்சர் தான் பதில் சொல்ல வேண்டும். அதுமட்டுமல்ல அரசுடன் பேசிப் பார்த்து இச்சபையை முன்னெடுக்கலாமா என அவர் எடுத்த முயற்சியில் சலசலப்புக்கு மத்தியிலும் முதலமைச்சர் ஒரு தடவை அல்ல இரண்டு தடவைகள் சத்தியப் பிரமாணம் செய்து பின்னர் பேச்சு வார்த்தையும் நடத்தியுள்ளார். 'பேச்சுப் பல்லக்கு தம்பி

(19) பக்கம் பார்க்க...

11



கனவுப் பொய்கை

13



அதிக கட்டணம்

# காணாமற்போனோர் குறித்த பெற்றோர் ஒன்றியம் திறப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் நேற்றய தினம் இறந்த மற்றும் காணமற்போனவர்களின் பெற்றோர்களின் ஒன்றியத்தின் கிளிநொச்சி காரியாலயம் திற்நது வைக்கப்பட்டது. கிளிநொச்சி ஏ9 வீதி இலக்கம் 37 மாவட்டச் செயலகம் முன்பாக இக்காரியாலயம் திறக்கப்பட்டுள்ளது.



இறந்த மற்றும் காணமற்போன பெற்றோர்கள், உறவினர்களின் நலன்களை பாதுகாக்கும் வகையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இவ் அலுவலகத்தில் இறந்த மற்றும் காணமற்போனவர்களின் பெற்றோர்கள், உறவினர்கள் தங்களது பதிவுகளை மேற்கொள்ளுமாறு இறந்த, மற்றும் காணமல்போன பெற்றோர்களின் ஒன்றியத்தின் கிளிநொச்சி காரியாலய அமைப்பாளர் கோபால் குணாலன் தெரிவித்துள்ளார்.

நேற்று மதியம் 12 மணிக்கு கிளிநொச்சி திரேசா தேவாலயத்தின் பங்குத் தந்தை ஜோர்ஜினால் அலுவலகம் நாடாவெட்டி திறக்கப்பட்டது. இதன் போது கிளிநொச்சி முருகன் ஆலய பிரதம குருக்கள் தென் இந்திய திருச்சபையின் கிளிநொச்சி அருட்தந்தை ஜோன் தேவசகாயம், இறந்த, மற்றும் காணமற்போன பெற்றோர்களின் ஒன்றியத்தின் தேசிய அமைப்பாளர் ஆனந்த ஜெயமால், அதன் வடக்கு கிழக்கு அமைப்பாளர் வேலுப்பிள்ளை மகேஸ்வரன், கிளிநொச்சி திடீர் மரண விசாரணை அதிகாரி திருலோகமூர்த்தி, கிராம அலுவலர்கள் மற்றும் இறந்த, மற்றும் காணமற்போனவர்களின் பெற்றோர்கள் உறவினர்கள் என பலர் கலந்துகொண்டனர். (29)

## காவலரண் அகற்றம்

(குருநகர்)

யாழ்.வேம்படி வீதி முதலாம் குறுக்கு வீதியில் அமைந்திருந்த படையினரின் காவலரண் அகற்றப்பட்டுள்ளது.

மேற்படி காவலரண் ஏறத்தாள 15 வருடங்களுக்கு மேலாக அவ்விடத்தில் அமைந்திருந்தது. யாழ்.நகரம் மற்றும் வடபகுதிகளில் படையினரின் பிரசன்னத்தைப் படிப்படியாக குறைத்துவரும் நடவடிக்கையின் காரணமாகவே அவ்விதம் அமைந்துள்ள காவலரண்கள் அகற்றப்பட்டுவருவதும் குறிப்பிடத்தக்கது.

அதேவேளை படையினர் பல வருடங்களாகப் பாவனைக்கு உட்படுத்திய மக்களின் குடியிருப்புக்களையும் மீளளித்து வருவதும் சுட்டிக்காட்டத்தக்கது. (68)

## டெங்குத் தொற்று; இருவர் அனுமதி

(யாழ்ப்பாணம்)

டெங்கு நோய்த்தொற்றிற்கு இலக்காகிய இருவர் நேற்று யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டனர்.

யாழ்.கொட்டடி மற்றும் யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதியில் இருந்தே இவர்கள் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த சனிக்கிழமை இருவர் டெங்குத்தொற்றிற்கு இலக்காகிய நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (பா)

## வடக்கு மாகாணசபை உறுப்பினர்களுக்கு நூல் நிலையத்தில் செயலமர்வு



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையின் அங்கத்தவர்களுக்கும், சிரேஷ்ட அதிகாரிகளுக்குமான இரண்டு நாள் செயலமர்வு நேற்று யாழ். நூல் நிலையக் கேட்போர் கூடத்தில் ஆரம்பமாகியது.

அரசியலமைப்புக் கற்கைகள் நிறுவனத்தின் ஏற்பாட்டிலான இந்த செயலமர்வு வடக்கு மாகாணசபையின் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தலைமையில் ஆரம்பமாகியது. இதில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், வடக்கு மாகாண அமைச்சர்கள், உற[illegible]கள், சிரேஷ்ட அதிகார[illegible] கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வின் ஆரம்பத்தில் '[illegible]காண சபைக்கான சட்ட வரையாறை' குறித்து ஜனாதிபதியின் சட்டத்தரணி கலாநிதி ஜயம்பதி விக்கிரமராட்சி விளக்கவுரையாற்றினார்.

தொடர்ந்து 'அபிவிருத்திக்கும் மாற்றங்களுக்கமான களமாக மாகாணசபை' என்னும் தொனிப்பொருளில் பேராதனை பல்கலைக்கழக அரசியல் விஞ்ஞான பேராசிரியர் சரஞ்சித் அமரசிங்க விளக்கவுரையாற்றினார்.

இதன் முடிவில் கேள்வி பதில் நிகழ்வு இடம்பெற்றது. தொடர்ந்து இன்று இரண்டாவது நாள் செயலமர்வில் 'மாகாண மட்டத்தில் அரசியல் அமைப்பில் ஜனநாயகம்' என்னும் தொனிப்பொருளில் கொழும்பு பல்கலைக்கழக சட்டபீட விரிவுரையாளர் என்.செல்வக்குமரன் 'மாகாண நிர்வாகம்' பற்றி இளைப்பாறிய இலங்கை நிர்வாகசேவை சிரேஸ்ட உத்தியோகத்தர் ஒஸ்ரின் பெர்ணாண்டோ ஆகியோர் கருத்துரை வழங்கவுள்ளார். (பா)

## வடக்கு மாகாண சபையில் நிறைவேறிய 13 பிரேரணைகள்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையின் 5 ஆவது அமர்வு நேற்றுக்காலை இடம்பெற்றது. இதன்போது சபை உறுப்பினர்களால் 14 பிரரேணைகள் முன்மொழியப்பட்டு ஒரு பிரேரணை வாபஸ் பெறப்பட்ட நிலையில் 13 பிரேரணைகளும் ஏகமனதாக நிறைவேறின.

'உறுப்பினர் து.ரவிகரனின் எமது பல்லாயிரக்கணக்கான மக்கள் உயிர்த்தியாகம் செய்த முள்ளிவாய்க்கால் மண்ணில் தங்களுடைய உறவுகளை எண்ணி ஒரு சொட்டு கண்ணீருடன் நினைவு கூருவதற்கு ஏதுவாக ஒரு நினைவுச் சின்னம் அமைத்தல் தொடர்பான பிரேரணை பிரதித்தலைவர் அ.ஜெயநாதனின் வழிமொழிவுடன் நிறைவேறியது.

புதுக்குடியிருப்பு பிரதேச வைத்தியசாலை போரின்போது பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு சேவை வழங்கியது. இறுதிக் கட்ட யுத்தத்தில் முற்றாக அழிக்கப்பட்து. தற்போது அங்குள்ள மக்களின் எண்ணிக்கையை கருத்திற்கொண்டு அதனை ஆதாரவைத்தியசாலையாக தரமுயர்த்தப்படவேண்டும் என்ற பிரேரணை சிவமோகனின் வழிமொழிதலுடன் ஏகமனதாக நிறைவேறியது.

இத்தோடு முல்லைத்தீவு மாவட்டத்தில் காணிப்பற்று விண்ணப்பித்தவர்களுக்கு காணிக்கச்சேரி நடாத்தி காணியை வழங்கக் கோரி அன்ரனி ஜெயநாதனின் பிரேரணையை ரவிகரனும், ஜவாகிரும் வழிமொழிந்ததுடன், எம்.கே.சிவாஜிலிங்கத்தின் தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படுகின்ற திட்டமிட்டதாக்கல் என்பதனை அனைத்துலக 'சமூகத்திற்கு சுட்டிக்காட்டுகின்றோம் என்ற பிரேரணையும்,

இலங்கை அரசில் எமக்கு எவ்வித நம்பிக்கையும் இல்லை என்பதுடன், எந்தவிதமான உள்நாட்டுப் பொறிமுறைகளும் எமக்கு நீதியையோ அல்லது அரசியல் தீர்வையோ ஒருபோதும் கொடுக்குமென நம்பவே இல்லை. ஆகையால் அனைத்து உள்நாட்டுப் பொறிமுறையையும் நிராகரிக்கின்றோம் என்ற பிரேரணையும்,

எமது மக்களுக்கு இழைக்கப்பட்ட போர்க்குற்றங்கள் மானிடத்திற்கு எதிரான குற்றங்கள், இனப்படுகொலைகள் போலானவற்றிற்கு விசாரணை செய்வதற்காக பக்கச்சார்பற்ற பன்னாட்டு விசாரணையை ஐக்கிய நாடுகள் சபையின் துணையுடன் உருவாக்க அனைத்துலக சமூகத்தினை நாம் வேண்டுகிறோம். என்ற பிரேரணைகள் ரவிகரன் வழிமொழிந்து ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

மூன்றாவது முறையாக ஜெனிவா மனித உரிமைகள் மாநாடு நடைபெறவுள்ளதால் முள்ளிவாய்க்கால் படுகொல்லை குறித்து நிரூபிக்கும் வகையிலும், காணாமற்போனவர்களில் 14, 6679 நபர்களின் நிலையையும், ஆராயும் வகையிலும் நீதியற்ற கணக்கெடுப்புக்கு மாறாக எமது மாகாண சபையால் நியாயமான கணக்கெடுப்பை மேற்கொண்டு ஜெனிவாவுக்கு தெளிவுபடுத்த வேண்டும். அத்துடன் இன அழிப்புக்கு சாட்சியாக ஆதாரங்களோடு நாமும் அங்கு செல்வதற்கு வழிவகுக்கவேண்டும் என்பதுடன், மன்னார் மனிதப்புதைகுழி விசாரணையை சர்வதேச விசாரணையாக நடத்தப்படவேண்டும் என திருமதி அனந்தி சசிதரனின் பிரேரணையை ரவிகரன் வழிமொழிந்ததுடன்,

தேசிய மொழியான தமிழ் மொழி வடக்கு, கிழக்கில் முன்னிலைப்படுத்தவேண்டும் என்ற கந்தையா சர்வேஸ்வரனின் முன்மொழிவை ஆர்னோல்டும், 18 ஆண்டுகளாக கைவிடப்பட்ட கால்நடைகளை வைத்து பாதுகாப்புத்தரப்பினர் பெரும் பாற்பண்ணையை நடத்தி வருகின்றனர். இந்த கால்நடைகள் மீளப்பெற்று உரியவர்களிடம் கையளிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற சர்வேஸ்வரனின் பிரேரணையை சிராய்பா வழிமொழிந்தார். இதேவேளை கட்டாக்காலி மாடுகள் தொடர்பில் சர்வேஸ்வரனின் பிரேரணைக்கு கட்டாக்காலி மாடுகளை பிடித்து உரிமையாளர்களிடமும், உரிமை கோரப்படாதவற்றை மாகாண அரசு பொறுப்பேற்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என குணசீலன் வழிமொழிந்தார்.

இறுதியாக வவுனியா - பூந்தோட்டத்தில் கூட்டுறவு பயிற்சிக் கல்லூரி, மன்னார் கூட்டறவு சபை ஆகியவற்றில் உள்ள படைத் தரப்பினர் வெளியோறி அதனை கூட்டுறவு சபையிடம் கையளிக்க வேண்டும் என்ற ச.சுகிர்தனின் தீர்மானம் சர்வேஸ்வரனின் வழிமொழிதலுடன் ஏகமனதாக நிறைவேறியது. (இ)


சிறுவிளம்பரம்

காணி விற்பனைக்கு

சிறுப்பிட்டி தெற்கில் 12 பரப்பு கலட்டிக்காணி விற்பனைக் குண்டு (சதுரப்பரப்பு) உள் வீதி யோரமானது.

தொடர்புகளுக்கு:
077 271 8467 (C/3333)


## பருத்தித்துறை பொதுச்சந்தை; தீர்வில்லாமல் தொடரும் இழுபறி

(பருத்தித்துறை)

பருத்தித்துறை நகரசபையின் கீழ் உள்ள பொதுச்சந்தை வியாபாரிகளின் விவகாரம் நேற்றும் தொடர்ந்தது.

பொதுச்சந்தையில் மரக்கறி வியாபாரத்தை மேற்கொள்ளும் வியாபாரிகள் மேல் தளத்திற்குச் செல்லுமாறு நகரபையினால் அறிவுறுத்தப்பட்டு வரும் நிலையில் வியாபாரிகள் தமது தரப்பிலுள்ள சிரமங்கள், கஷ்டங்கள், நெருக்கடிகளையும் சுட்டிக்காட்டி கீழ்த்தளத்திலேயே வியாபாரத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் நேற்று பொதுச்சந்தையின் கீழ்த்தளத்தில் பருத்தித்துறை நகரசபைத் தவிசாளரினால் அறிவித்தல் ஒன்று சுவரில் ஒட்டப்பட்டிருந்ததாகவும், அதில் மரக்கறி வியாபாரிகள் நகரசபையின் அறிவுறுத்தலுக்கமைய மேல்தளத்தில் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும், அவ்வாறு இல்லையேல் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

வியாபாரிகள் இது தொடர்பில் தாம் அஞ்சப்போவதில்லை எனவும், தாம் கீழ்த்தளத்திலேயே வியாபாரத்தை மேற்கொள்வோம் எனத் தெரிவித்ததுடன், நேற்றும் கீழ்த்தளத்திலேயே வியாபார நடவடிக்கைகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (109)

## பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கம்பர் மலை வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணியளவில் வித்தியாலய மண்டபதில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் சகல பழைய மாணவர்களையும் தவறாது குறித்த நேரத்திற்குள் கலந்துகொள்ளுமாறு மு.ரவீந்திரன் அறிவித்துள்ளார். (150)

# ஆலயங்களில் களவைத் தடுக்க நிர்வாகத்தின் பங்களிப்பு அவசியம்

## காங்கேசன்துறை பொலிஸ்அத்தியட்சகர் தெரிவிப்பு

(கரணவாய்)

தற்காலத்தில் இந்து ஆலயங்களில் கொள்ளைகள் அதிகளவில் இடம்பெற்றுவருகின்றன. இதனை முற்றாகத் தடுப்பதற்கு ஆலய நிர்வாகத்தினர் அக்கறையுடன் செயற்பட வேண்டும் என காங்கேசன்துறை பொலிஸ் அத்தியட்சகர் என்.கே.தயானந்த விஜயசிறி தெரிவித்துள்ளார்.

நெல்லியடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இந்து ஆலயங்களின் பரிபாலனசபைத் தலைவர், செயலாளர், மற்றும் பிரதம பூசகர் ஆகியோருக்கும் பொலிஸாருக்கும் இடையிலான கலந்துரையாடல் கடந்த சனிக்கிழமை முருகமூர்த்தி மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த காலங்களில் கோவில்களில் வைக்கப்பட்டிருக்கும் பெறுமதி மிக்க தங்கநகைகள் ஏனைய பெறுமதிமிக்க பொருட்கள் மற்றும் பணம் போன்ற திருட்டுக்கள் சம்பந்தமாக பொலிஸ் நிலையங்களுக்கு பெருமளவிலான அறிக்கைகள் கிடைக்கப் பெற்றுள்ளதால் கீழ் வருகின்ற ஆலோசனைகளின் படி செயற்படுமாறு கேட்டுக் கொள்கிறேன் அந்தவகையில்,

கோவிலில் மேலதிகமாக வைத்திருக்கும் பணத்தினை வங்கிக் கிளையில் வைப்பிலிட்டு தேவைகளின் போது மீளப் பெற்றுக் கொள்வதுடன் பின்னர் வங்கியின் பாதுகாப்பு பெட்டகங்களில் சேமித்து வையுங்கள்.

கோவில்களின் பாதுகாப்பிற்காக தேவைக்கேற்ப காவற்காரா ஒருவரை ஈடுபடுத்திக்கொள்ளுங்கள்.



வங்கியில் வைப்பில் இட முடியாத பணத்தை (அன்றாட தேவைக்கான பணம்) மற்றும் தங்க நகைகள் உட்படப் பெறுமதியான பொருட்களை இரும்பு பெட்டகத்தில் வைத்துப் பூட்டி வைக்கவும். அதன் சாவியை பொறுப்பானதும் நம்பிக்கையானதுமான ஒருவரிடம் ஒப்படைக்கவும்.

இரவு நேரங்களில் கோவில் பிரதேசமும் மற்றும் சுற்றுப்பிரதேசமும் தெளிவாக தெரியக் கூடியதாக மின்குமிழ்களைப் பொருத்தவும்.

கோவில்களின் கதவு ஜன்னல் போன்றவற்றை உறுதியாக அமைத்து அதற்கேற்ப பூட்டினைப் பாவித்து அதன் சாவியினை பொறுப்பானதும் நம்பிக்கையானதுமான ஒருவரிடம் ஒப்படைக்கவும்.

பகல், இரவு நேரங்களில் கோவில் உள்ளே அல்லது கோவில் சுற்றுப் புறத்தில் சந்தேகத்திற்கிடமான வாகனம், ஆட்கள் நடமாடினால் அது தொடர்பாக அருகில் உள்ள காவல் நிலையங்களுக்குத் தெரியப்படுத்துமாறு கோவில் சுற்றுப் புறத்தில் வாழ்வோருக்கு அறிவிக்கவும்.

கோவில் திருத்த வேலைகள் அல்லது புதுக் கட்டடம் அமைப்பதற்கான ஊழியர்களை ஈடுபடுத்தும் போது அவர்களது அடையாளம் மற்றும் நம்பிக்கை தொடர்பாக மிகக் கவனமாக இருங்கள்.

அவசர தேவைகளின் போது பொலிஸ் அவசர அழைப்பு இலக்கம் 119 அல்லது அருகில் உள்ள பொலிஸ் நிலையங்களுக்கு உடனடியாக தெரியப் படுத்துங்கள்.

மேற்படி செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துமாறு அவர் அறிவுறுத்தியுள்ளார். (18)

# பார்த்தீனிய ஒழிப்பு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

கைதடி சரஸ்வதி இளைஞர் கழகத்தின் ஏற்பாட்டில் பார்த்தீனிய ஒழிப்பு செயற்பாடுகள் கடந்த சனிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டு இடம்பெற்றுவருகின்றன.

மண்ணுக்கும் மக்களுக்கும் தீங்கு விளைவிக்கும் இப்பார்த்தீனியச் செடிகள் கைதடி பகுதியில் அதிகளவில் வளர்ந்துள்ளதால் அதனை முற்றாக அழிக்கும் நடவடிக்கையில் இப்பகுதி இளைஞர்கள் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இப்பார்த்தீனிய ஒழிப்புச் செயற்பாடு நாளை மறுதினம் வியாழக்கிழமை வரை நடைபெறவுள்ளதுடன் இதில் பொது மக்களையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (51)

# கசூரினா கடற்கரைக்கு செல்லும் வடக்கு வீதியைபுனரமைக்கவும்

## மக்கள் கோரிக்கை

(மண்டைதீவு)

யாழ்.மாவட்டத்தில் அதிகளவான உல்லாசப் பயணிகள் வருகை தரும் காரைநகர் கசூரினா கடற்கரைக்குச் செல்லும் வடக்குப் பக்கமான பிரதான வீதி நீண்ட காலமாக திருத்தப்படா[illegible] மடைந்த நிலையிலேயே காணப்படுவதாக இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

காரைநகர் கசூரினா கடற்கரைக்குச் செல்லும் பிரதான பாதை சீராகவுள்ள நிலையில் இக்கடற்கரைக்கு வடக்காகச் செல்லும் வீதி மிகமோசமான நிலையில் குண்டும் குழியுமாக காணப்படுகின்றது.

மேலும் இவ்வீதி காரைநகர் ஈழத்துச் சிதம்பர ஆலயத்திற்குச் செல்லும் வீதியாகவுள்ளதால் இதனூடாக நாளாந்தம் ஆலயத்திற்கும் கசூரினா கடற்கரைக்கும் அதிகளவான பயணிகள் செல்கின்றனர்.

இந்நிலையில் இவ்வீதி சேதமடைந்திருப்பது போக்குவரத்துக்கு நெருக்கடியாக இருப்பதாகத் தெரிவிக்கும் மக்கள் இவ்வீதியை புனரமைக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றனர். (23)

# மகாத்மா காந்தியடிகளின் 66ஆவது சிரார்த்த தின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

அகிலஇலங்கை காந்தி சேவா சங்கத்தின் ஏற்பாட்டில் மகாத்மா காந்தியடிகளின் 66 ஆவது சிரார்த்த தினமும் நினைவுப் பேருரையும் நாளை மறுதினம் வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இல 774 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள சங்கத்தின் யாழ்.மாவட்ட பணிமனையில் நடைபெறவுள்ளது.

அகிலஇலங்கை காந்தி சேவா சங்கத் தலைவர் தி.இராசநாயகம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் மு.ப 10 மணிக்கு காலை நிகழ்வுகள் ஆரம்பமாகும். இக்காலை நிகழ்வு யாழ்.மாவட்ட காந்தி சேவா சங்கத்தலைவர் கா.கார்த்திகேசுவின் ஒழுங்குபடுத்தலில் யாழ். போதனா வைத்தியசாலைக்கு முன்பாகவுள்ள காந்தி திருவுருவச்சிலைக்கு மலர்மாலை அணிவித்து மலர் அஞ்சலி செலுத்தும் நிகழ்வு இடம்பெறும்.

பிற்பகல் 3.30 மணிக்கு ஆரம்பமாகும் மாலை நிகழ்வில் "சமகாலக் கல்வியில் காந்தியச் சிந்தனைகள்" நினைவுப் பேருரையை யாழ்.பல்கலைக்கழக ஓய்வுநிலைப் பேராசிரியர் மா.சின்னத்தம்பி வழங்கவுள்ளார்.

தொடர்ந்து காந்தீயம் பத்திரிகை வெளியீட்டு விழாவும் இடம்பெறவுள்ளது. இதில் நூல் வெளியீட்டுரையை சங்கத்தின் சிரேஸ்ட தலைவர் சோ.க.தம்பிப்பிள்ளை, விமர்சன உரையை யாழ்.பல்கலைக்கழக மெய்யியல்துறை விரிவுரையாளர் ந.சிவகரன் ஆகியோர் வழங்கவுள்ளனர். தொடர்ந்து 2013ஆம் ஆண்டு காந்தி ஜெயந்தி கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

# குஞ்சுக்குளம் கிராமத்துக்கு கிடைக்குமா மின் விநியோகம்

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட யோகபுரம் மத்தி குஞ்சுக்குளம் கிராமத்திற்கு இதுவரை மின்சார விநியோகம் வழங்கப்படாமையால் தமது வாழ்க்கை இருளிலே கழிவதாக இக்கிராம மக்கள் கவலையுடன் தெரிவிக்கின்றனர்.

யுத்த அனர்த்தங்களினால் இடம்பெயர்ந்த நிலையில் இக்கிராம மக்கள் சொந்த இடத்தில் மீள்குடியேறி 4 வருடங்கள் கழிந்துள்ள நிலையில் இதுவரை மின்சார விநியோகம் வழங்கப்படவில்லை எனவும் இதனால் தமது அன்றாடச் செயற்பாடுகள் கல்வி நடவடிக்கைகள் என்பன வெகுவாகப் பாதிக்கப்படுவதாக கிராம மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதேவேளை இக்கிராமத்திலிருந்து 100 மீற்றர் தொலைவில் மின்கம்பங்கள் நடப்பட்டுள்ள போதிலும் இதுவரை இக்கிராமத்திற்கு மின்சார இணைப்புக்கள் வழங்கப்படவில்லை எனவும் இது தொடர்பில் உரிய அதிகாரிகளுக்கு பல முறை தெரிவித்தும் எவ்வித பயனும் கிடைக்கவில்லை எனவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே தமது நன்மைகருதி மின்சார விநி யோகத்தை வழங்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இக்கிராம மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (140)

# கட்றின் திட்டம் குறித்து மீளாய்வுக் கூட்டம்

கரைச்சி பிரதேச செயலகப் பிரிவில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழான கட்றின் திட்டம் தொடர்பான மீளாய்வுக் கூட்டம் நாளை புதன்கிழமை மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் காலை 9 மணிக்கு நடைபெறுமென பிரதேசசெயலர் கோபாலபிள்ளை நாகேஸ்வரன் அறிவித்துள்ளார்.

கட்றின் திட்டத்தின் கீழ் செயற்படுகின்ற கிராம மட்ட அமைப்புக்கள், பயிற்சி பெற்றவர்கள் ஆகியோரை தவறாது இக் கலந்துரையாடலில் பங்கேற்குமாறு பிரதேசசெயலர் அறிவித்துள்ளார். (90)







பருத்தித்துறை தம்பசிட்டி மெ.மி.த.க.பாடசாலை வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதையும், இளைப்பாறிய அதிபர் எஸ்.இராமஜெயம் மங்கள விளக்கேற்றுவதையும் வடமராட்சி வலய பிரதிக்கல்விப்பணிப்பாளர் எஸ்.இரவீந்திரன் மாணவனுக்கு பரிசில் வழங்குவதையும் காணலாம். (01)

எப்போதும் அச்சத்தில் இருப்பதை விட ஆபத்தை ஒருமுறை சந்திப்பதே மேல். - டெஸ்கார்டஸ்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## அவலத்தில் பெறும் அரசியல் வாழ்வு

இந்த வருச ஜெனீவாத் திருவிழாவும் இதோ வந்துவிட்டது. சப்பறங்கள் சிகரங்கள் கட்டி, உள்ளூர் ஊடகங்களின் மேளச் சமா, புலம்பெயர் அமைப்புகளின் வாணவேடிக்கைகள், இந்தியாவிலிருந்து சின்னமேளம், மற்றும் வெளிநாடுகளிலிருந்து பாட்டுக் கோஷ்டி என திருவிழா முடியுமட்டும் தமிழ்மக்கள் பரபரப்பாக இருக்கப்போகிறார்கள்.

வருசா வருசம் இந்தத் திருவிழாவை வடிவாய்ச் செய்துவிட்டால், எங்கள் வாழ்வுக் கஷ்டங்கள் தீர்ந்துவிடும் என்று அவர்களும் தொடர்ந்து நம்பவைக்கப்பட்டு வருகிறார்கள். கடைசியாக மேடையேறப்போகும் சர்வதேசப் பாட்டுக் கோஷ்டியினர் நாம் விரும்பும் பாட்டுகளைப் பாடினார்கள் என்றால் கேட்டுப் புல்லரித்துக் கொள்ளலாம் என்றும் காத்திருக்கிறார்கள்.

ஜெனீவாவில் இலங்கை அரசை சர்வதேச விசாரணைக்கு உட்படுத்த வகைசெய்யக் கூடியதாக் அமெரிக்கா கொண்டுவரும் பிரேரணை வெற்றிபெறும் என்றும் சொல்லப்படுகிறது. சரி, அதன்பிறகு என்ன? இலங்கை அரசு விசாரணைக்கு உட்படுவதன் மூலம் இந்த நாட்டின் இனப்பிரச்சினைக்கு என்ன தீர்வு வரும்? தனிநாடா? சமஷ்டியா? வடக்கு கிழக்கு இணைந்த தன்னாட்சி அலகா?

தமிழ்த் தரப்பிலிருந்து சர்வதேசத்தினர் ஏற்றுக்கொள்ளக் கூடியதான கோரிக்கை திட்டவரைவு ஏதேனும் முன்வைக்கப்பட்டிருக்கிறதா?

பெரும்பான்மைத் தமிழ் மக்களாற் தெரிவு செய்யப்பட்ட தலைவர்கள் ஒருமித்து நாட்டிலுள்ள அனைத்து இனமக்களினதும் அரசியல் சமூக சக்திகளின் பார்வைக்கும் கருத்துக்கும் இலங்கைத் தமிழர்களின் நியாயமான அரசியல் அபிலாஷைகள் என்னென்ன? அவற்றைத் திருப்திப் படுத்தும் வகையான குறைந்த பட்ச அரசியற் கோரிக்கைகள் என்னென்ன? என்பதை தெளிவாக முன்வைத்திருக்கிறார்களா?

இன்றைய நிலையில் இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வாக என்ன திட்டத்தை தமிழ்த் தலைவர்கள் முன் வைத்திருக்கிறார்கள்; எவ்வாறானதொரு அரசியற் தீர்வை எதிர்பார்த்திருக்கிறார்கள் என்று தெரியாமல் இந்தியாவோ ஏனைய வெளிநாட்டு சக்திகளோ எதைப் பேசச் சொல்லிக் கேட்பது?

பெரும்பான்மையான தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தலைவர்கள் நியாயமான கோரிக்கைகளைத்தான் முன்வைக்கிறார்கள் என்று கருதவும் அதற்கு ஆதரவு தரவுமான நிலைமை உள்நாட்டிலும் வெளியிலும் ஏற்பட்டால்தான் அது ஏதாவது முன்னேற்றங்களை இலங்கையின் அரசியலில் ஏற்படுத்தும்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பினரோ தாங்கள் தமிழ்த் தாயகத்தை மீட்கவும்; அதன் சுயநிர்ணய உரிமைகளை வென்றெடுக்கவுமே தேர்தல்களில் போட்டியிடுவதாகவும், அதற்காக மட்டுமே தமிழ் மக்களிடம் வாக்குகளை அள்ளிப் போடும்படி கேட்பதாகவும் மேடைகளிலும் பத்திரிகை அறிக்கைகளிலும் கூறுவதோடு நிறுத்திக்கொள்கிறார்கள்.

அவர்களுக்குள்ளே நிலவும் ஒற்றுமையின்மையும்; தங்களுக்குள்ளே இருக்க வேண்டிய ஒற்றுமையை நிலைநாட்டும் வகையாக முடிவெடுத்துச் செயற்படும் திராணியின்மையுமே இன்று சாத்தியமான தீர்வை அவர்கள் சொல்லமுடியாமைக்குக் காரணம்.

அத்துடன், நியாயமானதொரு திட்டத்தை வெளியிட்டால் புலம்பெயர் தீவிரவாதிகளின் எதிர்ப்புகளுக்கும் நாட்டிலுள்ள தமிழ்த் தாயகத் தீவிரவாதிகளின் விமர்சனத்துக்கும் உள்ளாக வேண்டி ஏற்படுமோ என்ற கிலேசமும் அவர்களை வெளிப்படையாக செயற்பட முடியாமல் ஆக்கி வைத்திருக்கிறது,

இதையெல்லாம் மீறிச் செயற்பட்டால் பணவருகைக்குப் பங்கம் ஏற்படுவது மட்டுமல்ல, அடுத்த தேர்தலின் வெற்றியை அது பாதித்து விடும் என்ற கலக்கத்திலேயே அவர்கள் இருக்கிறார்கள். இவையே த.தே.கூவின் அரசியல் இயலாமைக்கான காரணங்கள் என்பது தெளிவு.

இந்நிலையில், தமிழர்கள் அநுபவித்து வரும் அவல நிலைகளே கூட்டமைப்பினரின் அரசியல் வாழ்வைக் காப்பாற்றி வருகிறது; அதுபோதும் என்று அவர்கள் செயற்படுகிறார்கள்.

- ஆசிரியர்.

# ஜனாதிபதிக்கு எதிராக தேர்தலில் போட்டியிட எதிர்க்கட்சியில் ஒரு வேட்பாளர்கூட இல்லை

### என்கிறார் பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சர்

ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக போட்டியிட எதிர்க்கட்சியில் வேடபாளர்கூட இல்லை என பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் தெரிவித்துள்ளார்.

காத்தான்குடி மத்திய மகா வித்தியாலய தேசிய பாடசாலைக்கு விடுதிக்கட்டடத்தை நிர்மாணிப்பதற்கான அடிக்கல் நாட்டி வைக்கும் வைபவம் நடைபெற்றபோது அங்கு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், உலகம் முழுவதும் சிறுபானமை மக்களுக்கு பிரச்சினையாகவே உள்ளது. அதிலும் குறிப்பாக வெளிநாட்டு சக்திகள் முஸ்லிம் நாடுகளின் பொருளாதாரத்தை பலவீனப்படுத்துவதிலும் முஸ்லிம் நாடுகளில் பிரச்சினைகளை ஏற்படுத்துவதிலும் கங்கணம் கட்டி செயற்பட்டு வருகின்றன.

மத்திய கிழக்கு நாடுகளில் பலமாக இருந்த முஸ்லிம் நாடுகளான ஈராக், எகிப்து, சிரியா, உட்பட லிபியா போன்ற நாடுகளில் இன்று நாளுக்கு நாள் முஸ்லிம்கள் அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

ஈராக்கில் நாளுக்கு நாள் குண்டு வெடிப்புக்கள் இடம் பெற்றுக்கொண்டே இருக்கின்றன. பலமான முஸ்லிம் அரசுகளை இந்த வெளிநாட்டு சக்திகள் பலவீனப்படுத்தி நலிவுறச் செய்யும் வேலைத்திட்டத்தினை அரங்கேற்றி வருகின்றார்கள். அமைதியாக இருந்த முஸ்லிம் நாடுகளில் மிக மோசமான பிரச்சினைகளை ஏற்படுத்தி அங்கு இன்று கலவரங்களை தோற்றுவித்துள்ளனர்.

இந்த வகையில் இலங்கையிலும் முஸ்லிம்களுக்கெதிரான பிரச்சினைகளை மேற்கொள்வதற்கு பௌத்த தீவிரவாத சக்தியான பொதுபலசேனாவுக்கு வெளிநாட்டு சக்திகள் உதவி வருகின்றன.

இலங்கையில் முஸ்லிம்களுக்கும் சிங்கள மக்களுக்குமிடையில் பிரச்சினைகளை ஏற்படுத்துவதற்கும், முஸ்லிம்களை பலவீனப்படுத்துவதற்கும், அரசாங்கத்திற்கும் முஸ்லிம்களுக்குமிடையில் பிரச்சினைகளை தோற்றுவிப்பதற்கும் இந்த சக்திகள் செயற்பட்டு வருகின்றன.

இந்த சூழ் நிலையில் முஸ்லிம் சமூகத்தின் தலைமைகள் சமூக நலன் விரும்பிகள், முஸ்லிம் சமூகம் மற்றும் முக்கியஸ்தர்கள் ஒன்றுபட்டு பிரச்சிகைளை பேசித்தீர்த்துக் கொள்ள வேண்டும்.

இன்றுள்ள அரசியல் சூழ் நிலையினை நாம் தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்திற்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையையும் தாண்டி 165 நாடாளுமன்ற உறுப்பினர்கள் உண்டு.

நமக்குள் எந்த பிரச்சினை ஏற்பட்டாலும் நாம் அவற்றை பேசித்தீர்த்துக்கொள்ளவேண்டும்.

இன்று மாணவிகள் கல்வியில் அதிக அக்கறை காட்டுவது போன்று ஆண் மாணவர்கள் கல்வியில் அக்கறை செலுத்துவதில்லை.

60 தொடக்கம் 65 வீதம் வரையிலான பெண்கள் கல்வியில் அக்கறை செலுத்துவதுடன் 35 வீத ஆண்களே கல்வியில் அக்கறை காட்டுகின்றனர். முஸ்லிம் சமூகத்தின் மத்தியிலும் இந்த நிலைதான் காணப்படுகின்றது. ஆண்களின் கல்வி குறைவடைந்து செல்லும் அதே நிலையில் பெண்கள் கல்வியில் முன்னேற்றமடைந்துள்ளனர் என்றார்.

# சொத்து விபரம் வெளியிட்டாலே வேட்பாளர் அனுமதி அட்டை

### தேர்தல்கள் ஆணையாளர் அறிவிப்பு

சொத்து விபரங்களை வெளிபடுத்தாத வேட்பாளர்களுக்கு அவர்களுக்கான வேட்பாளர் அனுமதி அட்டைகள் வழங்கப்படமாட்டாது என்று தேர்தல்கள் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

இந்த வேட்பாளர் அனுமதி அட்டைகள் இன்றி அவர்களுக்கு வாக்கெண்ணும் மத்திய நிலையங்களுக்கு செல்ல முடியாது.

இந்த நிலையில், வேட்பாளர்கள் தமது சொத்து விபரங்களை வெளியிடாத வேட்பாளர்களுக்கு இந்த அனுமதி அட்டை வழங்கப்படமாட்டாது என்றார்.

இதேவேளை கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற கட்சியின் செயலாளர்களுடனான சந்திப்பின்போது, வேட்புமனுத்தாக்கல் செய்யும் வேட்பாளர்கள் அனைவரும் தமது சொத்து விபரங்களை தேர்தல்கள் செயலகத்திற்கு வெளிப்படுத்த வேண்டும் என்று தேர்தல்கள் ஆணையாளர் குறிப்பிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இலங்கையில் வருடாந்தம் 2 ஆயிரம் தொழுநோயாளர்கள்

### தொழுநோய் தடுப்புத்திட்ட பணிப்பாளர் தகவல்

இலங்கையில் வருடாந்தம் இரண்டாயிரம் தொழுநோயாளர்கள் அடையாளம் காணப்படுவதாகவும் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது இது மிகப் பெரிய எண்ணிக்கை என சுகாதார அமைச்சின் தொழுநோய் தடுப்பு திட்டத்தின் பணிபபாளர் மருத்துவர் நிலாந்தி பெரணான்டோ தெரிவித்துள்ளார்.

உலக தொழுநோய் தினத்தை முன்னிட்டு பொலநறுவை வைத்தியசாலையில் நேற்று நடைபெற்ற வைபவத்தில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கை மக்களில் ஒரு இலட்சம் பேருக்கு 10 தொழுநேர்யாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர் எனவும் அவர் கூறினார்.

ஒரு வருடத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழுநேர்யாளர்கள் அடையாளம் காணப்படுவது என்பது கவனத்தில் கொள்ளப்படவேண்டிய விடயம்.

தொழுநோயாளர்கள் அதிகளவில் அடையாளம் காணப்படும் நாடுகள் வரிசையில் இலங்கை 16 ஆவது இடத்தில் உள்ளது.

இலங்கையில் 2013 ஆம் ஆண்டு 2 ஆயிரத்து 32 தொழுநோயாளர்கள் அடையாளம் காணப்பட்டனர். இவர்களில் 177 பேர் சிறுவர்கள்.

இலங்கையில் 11 மாவட்டங்களில் அதிகளவான தொழுநோயாளர்கள் இருப்பதுடன் மேற்கு, கிழக்கு மற்றும் தென் மாகாணங்களில் அதிகளவானோர் இருப்பதாக கண்டறியப்பட்டுள்ளது.

தொழுநோய் என்பது முற்றாக குணப்படுத்தக்கூடிய நோயாகும். இதனால் நோயை ஆரம்பத்திலேயே கண்டறிய வேண்டும். 6 மாதம் அல்லது ஒரு வருடம் தொடர்ந்தும் சிகிச்சை பெற்றால் நோயை முற்றாகக் குணப்படுத்தி கொள்ள முடியும் என்றார்.

# ஒற்றுமையை சீர்குலைப்பதே மேற்குலக நாடுகளின் தேவை

### அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவிப்பு

இலங்கை மக்களின் ஒற்றுமையை சீர்குலைப்பதே மேற்குலக நாடுகளின் தேவையாகவுள்ளது என அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

அதுருகிரியவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் கடுவெல பிரதிநிதிகள் மாநாட்டின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எம்மீது பொய்யான குற்றச்சாட்டுக்களை சுமத்துகின்றனர். மனிதாபிமான நடவடிக்கையின் போது ஆயிரக்கணக்கான மக்கள் உயிரிழந்தார்கள் என குற்றஞ்சாட்டுகின்றனர்.

எமக்கு ஆலோசனை வழங்கும் மேற்குலக நாடுகள் ஆட்சி நிலவிய பகுதிகளில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருந்தால் சரணடைந்த 12 ஆயிரம் பேரின் தலைமுடி கூட எஞ்சியிருக்காது. இந்த 12 ஆயிரம் புலி உறுப்பினர் களும் சாதாரண மக்கள் இல்லை. அவர்கள்மீது ஏன் வழககு தாக்கல் செய்யவில்லை என தற்போது கேட்கின்றனர்.

சர்வதேச நாடுகளின் நிகழ்ச்சி நிரலுக்கு அமையவே எமது நாடடின் எதிர்க்கட்சியினர் தற்போது செயற்படுகின்றனர் என்றார்.

"இலங்கைச் சரித்திரத்தை மீளப் பக்கச் சார்பின்றி எழுத வேண்டும்" பன்னாட்டுத் தொண்டு நிறுவனம் ஒன்றின் சிறுவர் கிராம ஆரம்ப விழாவில் வடக்கு முதலமைச்சர் பேசிய பேச்சிற்கு, அண்மையில் உதயன் இப்படித் தான் தலையங்கம் தீட்டியுள்ளது. உள்ளடக்கத்தில் இது பிழையான கூற்று அல்ல, இன நல்லுறவுகள் திருப்திகரமாக இல்லாத இன்றைய சூழ்நிலையில் இப்படியான கூற்றுக்களின் பின் விளைவுகள் பற்றியும் சிந்திக்க வேண்டிய காலமிது.

பிரமுகர்களின் பேச்சுக்களை திரித்துக்கூறி இலாபத்தைப் பெருக்கும் பத்திரிகையாளர்



# வரலாற்றிலிருந்து பாடம் கற்கவேண்டும்

கடந்த கால வரலாற்றை விஞ்ஞான பூர்வமான ஆய்வுடன் அணுகி தொடர்ந்து பயணிக்க வேண்டும். வரலாற்றுப் பாடத்தைத் திருத்த முன்னர் வரலாற்றில் இருந்து பாடம் கற்க வேண்டும். 1948 இல் ஒரு கொடியின் கீழ் இணைந்த நாம், பின்னர் எமது சிநேக முரண்பாடுகளை இராணுவ முரண்பாடுகளாக மாற்றினோம். இதற்குப் பாராளுமன்ற அரசியல் நடத்தியோர் எல்லோரும் பதில் கூற வேண்டும். இறுதி யுத்தத்திற்கு நாம் கொடுத்த விலைகள் மதிப்பிட முடியாதது. எமது பிரச்சினைகளில் சர்வதேச நாடு-களைச் சம்பந்தப்பட வைத்துள்ளோம். இவை எல்லாம் சுளகால் மறைக்கப்படக் கூடிய விடயங்கள் அல்ல. ஏனைய இனங்களைப் புறக்கணித்து இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்த முடியாது என்பதைச் சிங்கள மக்கள் புரிய வேண்டும். தமிழ் மக்களும் தாம் தனித்து வாழ முடியாது என்பதைப் புரிய வேண்டும். இந்தப் புரிந்துணர்வின் அடிப்படையில் நாமே எமது பிரச்சினையைத் தீர்க்க வேண்டும். "அழுதழுதும் பிள்ளை அவளே பெற வேண்டும்".

## ஸ்ரீபதி கட்டுரையிலிருந்து

களும் இன்று பரவலாக உள்ளனர். எரிகிற வீட்டில் பிடுங்கியது இலாபம் என்று செயற்படும் இவர்கள் பற்றியும் அவதானமாக இருக்க வேண்டும்.

முன்னெச்சரிக்கை இன்றிப் பேசும் பேச்சுக்கள் பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் மாறிய கதையாகிவிடும். பிழையான நேரத்தில் கூறப்படுகின்ற சரியான கூற்றுக்களும் பிழையான விளைவுகளையே தரும். ஒற்றையாட்சி சமஷ்டி என்ற சொற்களின் அர்த்தத்தை சாதாரண இலங்கை மக்கள் சரியாக விளங்கவில்லை.

மொழிப் பிரச்சினை மேற்கிளம்பிய காலத்தில் 1950 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட "கல்வி தின" விழாவில் உரையாற்றும் பொழுது அமரர் கு.நேசையா சமூகங்களுக்கிடையிலான புரிந்துணர்வு தொடர்பாக பின்வருமாறு கூறியிருந்தார், "கடந்த கால விசுவாசங்களிலிருந்து (Loyalties) இலகுவாக மாறுதல் என்பது ஆபத்தான நிலையையும் கொண்டுவரும். அதுவே எமது தேசிய இனம் சிறப்புரிமைகள் பூண்ட பல்வேறு சமூகங்களின் தொகுப்பு என்ற ஏமாற்றந்தனமான கோட்பாடாகும்".

இவர் தேசிய இனம் என்று குறிப்பிட்டது இலங்கையர் என்ற குடியியல் (Civil) தேசியத்தையாகும். மக்களை இறந்த காலக் கற்பனைகளுக்கு அழைத்துச் சென்று மயக்கத்தில் வைத்து வாக்கு வேட்டையாடுவோரையே அவர் சாடுகின்றார். இனங்களின் சனநாயக உரிமை (Democratic rights) வேறு, இனமேலாதிக்க உணர்வு (Hegemony) வேறு என்பதும் புரிந்து கொள்ளப்பட வேண்டும்.

அந்த இறந்த காலக் கற்பனை துட்டகாமினி காலமாக இருந்தாலும்கரிகாலச் சோழன் காலமாக இருந்தாலும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் தான். அவர் கூறிய காலத்தில் வலுப் பெறத் தொடங்கிய கோட்பாடுகளின் பலாபலன்களை 60 ஆண்டுகளாக அனுபவித்துவிட்டோம். இன்று சர்வதேசத்தைப் பார்த்து வாய் பிளந்து கொண்டு நிற்கின்றோம்.

அமரர் நேசையா யாழ்ப்பாண வாலிபர் காங்கிரசில் (Jaffna Youth Congress) அரசியலை ஆரம்பித்தவர். தமிழரசுக் கட்சியின் ஆதரவாளராக இருந்துள்ளார். தமிழரசுக்கட்சி தனி நாட்டுக் கோரிக்கையின் பின்னால் இழுபட்டவுடன் அரசியலில் இருந்து ஒதுங்கிக் கொண்டவர். தென்னிலங்கையும் போற்றிய கல்வியியலாளர் இவர். இதனால் இவருடைய கருத்துக்கள் பெறுமதியானவையாகும்.

தமிழ் தரப்பினர்,தமது இழந்த உரிமைகளைப் பெறுவதில் பல தடவைகளில் தந்திரோபாயத் தவறுகள் (Tactical) இழைத்துள்ளனர். அவை பற்றியும் தெரிந்தால் தான் எதிர்காலப் பாதையைச் செப்பமானதாய் அமைக்க முடியும்.

1957இல் இனப்பிரச்சினைத் தீர்வையும் உள்ளடக்கிய பண்டா-செல்வா ஒப்பந்தம் எழுதப்பட்டிருந்தது. இவ் ஒப்பந்தத்திற்கு எதிராகப் பாரிய எதிர்ப்புணர்வு தென்னிலங்கையில் உருவாக்கப்பட்டிருந்தது. ஒப்பந்தத்திற்கெதிராக அமரர் ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமையில் கொழும்பில் இருந்து கண்டிக்கு பாத யாத்திரையொன்றுஒழுங்கு படுத்தப்பட்டிருந்தது. மனப்பூர்வமாக எழுதப்பட்ட ஒப்பந்தம் முறிவடையும் ஆபத்தை நெருங்கிக் கொண்டிருந்தது.

இந்தச் சூழ்நிலையில் தமிழரசுக் கட்சியினால் சிங்கள "சிறி" எழுத்துக்களுக்கு தார் பூசும் போராட்டம் ஆரம்பமானது. வாகனங்களுக்கான எண் குறியீட்டில்ஏற்கனவே நடைமுறையில் இருந்த ஆங்கில எழுத்துக்கள் முடிவடைய சிங்கள "சிறி" போடும் நடைமுறை தொடங்கப்பட்டிருந்தது. இது பொருத்தமான நடைமுறைதான். ஒரு நாட்டிற்குள் ஒரு தொடரில் தானே எண்குறியீடுகள் எழுதப்படலாம். தமிழ் எழுத்தென எம்மால் அழைக்கப்படும் வட மொழி ஸ்ரீ யையும் போடுமாறு போராடினோம் நாம். இது பண்டா-செல்வா ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படாத விடயமாகும். ஸ்ரீ போராட்டத்தை தீவிரப்படுத்திச் சிங்களப் பேரின வாதிகளின் போராட்டத்திற்கு வலுவூட்டினோம். ஒப்பந்தம் கிழித்தெறியப் பட்டது.

மூன்று தசாப்தங்களின் பின்னரும் இதே போன்ற தவறு விடப்பட்டது. 1987 இல் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் மாகாண சபை முறைமை மூலம் அதிகாரப்பரவலாக்கல் முறை கொண்டுவரப்பட்டது. தென்னிலங்கையிலிருந்து கிளம்பிய பாரிய எதிர்ப்பின் மத்தியில் இவ் ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்டது. வடக்கு-கிழக்கு மாகாணசபை உருவாக்கப்பட்டிருந்தது. இனப்பிரச்சினை தொடர்பாக இற்றை வரை மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் உருப்படியானது இது தான். மாகாண சபையை உயிர்ப்பானதாக அமையக் கூடிய சர்வதேச சூழலும் அமைந்திருந்தது. இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை ஆரம்பம் முதல் எதிர்த்து வந்தவர் அமரர் பிரேமதாசா. அவர் தலைமையிலான ஐ.தே.க அரசுடன் இணைந்து அன்றைய வடக்கு கிழக்கு மாகாண சபை கலைக்கப்பட உடந்தையாய் இருந்தனர் LTTE இனர். பின்னர் சந்திரிகா அரசினால் முன்மொழியப்பட்ட "தீர்வுப் பொதி" கண்டு கொள்ளப்படாமலே எம்மால் நிராகரிக்கப்பட்டது. LTTE இன் கூட்டமைப்பு மீதான செல்வாக்கு இதற்குக் காரணமாயிருந்தது.

இன்று அரசியல் தீர்வு தொடர்பாக அரசினால் பாராளுமன்றத் தெரிவுக் குழு முறைமை முன்மொழியப்பட்டுள்ளது. இம் முறை தர்க்கரீதியானது தான். இருந்தாலும் இதில் பங்கு பற்ற கூட்டமைப்பினர் தயக்கம் காட்டுகின்றனர். இத்தயக்கம் நியாயமற்றது என்று கூற முடியாது. ஏற்கனவே பேச்சுவார்த்தைகளினால் ஏமாந்த அனுபவமும் அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரணவின் தலைமையில் நீண்ட காலம் இயங்கிய அனைத்துக் கட்சிக் குழு அறிக்கைக்கு நடந்த கதியும் கசப்பானவைதான்.

"சிறுவர் விளையாட்டுக்களின்" போது குறும்புக்காரச் சிறுவர் ஒரு விதமான தந்திரத்தைக் கையாளுவர். ஆட்டம் தமக்கு வாய்பானதாக இல்லாதபோது ஒரு விதமாக "அளாப்பி" ஆட்டத்தைக் குழப்பிவிட்டுத் திருப்பத் தொடங்குவர். அப்படியான தந்திரமோ என்று சந்தேகப்படுவதிலும் நியாயம் இல்லாமலில்லை. அனுபவசாலியான போராசிரியர் திஸ்ஸ விதாரணவின் பெயரும் தெரிவுக்குழுவில் இடம்பெறவில்லை. பேரின வாதிகளின் ஆதிக்கம் தான் அரசில் உள்ளது போல் உள்ளது.

அவர்களுடைய தாளத்திற்கு ஆடும் அமைச்சர்கள் தான் பெரும்பான்மையாக உள்ளனர். இவர்களைமீறக்கூடிய துணிவு சனாதிபதிக்கு உள்ளது என்று கூற முடியாதுள்ளது.

தமிழர் தரப்பில் கூட்டமைப்புக்கு உள்ளும் வெளியும் உள்ள பலர் சர்வதேசம் தீர்வைத் தரும் என்று நம்புகின்றனர். ஏனையோரையும் நம்ப வைக்கப் பாடுபடுகின்றனர். ஏற்கனவே எம்மால் விடப்பட்ட தந்திரோபாயத் தவறுகட்கு நாம் மேலைத் தேசத்தில் வைத்த குருட்டு விசுவாசமே காரணம் என்ற உண்மையை மறைக்கின்றனர். இறுதிப் போரிலே LTTE இனர் முள்ளிவாய்க்காலில் கைவிடப்பட்டமை ஒரு விபத்து மட்டுமே என்று நினைக்கின்றனர் போல் உள்ளது. பிரச்சினை வரலாற்று அடிப்படையில் புரிந்து கொள்ளப்படவில்லை.

முற்கோபியான கணவனையும் வாய்க்காரியான மனைவியையும் கொண்ட குடும்பத்தின் பிரச்சினையை ஒத்ததாக எமது நாட்டு இனப் பிரச்சினை உள்ளது. கணவனின் அடி உதையாலும், மனைவியின் வாயாலும் பிரிவின் எல்லைக்குச் சென்ற குடும்பத்தில் நீண்ட காலத்தின் பின் பிறந்த குழந்தையாக "மாகாண சபை" பிறந்துள்ளது. பிள்ளையைக் கவனமாக வளர்த்தெடுக்கும் பொறுப்பில் தாய் தந்தையர் இணைந்து கொள்வர் என்ற எதிர்பார்ப்பு நியாயமானதே. மாகாண சபையைத் திறம்பட நடத்த மத்தியஅரசுடன் இணங்க வேண்டும்மென்ற கருத்தை கூட்டமைப்பின் மாகாண சபை உறுப்பினர் சித்தார்த்தன் வெளிப்படுத்தியுள்ளார். வரவேற்கத்தக்கது.

அரசும் கூட்டமைப்பும் நல்லிணக்கமான முறையில் மாகாணசபையில்இணைந்து செயற்படுதல். இன நல்லிணக்கத்தின் முதற்படியாக அமையலாம்அந்நியோன்யமான செயற்பாட்டின் ஊடாக நல்லெண்ணம் வளர்க்கப்படவேண்டும். அப்போது தான் இரண்டு தரப்பாரிடமிருந்தும் நெகிழ்ந்து கொடுக்கும் தன்மை உருவாகும். படிப்படியான நெகிழ்ச்சிப் போக்கின்தொடர்ச்சியாகத் தான் "இயங்கக் கூடிய பாராளுமன்றத் தெரிவுக் குழுவை" உருவாக்க வழி பிறக்கும்.

மூன்றாம் தரப்பு ஒன்று வசதி செய்வோராக (Facilitator) அமையலாம். அந்த வசதி செய்வோர் குழு எமது நாட்டில் இருந்தும் உருவாக முடியும். இனப்பிரச்சினையின் ஆரம்பம் முதலே நிதானமான போக்கைக்கடைப் பிடிக்கும் புத்திஜீவிகள் பலர் உள்ளனர். இடதுசாரி அரசியல்வாதிகள் உள்ளனர். அமைச்சர் ராஜித சேனாரத்தின போன்ற நிதானமான சிந்தனையுள்ளவர்கள் அரசிலும்கூட உள்ளனர். இவர்களுடைய ஒன்றிணைந்த செயற்பாடு இல்லாமல் இனவாதிகளிடமிருந்து எமது நாட்டைக் காப்பாற்ற முடியாது.

இன்று பாராளுமன்றத் தெரிவுக்குழு வெற்றிகரமாக இயங்கக்கூடிய சூழல் இல்லை. "இயங்கு நிலையில் உள்ள பாராளுமன்றத் தெரிவுக் குழு" ஒன்று உருவாக்க கூடிய சூழலை அபிவிருத்தி செய்ய வேண்டும். நாட்டுப் பற்றுள்ள இனவாதக் கண்ணோட்டமற்ற சுயாதீனமாக இயங்கக் கூடிய அமைப்பு ஒன்று கட்டமைக்கப்படுவது காலத்தின் கட்டாயமாகும்.

# இலங்கை மீது போர்க்குற்றம் சுமத்தும் நாடுகள் மீது விசாரணை

## ஐரோப்பிய மனித உரிமை அமைப்பு தீர்மானம்

இலங்கைக்கு எதிராகப் போர்க் குற்றச்சாட்டுகளைச் சுமத்தும் நாடுகள் இழைத்திருக்கும் போர்க் குற்றச்சாட்டுகள் தொடர்பிலும் விசாரணை நடத்தப்பட வேண்டும் எனும் பிரேரணையொன்றை ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிப்பதற்கு ஐரோப்பிய மனித உரிமைகள் அமைப்பு தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவா நகரில் நடைபெறவிருக்கும் 25 ஆவது கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்படவுள்ள யுத்த முறைப்பாடுகளை சமர்ப்பித்துள்ள நாடுகளை முதலில் விசாரிக்க வேண்டுமென ஐரோப்பிய மனித உரிமைகள ஆணைக்குழு ஜேர்மன் நாட்டு ஆலோசகர் அன்ரென்ஸ் சுக்லர் தெரிவித்துள்ளார்

இலங்கையில் நடை பெற்றதாகச் சொல்லும் போர்க் குற்றம் பற்றி விமர்சிக்கும் விசாரணைக்கு அழுத்தம் கொடுக்கும் பிரித்தானியா கடந்த காலத்தில் அவர்கள் மேற்கொண்ட போர்க் குற்றங்களையும் விசாரணை செய்ய வேண்டுமெனத் தெரிவிததுள்ளார்.

மேலும் 2003-2008 காலப் பகுதியில் ஈராக்கிற்கு எதிராக பிரித்தானியா மேற்கொண்ட போர்க் குற்றங்கள் சம்பந்தமாக உள்நாட்டிலோ அல்லது வெளிநாட்டிலோ எந்தவித நடவடிக்கையும், விசாரணையும் எடுத்ததாகத் தெரியவில்லை. அப்படியானால் இலங்கைக்கு மாத்திரம் ஏன் இந்தப் பாரபட்ச அழுத்தம் என்றும் சுக்லர் கேள்வி எழுப்பியுள்ளார்.

# இரண்டாம் மொழித்தேர்ச்சிக்கு விசேட புள்ளி வழங்கத்திட்டம்



தமிழ் அல்லது சிங்கள மொழிகளில் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு, அந்த மொழியானது அவர்களின் தாய்மொழி அல்லாதவிடத்து பல்கலைக்கழகத்துக்கு தெரிவாகும் போது மேலதிக புள்ளிகளைப் பெற்றுக்கொள்வதற்கான அமைச்சரவை அங்கீகாரத்தினை உயர்க்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்கா கோரியுள்ளார்.

அதாவது, கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் தமிழ் மாணவரொருவர் அவருக்கு இரண்டாம் மொழியான சிங்கள மொழியில் தேர்ச்சி பெற்றாலோ அல்லது சிங்கள மாணவரொருவர் அவருக்கு இரண்டாம் மொழியான தமிழ் மொழியில் தேர்ச்சி பெற்றாலோ அதற்காக பல்கலைக்கழக நுழைவின் போது அவர்களுக்கு விசேட புள்ளிகள் வழங்கப்படும். இதன் பிரகாரம் சாதாரண தரத்தில் இரண்டாம் மொழிக்கு "ஏ" தரம் பெற்றால் அதற்காக 5 புள்ளிகள் வழங்கப்படும். அத்துடன், "பி" தரத்துக்கு 4 புள்ளிகளும் "சி"தரத்துக்கு 3 புள்ளிகளும் "எஸ்" தரத்துக்கு 2 புள்ளிகளும் வழங்கப்படும்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளை நடைமுறைப்படுத்துவதற்கான தேசியத் திட்டத்தின் கீழ், அரச பல்கலைக்கழகங்களில் மும்மொழிகளிலும் கற்பிக்கப்படும் பாடநெறிகளுடன் இன ரீதியாக கலக்கப்பட்ட மாணவர் சமூகத்தை உறுதிப்படுத்துவதற்கு அமைவாக இந்த அமைச்சரவைப் பத்திரம் தயாரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# "முகநூல் " பக்கத்தினூடாக மாகாணசபை தேர்தல் பிரசாரம் என்கிறார் மனோகணேசன்

(கொழும்பு)

மாகாணசபை தேர்தல் பிரசாரங்கள் முகநூல் பக்கம் மூலமாக முன்னெடுக்கப்பட்டுள்ளதாக ஜனநாயக மக்கள் முன்னணித்தலைவர் மனோகணேசன் தெரிவித்துள்ளார்.

கட்சியின் மேல்மாகாண தேர்தல் பிரசார செய்திகளையும், கருத்துகளையும், புகைப்படங்களையும், காணொளிகளையும் தாங்கிவரும் முகநூல் பக்கத்தை அங்குரார்ப்பணம் செய்துவைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் கட்சி தலைமையகத்தில் நடைபெற்றது. ஜனநாயக இளைஞர் இணையத்தினால் நடாத்தப்பட்ட இந்நிகழ்வில் அவர் மேலும் உரையாற்றுகையில்:



உங்கள் கரங்களில் இப்போது இருக்கும் உங்கள் கைத்தொலைபேசிதான் முதல்மட்ட சமூக ஊடக கருவியாகும். அதை முழுமையாக பயன்படுத்துங்கள். முகநூல், டுவிட்டர் வைபர், வட்ஸ்எப் என்று பல ஊடகங்கள் இப்போது இருக்கின்றன. இவற்றில் வெளியாகும் பிரபல்யமான செய்திகளையும், கருத்துகளையும் இப்போது அச்சு ஊடகங்களும் உள்வாங்குகின்றன. இன்று சமூக ஊடகங்களை பயன்படுத்தும் ஒரு நவீன கட்சியாக ஜனநாயக மக்கள் முன்னணி முன்னிலை பெற்றுள்ளது. ஏனைய பல்வேறு அமசங்களைப் போல் இதிலும் நாங்கள் முதலிடம் பெற்றுள்ளோம்.

ஒளிரும் சந்திரனையும், மிளிரும் சூரியனையும் பார்த்து ஒன்றும் செய்யமுடியாத ஏதோ ஒன்று குரைக்கும். அத்தகைய குரைப்புகளுக்கெல்லாம் சந்திரனும், சூரியனும் கீழே இறங்கி வந்து பதில் சொல்லிக்கொண்டிருக்க முடியாது. ஆகவே இதறகெல்லாம் இந்த சமூக தளங்களைப் பயன்படுத்தாதீர்கள். நல்ல காரியங்களுக்கு ஆக்க பூர்வமாக பயன்படுத்துங்கள்.என்றார்.

# கல்வியற் கல்லூரிகளுக்கு 3500 பேர் இணைப்பு

கல்வியற்கல்லூரிகளுக்கு இவ்வாண்டு 3500 பேர் சேர்ந்துக் கொள்ளப்படவுள்ளனர். கல்வியற் கல்லூரிகளுக்கு புதிய மாணவர்களை சேர்த்துக்கொள்வதற்கான விண்ணப்பங்கள் அடுத்த மாதம் 21 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படவுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

விண்ணப்பம் கோருவதற்கான வர்த்தமானி இம்மாதம் 31 ஆம் திகதி வெளியிடப்படவுள்ளது.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள 18 கல்வியற் கல்லூரிகளில் ஆங்கிலம், தகவல் தொழில்நுட்பம் உள்ளிட்ட பாடநெறிகளுக்காக இவர்கள் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர்.2012 ஆம் ஆண்டு கல்விப் பொதுத் தராதர உயர் தரப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களிடம் இருந்தே விண்ணப்பம் கோரப்படவுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

# ஆறு மில்லியனில் அமைச்சர்களுக்கு வீடு; ஆழிப்பேரலையில் பாதித்த மக்கள் வீதிகளில்

## அசாத்சாலி குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசாங்கம் ஆறு மில்லியன் ரூபா செலவில் அமைச்சர்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுக்கின்றன. எனினும், ஆழிப பேரலையினால் பாதிக்கப்பட்ட அப்பாவி மக்கள் இன்னமும் வீதிகளிலும், இடைத்தங்கல் முகாம்களிலும் வாழ்ந்து வருகின்றனர் என மத்திய மாகாண சபையின் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் அசாத் சாலி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

நாடாளுமன்ற உறுப்பினர்களின் உத்தியோகபூர்வ தங்குமிடங்களை புனரமைப்பதற்காக அரசாங்கம் 510 மில்லியன் ரூபா பணத்தை ஒதுக்கீடு செய்துள்ளது. இந்த அரசாங்கம் கசினோ, பாலியல் தொழில் மற்றும் போதைப்பொருள் ஆகியவற்றுக்கே முன்னுரிமை அளித்து வருகின்றது.

அரசாங்கம் வங்குரோத்து நிலையை அடைந்துள்ளது. இதன் காரணமாகவே மேல் மாகாணசபைத் தேர்தலில் ஆளும் கட்சியின் சார்பில் ஆறு கலைஞர்கள் களமிறக்கப்படவுள்ளனர்.

இந்த கலைஞர்கள், ஒரே இரவில் நகைச்சுவை கலைஞர்களாக மாற்றமடைந்துள்ளார்கள்.

வைத்தியசாலைகளில் அத்தியாவசிய மருந்துப் பொருட்களுக்கு பாரியளவில் தட்டுப்பாடு நிலவி வரும் நிலையில், அரசாங்கம் தயட்ட கிருள கண்காட்சிக்காக பாரியளவில் பணத்தை விரயமாக்கி வருகின்றது.



குடும்ப உறுப்பினர் ஒருவரை பிரதமராக்கும் முனைப்புக்களில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது. ஜாதிக ஹெல உறுமய மற்றும் பொதுபலசேனா ஆகிய கட்சிகளிடம் தற்போதைய பிரதமர் டி.எம். ஜயரட்னவை விரட்டியடிக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றார்.

# பயன்தரும் வகையில் சேவையாற்றுவதே தொண்டு நிறுவனங்களின் கடமை

(கொழும்பு)


ஜனாதிபதி தெரிவிப்பு

போலிப்பிரசாரங்களை கைவிட்டு நாட்டு மக்களுக்கு பயன் அளிக்கக்கூடிய வகையில் சேவையாற்றுவதே தன்னார்வ தெண்டு நிறுவனங்களின் கடமையாகும் என ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கேகாலை ஷாந்த ஜோசப் பெண்கள் வித்தியாலயத்தில் புதிய நீச்சல் தடாகம் ஒன்றை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் திறந்து வைத்து உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் உரையாற்றுகையில்

நாட்டிலுள்ள மாணவர்களின் கல்வித்தரத்தை உயர்த்த விசேட வேலைத் திட்டங்களை அரசாங்கம் மேற்கொண்டுவ்ருகின்றது. எதிர்காலத்தில் நாட்டில் ஆராய்ச்சியாளர்களும், விஞ்ஞானிகளும் உருவாக்கப்படுவார்கள். உறுதியான இலக்கு, நம்பிக்கை மற்றும் அர்ப்பணிப்பினாலேயே நாட்டில் சுதந்திரமும் அபிவிருத்தியும் மலர்ந்துள்ளது.

அரச சார்பற்ற நிறுவனங்கள் போலிப் பிரசாரங்களை கைவிட வேண்டும்.

சனச நிறுவனம் போன்று மக்களுக்கு சேவையாற்றுவதற்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்.


அனைத்து இன மத மக்களும் சகவாழ்வுடன் வாழ்ந்து வரும் நாட்டில் மனித உரிமை மீறல் இடம்பெறுவதாக போலிக் குற்றச்சாட்டு சுமத்தப்படுகின்றது.

தமிழ் புலம்பெயர் சமூகம் கண்ணாடி கூட்டுக்குள் இருந்து கொண்டு கல் எறிகின்றது.

போர் நிறைவின் பின்னரே புலம்பெயர் தமிழர்களுக்கு எம்மைப் பற்றிய நினைவு வந்துள்ளது 30 ஆண்டுகால போர் நிறைவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

இதனால் வடக்கைப் போன்றே தெற்கிலும் சுதந்திரம் உருவாகியுள்ளது என்றார்.

# கொழும்பு–கட்டுநாயக்க வீதியின் நாளாந்த வருமானம் 50 இலட்சம்



கொழும்பு - கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலையின் நாளாந்த வருமானம் சுமார் 50 இலட்சம் என வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதிப்பணிப்பாளர் ஆர்.ஏ.டி கஹடபிட்டி தெரிவித்துள்ளார். கடந்த ஆண்டு டிசம்பர் மாதத்தில் இருந்து இதுவரையிலான காலப்பகுதியில் அதிகளவான வாகன போக்குவரத்துகள் பதிவாகியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# தமிழ்ப்பண்பாடு அழிவடைவது கவலைக்குரிய விடயமாகும்

## வைத்தியகலாநிதி மு.இந்திரமோகன்

(யாழ்.நிருபர்)

தமிழர் பண்பாட்டைத் முற்றாக அழிப்பதற்கான செயற்பாடுகள் அண்மைக்காலமாக எமது பிரதேசத்தில் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதனை உணர்ந்து நாம் அனைவரும் எமது மொழி, கலை பண்பாட்டம்சங்களைப் பேணிப்பாதுகாக்க முன்வர வேண்டும் என காரைநகர் பிரதேச வைத்திய அதிகாரி மு.இந்திரமோகன் தெரிவித்தார்.


காரைநகரில் நடைபெற்ற பொங்கல் விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

காரைநகர் அபிவிருத்திச் சபையின் தலைவர் சிவா மகேசன் தலைமையில் நூலக கட்டடத்தில நடைபெற்ற இந்நிகழ்வில் வைத்திய கலாநிதி மு.இந்திரமோகன் தொடர்ந்து பேசுகையில்,

இன்று எமது மக்களிடையே தவறான உணவுப் பழக்கம் காரணமாக புற்றுநோய் தாக்கம் அதிகரித்து வருகின்றது. நீரிழிவு, உயர்குருதி அழுத்தம் போன்ற நோய்களால் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர். சீனி, குளிர்பானம் போன்றவற்றை அளவுக்கு அதிகமாக உட்கொள்வதால் நீரிழிவு போன்ற நோய்கள் ஏற்படுகின்றன. காசு கொடுத்து வில்லங்கத்தை விலைக்கு வாங்குகிறோம். நாளாந்த உணவில் இனிப்புப் பண்டங்கள், ஐஸ்கிறீம், மற்றும் குளிர்பானங்களைத் தவிர்த்துக் கொள்வது நீரிழிவு நோயில் இருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்ள உதவும்.

இன்று எம்மில் பலர் தொலைக்காட்சி பார்ப்பதிலேயே நீண்ட நேரத்தைச் செலவிடுகின்றனர். இது எமது சிந்தனைத் திறனை வளர்க்கத் தடையாக இருப்பதோடு அறிவுத் தேடலையும் முடக்கிவிடுகிறது.

பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு தொலைக்காட்சி பார்க்கும் நேரத்தைக் கட்டுப்படுத்தி அறிவுநூல்களை வாசிக்கக் கொடுக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டார். (10)



கைதடி கிழக்கு சனசமூக நிலையத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை அப்பிரதேச இளைஞர்கள் ஏற்பாடு செய்த இரத்ததான நிகழ்வில் இளைஞர் ஒருவர் இரத்ததானம் செய்வதைக் காணலாம். (90)

# உரியமுறையில் பணம் கிடைக்காமையால் ஸ்தம்பிதமடையும் வீட்டுத்திட்டப் பணிகள்

(மன்னார்)

வடமாகாணத்தில் குறிப்பாக வன்னிப் பிராந்தியத்தில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்திய வீட்டுத்திட்ட வசதிகள் வழங்கப்பட்ட போதிலும் கட்டம் கட்டமாக வங்கியூடாக வழங்கப்படும் பணம் உரிய வகையில் வழங்கப்படாமையால் வீட்டுத்திட்டப் பணிகள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளதாக பயனாளிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக வன்னிப் பிராந்தியத்தில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களில் வீட்டுத்திட்ட வசதிகள் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து பின்னர் மீள்குடியேறிய மக்களுக்கு வழங்கப்பட்டது.

இந்நிலையில் வீட்டுத்திட்டம் வழங்கப்பட்ட பயனாளிகளுக்கு கட்டுமாணப்பணிகளை முன்னெடுப்பதற்கென கட்டம் கட்டமாக வங்கியினூடாக பணம் வழங்கப்பட்டுவந்த நிலையில் தற்போது உரிய முறையில் வழங்கப்படாமையால் வீட்டுத்திட்டப்பணிகளை உரியமுறையில் பூர்த்தி செய்யமுடியாது பணிகள் தாமதமடைவதாக பயனாளிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதை விட வீட்டுத்திட்டத்திற்கான மரங்கள் தறிப்பதற்கு உதவி அரசாங்க அதிபரின் அனுமதி பெறவேண்டும் என்ற நிலையில் தாம் உரிய அனுமதி பெற்று மரங்களைத் தறிக்க செல்கின்ற நிலையில் மரங்களை தறிக்க தடைவிதிக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுவதால் தாம் மரங்களுக்கு என்ன செய்வது என்று தெரியாது இருப்பாதகவும் பயனாளிகள் தெரிவிக்கின்றனர்.

வீட்டுத்திட்டப் பணிகளுக்கென கால வரையறையுள்ள நிலையில் இவ்வாறான இடையூறுகள் மற்றும் நெருக்கடிகளால் தாம் வேலைகளை உரிய வகையில் செய்து முடிக்க முடியாது சிரமத்தை எதிர்நோக்குவதாகவும் இது தொடர்பில் உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பயனாளிகள் கோரிக்கை விடுக்கின்றனர். (140)

## கலைஞர் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

வலி.தெற்கு பிரதேசசபையின் உள்ளூராட்சி வார பரிசளிப்பு மற்றும் கௌரவிப்பு நிகழ்வில் புத்தாக்க அரங்க இயக்ககலைஞர்கள் கௌரவிக்கப்பட்டார்கள்.

வலி.தெற்கு பிரதேசசபையின் உள்ளூராட்சிவார நிகழ்வு வலி.தெற்கு பிரதேசசபைத் தவிசாளர் தி.பிரகாஷ் தலைமையில் பிரதேசசபை மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் வலி தெற்கு பிரதேசசபையினால் புத்தாக்க அரங்க இயக்கக் கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டார்கள். சிறப்பு ஆற்றுகையாக எஸ்.ரி. குமரன் எஸ்.ரி. அருள்குமரனின் நெறியாள்கையில் உள்ளூராட்சி வாரத்தின் முக்கியத்துவத்தினை புலப்படுத்தும் "மக்களிற்காக" என்னும் நாடக ஆற்றுகை புத்தாக்க அரங்க இயக்கக்கலைஞர்களினால் ஆற்றுகை செய்யப்பட்டது. (63)

## யாழ்.நகர்ப்பகுதி சந்தைகளில் கணிசமான விலையில் மரக்கறிகள்

யாழ்ப்பாணத்திலுள்ள சந்தைகளில் பரவலாக மரக்கறிகளின் விலைகுறைவடைந்திருப்பதாக வியாபாரிகள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. இந்நிலையில் யாழ்.நகரப்பகுதியிலுள்ள சந்தைகளான யாழ்ப்பாணச் சந்தை, மற்றும் திருநெல்வேலி சந்தைகளிலும் மரக்கறிகளின் விலை கணிசமான அளவில் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி 1 கிலோ கத்தரிக்காய் 50 முதல் 70 ரூபா வரையும், தக்காளி 30 முதல் 40 ரூபா வரையும், மரவள்ளிக்கிழங்கு 30 முதல் 40 ரூபா வரையும், கோவா 20 முதல் 30 ரூபாவரையும், கரட் 40 முதல் 60 ரூபா வரையும், பூசணி 30 முதல் 60 ரூபா வரையும், புடோல் 40 முதல் 50 ரூபா வரையும், பாகற்காய் 100 முதல் 130 ரூபா வரையும், பயிற்றங்காய் 130 முதல் 200 ரூபா வரையும், பீற்றூட் 50 முதல் 70 ரூபா வரையும், போஞ்சி 40 முதல் 80 ரூபா வரையும் விற்பனையாவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கீரை 1பிடி 20 முதல் 30 ரூபா வரையும், இராசவள்ளிக்கிழங்கு 80 முதல் 90 ரூபா வரையும் விற்பனை செய்யப்படுகிறது. தற்போது இராசவள்ளிக்கிழங்கு சந்தைகளில் அதிகளவில் வருவதால் நுகர்வோர் விரும்பி வாங்கிச் செல்வதை அவதானிக்க முடிகிறது.

# யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர்களுக்கு உயிர்காப்பு அங்கிகள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர்களுக்கு கடற்றொழில் நீரியல்வள அமைச்சினால் முதற்கட்டமாக உயிர்காப்பு அங்கிகள் தற்சமயம் விநியோகிக்கப்பட்டுவருவதாக யாழ்.மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள அதிகாரி தெரிவித்துள்ளார்.

அண்மையில் முதற்கட்டமாக கடற்றொழில் நீரியல்வளத்திணைக்கள அமைச்சினால் யாழ். மாவட்டத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்த 400 உயிர்காப்பு அங்கிகளே தற்சமயம் விநியோகிக்கப்பட்டுவருகின்றன.

இந்த உயிர்காப்பு அங்கியில் விபத்து ஏற்படுமிடத்து பயன்படுத்தும் பொருட்களும் உள்ளடங்கியுள்ளன. அதில் விசில், லைற், கண்ணாடி, கத்தி போன்றன உள்ளடங்கியுள்ளன.

யாழ்.மாவட்டத்திற்கு இவ்வாறு 3000 முதல் 4000 வரையிலான உயிர்காப்பு அங்கிகள் கடற்றொழிலாளர்களுக்கு விநியோகிப்பதற்கு தேவையாகவுள்ள நிலையில் கடற்றொழில் நீரியல்வள அமைச்சினால் இவை கட்டம் கட்டமாக வழங்கப்பட்டு விநியோகிக்கப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கான பயனாளிகள் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தில் தமது படகு இயந்திரம் என்பன குறித்து முறையான பதிவினை மேற்கொண்டிருப்பது அவசியம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பா)

## முரசின் இன்றைய பலன்



(28.01.2014 செவ்வாய்க்கிழமை)

விஜய வருஷம் தை மாதம் 15 ஆம் திகதி.
பிரதோஷ விரதம். துவாதவி / அமிர்தசித்தம்.
மூல நட்சத்திரம் மு.இ. 7.59 வரை. பின் பூராடம்.
இராகு காலம 03.36 - 05.06 வரை. சுபநேரம 11.06 - 12.36 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | வேலை செய்யும் சக ஊழியர்களிடம் சொந்த விடயங்களைப் பங்குபோட வேண்டாம், சுபகாரியம் நடாத்துவதற்கு நண்பர்களிடம் கடன் பெறவிழைதல். |
| ரிஷபம் | பணியகத்தில் மரியாதையைத்தக்கவைத்தல், சர்ப்பங்களைக் கனவில் கண்டு அச்சமுற்றதால் நாக தோஷ பரிகாரம் செய்ய முற்படல். |
| மிதுனம் | நபர்களின் நம்பிக்கையை மதிப்பீடு செய்தல், இழுபட்ட நிலுவை கைக்கு வந்துசேர்தல். |
| கடகம் | பிரச்சினைகள் தீரும்வரை கவனமாக செயற்படல், நண்பர்களின் ஒத்துளைப்புடன் விழா வினைத் திறம்பட நடாத்திமுடித்துப் பாராட்டுப்பெறல். |
| சிம்மம் | வஞ்சகமில்லாத பேச்சை தவறாக எண்ணல், ஆடம்பரப்பொருட்களினால் கடன படும் நிலை ஏற்படல். |
| கன்னி | பொறுப்புக் களைச் சரிவர செய்வதால் பாராட்டுப் பெறல், ஆரோக்கியத்தில் பாதிப்புக்கள் ஏற்படும் நிலை |
| துலாம் | தலைமைப் பொறுப்பு ஏற்பட்டதைக் கண்டு பொறாமை கொள்ளல், இழுபட்டுக்கொண்டிருந்த விவாகப்பேச் சுக்கள் நல்ல முடிவினைத் தரும். |
| விருச்சிகம் | அஷ்டமத்தில் குரு [8இல்] இருப்பதினால் விவாக முயற்சியில் இறங்குவதைக் கைவிட உத்தேசித்தல், கைவிட்டிருந்த சகோதரர் உறவு மீண்டும் துளிர்விட ஆரம்பித்தல். |
| தனுசு | குடும்பத்தில் சோகநிலை, குழந்தைகளின் எதிர்காலத்திற்காக வங்கியில் வைப்புச்செய்தல். |
| மகரம் | சிக்கல்களிலிருந்து விடுபட ஆலோசனை நாடல், பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு பிரயாண முயற்சியை மேற்கொள்ளல். |
| கும்பம் | பதவி உயர்வுக்கழதம் கிடைக்காமையினால் மனம் கவலை கொள்ளல், முரண்பாட்டினால் விலகிய தொழிலாளிகள் மீண்டும் வருதல் |
| மீனம் | மனைவியின் செயற்பாட்டை எண்ணி பெருமையடைதல், தொழிலுக்கான பண உதவி கைவிட்டுப் போவதால் கவலை. |

# மாற்றமெதுவும் இல்லாத நியூசிலாந்து டெஸ்ட் அணி

(ஒக்லாண்ட்)

இந்திய அணிக்கெதிராக ஆடும் நியூசிலாந்து டெஸ்ட் குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்திய, நியூ சிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டி களைக் கொண்ட டெஸ்ட் தொடர் எதிர்வரும் 10ஆம் திகதி ஒக்லாண்டில் நடைபெறவுள்ளது. இப்போட்டிக் கான நியூசிலாந்து டெஸ்ட் குழாம் நேற்று அறி விக்கப்பட்டது.

இதில் கடந்த டிசம்பர் மாதம் மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரில் வாகை சூடிய நியூசிலாந்து அணி எந்த வித மாற்றமும் இன்றி அப்படியே தேர்வு செய்யப்பட்டிருக்கிறது. டெஸ்ட் ஆரம்ப ஆட்டக்காரர்கள் ரூதர்போர்ட், புல்ரொன் சிறப் பாக விளையாடி வருவதால் இந்தக் கூட்டணியை உடைக்க தேர்வுக் குழு விரும்பவில்லை. இதனால் 3ஆவது ஒரு நாள் போட்டியில் சதம் விளாசிய ஆரம் பத் துடுப்பாட்ட வீரர் குப்திலுக்கு வாய்ப்பு அளிக்கப் படவில்லை. டெஸ்ட் தொடரின் போது, ரெய்லரின் மனைவிக்கு 2ஆவது குழந்தை பிறக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஒரு வேளை ரெய்லர் விளை யாட முடியாமல் போகலாம் என்பதை கருத்தில் கொண்டே ஜெஸ்சி ரைடர் அணியில் கூடுதலாகசேர்க் கப்பட்டிருக்கிறார். ஆனாலும் இப்போதைக்கு களம் இறங்கும் டெஸ்ட் 11 பேர் அணியில் ரைடருக்கு இடம் கிடைக்காது என்று நியூசிலாந்து பயிற்சியாளர் மைக் ஹெசன் தெரிவித்தார்.

நியூசிலாந்து டெஸ்ட் அணி வருமாறு:-பிரண்டன் மக் கலம் (கப்டன்), கோரி அண்டர்சன், டிரெண்ட் பவுல்ட், டக் பிரேஸ்வெல், பீற்றர் புல்ரொன், ஹமிஷ் ரூதர் போர்ட், ஜெசி ரைடர், ஐஷ்சோதி, ரிம்சௌத்தி, ரெய் லர், நீல் வாக்னெர், வொட்லிங், வில்லியம்ஸன்.

# நம்ப முடியவில்லை



(மெல்பேர்ன்)

கிராண்ஸ்ட்ஸ்லாம் போட்டிகளில் அவுஸ்ரேலிய ஓப்பன் ரென்னிஸ் ஆட் டமே சிறப்புக்குரியது. அதில் கிண் ணம் வென்றதை இன்னும் என்னால் நம்ப முடியவில்லை என அவுஸ் ரேலிய ஓப்பன் ரென்னிஸ் தொடரில் முதன்முறையாக கிண்ணம் வென்ற சுவிஸின் வாவ்ரிங்கா தெரிவித்துள்ளார்.

என்னைப் பொறுத்தவரை அவுஸ் ரேலிய ஓப்பன் தான் மிகச்சிறந்த கிராண்ட்ஸ்லாம் போட்டியாகும். கடந்த ஆண்டில் இங்கு ஜோகோவிச்சிடம் தோல்வியடைந்த போது கண்ணீர் விட்டு அழுதேன். இந்த ஓராண்டு இடைவெளியில் நிறைய விடயங்கள் நடந்துள்ளது. இப்போது இது கனவா அல்லது நனவா? என்பது எனக்குத் தெரியவில்லை. கிராண்ட்ஸ்லாம் பட்டம் வெல்வேன் என்று நான் ஒரு போதும் எதிர்பார்க்கவில்லை. இது புதுமையான அனுபவமாகும். நடாலுக்காக நான் வருந்துகிறேன். அவர் விரைவில் உடல் நலன் பெற்றுத் திரும்புவார். அவர் சிறந்த வீரர் மட்டுமின்றி எனது நண்பரும் ஆவார். அவர் வியப்புக்குரிய ஒரு சம்பியன். அவருடன் இணைந்து விளையாடுவது எப்போதும் மகிழ்ச்சிக்குரியது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

தோல்வி குறித்து கருத்துத் தெரிவித்த நடால், வாவ்ரிங்கா பட்டம் வென்றது மகிழ்ச்சி அளிக்கிறது. எங்களுக்குள் நல்ல உறவு இருக்கிறது. இந்த வெற்றிக்கு அவர் உண்மையிலேயே தகுதியானவர். இது அவருக்குரிய நாள். அதே நேரத்தில் எனக்கு அதிர்ஷ்டம் இல்லை. ஆட்டத்தை முடித்த விதம் வருத்தம் அளிக்கிறது. கடந்த ஆண்டில் இங்கு விளையாட முடியாமற் போனது கடினமான காலகட்டமாக உணர்ந்தேன். இந்த ஆண்டில், கடந்த இரண்டு வார காலம் எனக்கு மிகவும் உணர்ச்சிகரமான தொடர்களில் ஒன்றாக அமைந்தது என்றார். தோல்வியைச் சந்தித்தாலும் நடால் உலகின் முதலிடத்தை தொடருகிறார்.

# இன்று நான்காவது ஆட்டம்

(ஹமில்டன்)


இந்திய, நியூசிலாந்து அணிகளுக்கிடை யிலான ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் நான்காவது போட்டி இன்றைய தினம் நியூசிலாந்தின் ஹமில் டனில் நடைபெறவுள்ளது.

நியூசிலாந்திற்கான கிரிக்கெட் சுற்று லாவை மேற்கொண்டுள்ள இந்திய அணி தற்போது ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரில் மோதி வருகின்றது.

இதில் நடைபெற்று முடிந்த மூன்று போட்டிகளில் முதலிரு ஆட்டங்களில் நியூ சிலாந்து அணி வெற்றிபெற்று முன்னிலை வகிக்கின்றது.மூன்றாவது ஆட்டம் சமநிலை யில் நிறைவுபெற்றது.

இந்நிலையில் நான்காவது போட்டி இன்றைய தினம் ஹமில்டனில் நடைபெற வுள்ளது.இப்போட்டியை வென்றுதொடரை வெல்லும் முனைப்புடன் நியூசிலாந்து அணி களமிறங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அதேவேளை, சர்வதேச கிரிக்கெட் சபையின் தரப்படுத்தலில் முதலிடத்தை இழந்திருக்கும் இந்திய அணி நியூசிலாந் துடனான இரு போட்டிகளிலும் வெல்லும் பட்சத்திலேயே மீண்டும் முதலிடத்தைத் தக்கவைக்க முடியும். அத்துடன் தொடரை யும் சமன்படுத்தக்கூடியவாய்ப்பும் ஏற்படும். இந்நிலையில் இந்திய அணி இன்றைய போட்டியிலும் தொடர்ந்து நடைபெறவுள்ள ஐந்தாவது போட்டியிலும் வெற்றியைப் பெற்றுக்கொள்ள தீரத்துடன் போராடும் என கிரிக்கெட் விமர்சகர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.



# சர்வதேச நட்சத்திரம்

ஹோலியின் துடுப்பாட்ட அணுகுமுறை தைரியமானது, எப்போதும் ஓட்டங்கள் எடுப்பதில் கவனம் செலுத்தும் அவர் தற்போது நட்சத்திர அந்தஸ் தைப் பெற்றுவிட்டார் என அவுஸ்ரேலிய அணியின் முன்னாள் கப்டன் இயன் சப்பல் தெரிவித்துள்ளார். ஹோலி தற்போது சான்றிதழ் வழங்கப்பட்ட சர்வ தேச நட்சத்திரம், எதிர்கால கப்டனுக்குரிய அனைத்துத் தகுதிகளுடன் அவர் தற்போது சச்சின் டெண்டுல்கரின் 4ஆம் இடத்தைப்பிடித்து ஆடி வரு கிறார்.உள்ளூர் துடுப்பாட்ட வீரர்களே திக்கித் திணறும் அவுஸ்ரேலியாவின் பேர்த் ஆடுகளத்தில் ஹோலி தன்னை நிரூபித்தார். அவர் 44 மற்றும் 75 ஓட்டங்களை எடுத்தார். அதன் பின்னரே அவர் சர்வதேச துடுப்பாட்ட வீரர் என்ற தனது தரநிலையிலிருந்து கீழே இறங்கவில்லை.

எந்த ஒரு சர்வதேச துடுப்பாட்ட வீரர்களின் கிரிக்கெட் வரலாற்றிலும் பேர்த் மற்றும் ஜோகனஸ்பேர்க் சதம் முக்கியமானது. பேர்த் ஆடுகளத்தில் தனது திறமையை காண்பித்த ஹோலி, உலகின் முதல் தர தென்னாபிரிக்க பந்து வீச்சிற்கு எதிராக முதல்நாள் ஜோகனஸ்பேர்க் ஆடுகளத்தில் சதம் எடுத்தது தன்னை அவர் ஒரு வேறு விதமான தர நிலையில் உள்ள டெஸ்ட் வீரர் என்பதை அறிவித்துக்கொண்டதாக அமைந்தது.

அவர் துடுப்பாட்டத்தில் தைரியமான அணுகுமுறை கொண்டவர். அன்று கூட நியூசிலாந்துக்கு எதிராக சதம் எடுத்துவிட்டு "பவுன்சரை விடுவது ஒன்றுமில்லை, அதனை அடிப்பதுதான் முக்கியம்" என்றார். கிரிக்கெட் என்ற மன விளையாட்டு உத்திகளில் ஹோலி பெரும் பகுதியை சரியாகப்பிடித்து விட்டார். நல்ல பலமான மன நிலைகொண்ட அருமையான துடுப்பாட்ட வீரர் ஹோலி எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.



அவுஸ்ரேலிய ஓப்பன் ரெனிஸ் தொடரின் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் சம்பியன் பட்டம் வென்ற சுவிஸின் வாவ்ரிங்கா நேற்றைய தினம் மெல்பேர்ன் பூங்கா அருகில் புகைப்படக் கலை ஞர்களுக்கு காட்சி கொடுப்பதைக் காணலாம்.

# முடக்கப்பட்டது பி.சி.சி.ஐ. இணையம்

(மும்பை)

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் உத்தியோகபூர்வ இணையத் தளம் இனந்தெரியாதோரால் ஹைக் செய்யப்பட்டுள்ளது. அண்மைய இந்திய கிரிக்கெட் சபையின் நடவடிக்கைகளின் பின்னணியில் இது இடம்பெற்றுள்ளது.

சர்வதேச கிரிக்கெட் சபையின் நிர் வாக, நிதி நடவடிக்கைகளில் பாரி யளவு மாற்றங்களை ஏற்படுத்தும் முக மாக சர்வதேச கிரிக்கெட் சபையில் இந்திய கிரிக்கெட் சபை, அவுஸ்ரேலிய கிரிக்கெட் சபை, இங்கிலாந்து கிரிக்கெட் சபை ஆகியன பிரேரணையொன்றைச் சமர்ப்பித்துள்ளன.

இதில், டெஸ்ட் போட்டிகளில் விளை யாடும் நாடுகளை இரண்டு பிரிவுக-ளாகப் பிரிக்கும் திட்டமும் முன்னெடுக் கப்படுகிறது. இதில் பங்களாதேஷ், சிம்பாப்வே ஆகிய இரண்டு நாடுகளும் அதிகம் பாதிக்கப்படும் எனக் கருதப் படுகிறது.

இந்நிலையிலேயே இந்திய கிரிக்கெட் சபையின் தளம் ஹக் செய் யப்பட்டுள்ளதுடன் ஆஷிக் இக்பாலால் ஹைக் செய்யப்பட்டுள்ளது என்ற தக வலும், இன்னுமொரு இடத்தில் பங்களா தேஷ் வீரர்கள் தங்கள் தேசியக் கொடி யுடன் மைதானத்தை வலம்வரும் புகைப்படமும் இணைக்கப்பட்டுள்ளது.

# எரங்க, லக்மல் சிறப்பு பந்துவீச்சு சுருண்டது பங்களாதேஷ்

(டாக்கா)


எரங்க, லக்மல் ஆகியோரின் பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் திண-றிய பங்களாதேஷ் அணி 232 ஓட்டங்களுக்குள் சுருண்டது.

இலங்கை, பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் ஆட்டம் நேற்று பங்களாதேஷின் டாக்காவில் ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதல் இனிங்ஸிற்காக களமிறங்கிய பங்களாதேஷ் அணி எரங்க, லக்மல் ஆகியோர் பந்து வீச்சை எதிர்கொள்ள முடியாமல் திணறிய துடன் விக்கெட்டுக்களையும் பறிகொடுத்தது. ஒரு கட்டத்தில் பங்களாதேஷ் அணி நான்கு விக்கெட்டுக்களை இழந்து 59 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இந்நிலையில் ஐந்தாவது விக்கெட்டுக்காக இணைந்த கப்டன் எம். ராஹீம், ஷகிப் அல் ஹசன் இணை மிகவும் நிதானமாக ஆடி அணியை சரிவிலிருந்து மீட்கப் போராடியது. இந்த இணை 85 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றவேளை ஹேரத்தினால் பிரிக்கப்பட்டது. மீண்டும் சொதப்பலான ஆட்டத்தை வெளிப்படுத்திய பங்களாதேஷ் அணி மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இருப்பினும் வேகப்பந்து வீச்சாளர் ஹஜி சிறிது நேரம் அதிரடியில் கலக்கி அணியின் ஓட்ட எண்ணிக்கையை கௌரவமான நிலைக்கு இட்டுச் சென்றார். இறுதியில் பங்களாதேஷ் அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 232 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கப்டன் எம். ராஹீம் 122 பந்துகளை எதிர்கொண்டு ஒன்பது பவுண்டரிகள் அடங்கலாக .61, ஷகிப் அல் ஹசன் 91 பந்துகளை எதிர்கொண்டு ஒன்பது பவுண்டரிகள் அடங்கலாக 55, ஹஜி 56 பந்துகளை எதிர்கொண்டு ஒரு சிக்ஸர், ஆறு பவுண்டரிகள் அடங்கலாக 42, எம். ரஹ்மான் 33 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் எரங்க நான்கு, லக்மல் மூன்று, ஹேரத் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக ஆடிவரும் இலங்கை அணி சிறப்பான அடித்தளத்தைப் பெற்றுள்ளது. குணவர்த்தன, கௌசல் சில்வா இணை மிக நிதானமாக ஆடி வருகின்றது. இறுதியில் நேற்றைய முதல் நாள் ஆட்டம் நிறுத்தப்பட்டவேளை, இலங்கை அணி விக்கெட் இழப்பின்றி 60 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. இதில் குணவர்த்தன 28, கௌசல் சில்வா 30 ஓட்டங்களைப் பெற்றுள்ளனர். இன்று போட்டியின் இரண்டாம் நாளாகும்.



உயரப்புலம் மெதடிஸ் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியை முன்னிட்டு அண்மையில் வீதியோட்டம் நடைபெற்றது. ஆண், பெண் என இரு பாலாருக்குமிடையில் நடைபெற்ற இவ்வீதியோட்டத்தை பாடசாலை அதிபர் திலீபன் ஆரம்பித்து வைத்தார். இதில் ஆண்கள் பிரிவில் முதலிடத்தை மு. தர்சன், இரண்டாமிடத்தை என். நிரோஜன், மூன்றாமிடத்தை த. லசீகரன் ஆகியோரும், பெண்கள் பிரிவில் முதலாமிடத்தை இ. சுஜதா, இரண்டாமிடத்தை ஜெ. ஜனார்த்தனி, மூன்றாமிடத்தை த. ஜோதிகா ஆகியோரும் பெற்றுக்கொண்டனர். போட்டி ஆரம்பிப்பதையும், வெற்றியீட்டியோர் அதிபருடன் நிற்பதையும் காணலாம். (137)

## விளையாட்டுச் செய்திகள்

# பிருந்தாவன், மதுஷன் அதிரடி வென்றது யாழ். இந்து

(யாழ்ப்பாணம்)

பிருந்தாவன், மதுஷன் ஆகியோ-ரின் அதிரடித் துடுப்பாட்டத்தின் மூலம் யாழ். இந்துக் கல்லூரி அணி இனிங்ஸ் வெற்றிபெற்றது.

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடாத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இரண்டு நாள் இனிங்ஸ் கிரிக்கெட் போட்டித் தொடரின் முதல் சுற்று ஆட்டங்கள் தற்போது நடைபெற்று வருகின்றது.

இதில் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய அணிக்கும், யாழ். இந்துக் கல்லூரி அணிக்குமிடையிலான ஆட்டம் கடந்த வாரம் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயற்சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ். இந்துக் கல்லூரி முதலில் களத் தடுப்பைத் தெரிவு செய்தது. இதற்கமைய முதல் இனிங்ஸிற்காக ஆடிய கன கரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணி 41 ஓவர்களை எதிர்கொண்டு சகல விக்கெட்டுக்களையும் இழந்து 103 ஓட்டங்களைப் பெற்றது. இதில் விதுன் 32, ஓட்டங்களைப் பெற்றார். ஏனைய வீரர்கள் சொற்ப ஓட்டங்களுடன் ஆட்ட மிழந்து ஏமாற்றமளித்தனர். பந்துவீச்சில் மதுஷன் 16 ஓட்டங்களைக் கொடுத்து நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற் றினார்.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக களமிறங்கிய யாழ். இந்துக் கல்லூரி அணி பிருந்தாவன், மதுஷன் ஆகியோ ரின் அதிரடித் துடுப்பாட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் யாழ். இந்துக் கல் லூரி அணி முதல் இனிங்ஸிற்காக ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 320 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. இதில் பிருந்தாவன் 68 பந்துகளை எதிர் கொண்டு 80, மதுஷன் 49 பந்துகளை எதிர்கொண்டு 71, கல்கோவன் 30 பந்து களை எதிர்கொண்டு 58 ஓட்டங்களைப் பெற்றனர்.

217 ஓட்டங்கள் பின்னிலையில் 2ஆவது இனிங்ஸிற்காக ஆடிய கன கரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணி சகல விக்கெட்டுக்களையும்இழந்து 104 ஓட்டங்களைப் பெற்றது. இதில் எந்த வொரு துடுப்பாட்ட வீரரும் நிலைத்து நின்று ஆடவில்லை. புந்து வீச்சில் கல் கோவன் ஐந்து விக்கெட்டுக்களைக்கைப் பற்றினார். இதன் மூலம் யாழ். இந்துக் கல்லூரி அணி இனிங்ஸ் மற்றும் 113 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. (48)

## இல்ல மெய்வல்லுநர் இன்று

(இளவாலை)

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி, இளவாலை திருக்குடும்பக் கன்னியர் மடம் மகா வித்தியாலயம் ஆகியவற்றின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று பிற்பகல் 1.00 மணிக்கு இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அதிபர் அருட்தந்தை ஜேசு தாசன் அடிகளார், இளவாலை திருக் குடும்பக் கன்னியர் மடம் மகா வித்தி யாலய அதிபர் அருட்சகோதரி ஜெய நாயகி ஆகியோரின் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் த.குருகுலராஜா,சிறப்பு விருந்தினராக இளவாலை புனிதஹென் றியரசர் கல்லூரி கனடா பழைய மாண-வர் சங்கத்தலைவர் பிறின்ஸ் கௌட்றி ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்(48)

## அராலி சில்வஸ்ரார் இளைஞர் கழகத்தின் வீதியோட்டம்

(அராலி)

அராலி வடக்கு சில்வஸ்ரார் இளைஞர் கழகம் சங்கானைப் பிரதேச செயலகத் திற்குட்பட்ட இளைஞர் கழகங்களிற்கிடையிலான விளையாட்டுப் போட்டிகளை நடாத்தி வருகின்றது.

இதன் ஒரு அங்கமாக வீதியோட்ட நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இப்போட்டிகள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணியளவில் நடைபெறவுள்ளது.

போட்டியில் பங்குபற்ற விரும்பும் இளைஞர்கள் அராலி வடக்கு சில்வஸ்ரார் இளைஞர் கழகத்துடன் தொடர்புகொள்ள முடியும்.

அத்துடன் இப் போட்டிகளில் சங்கானைப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட இளைஞர் கழகங்களினைச் சேர்ந்தவர்களே பங்குபற்ற முடியும் எனவும் அறிவிக் கப்பட்டுள்ளது. (48)

## ஆண்டு நிறைவு மென்பந்து விரைவில் நிரலிடல்

(கைதடி)

கைதடி மேற்கு சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 58ஆவது ஆண்டு விழாவை சிறப்பிக்கும் வகையில் யாழ். மாவட்ட மென்பந்து கிரிக்கெட் அணி களுக்கிடையிலான மாபெரும்மென்பந்து கிரிக்கெட் தொடரை நடாத்தவுள்ளது.

இப்போட்டிகள் யாவும் சரஸ்வதி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடை பெறவுள்ளதாகவும், இப்போட்டிக்கான நிரலிடல் எதிர்வரும் 31ஆம் திகதி மாலை 4.00 மணிக்கு சரஸ்வதி சன சமூக நிலைய மண்டபத்தில் நடைபெற வுள்ளது.

இப்போட்டித்தொடரில் பங்குகொள்ள விரும்பும் அணிகள் தமது பதிவுகளை விரைவாக மேற்கொள்ளுமாறும், பதிவு-களை மேற்கொள்ள விரும்பும் அணி கள் 0776128435 அல்லது 0779097271 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் எந்தவேளையும் தொடர்புகொள்ள முடி யும் எனவும் போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, இப்போட்டியில் கிண் ணம் வெல்லும் அணிக்கு 10 ஆயிரம் ரூபா பணப் பரிசும் வழங்கப்படவுள்ள அதேவேளை, இரண்டாமிடத்தைப் பிடிக் கும் அணிக்கு 6 ஆயிரம் ரூபா பணப் பரிசு வழங்கப்படும் எனவும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (51)

## நாளை

(அச்சுவேலி)

அச்செழு சைவப்பிரகாசவித்தியாலயத் தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய பதில் அதிபர் நா. ஜீவன் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந் தினராக யாழ்ப்பாணக் கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப் பாளர் சண். தயாளன், சிறப்பு விருந் தினர்களாக பழைய மாணவரும், கண் டாவளைப் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் பூ. ராஜ்விநோத், பழைய மாணவர் அபிவிருத்தி உத்தி யோகஸ்தர் நா. நதீஸ்குமார், கௌரவ விருந்தினராக பாடசாலை நலன் விரும் பியும்,வர்த்தகருமாகிய கிருஸ்ணகுமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இப்போட்டி நிகழ்வில் பெற்றோர், விளையாட்டு நலன் விரும்பிகள், இரசிகர்கள் என அனைவரையும் கலந்து கொண்டு போட்டியாளர்களை உற்சாகமூட்டுமாறு பாடசாலை சமூகம் கோரியுள்ளது. (03)

## வடமராட்சி கல்வி வலய சதுரங்கப் போட்டி முடிவு

வடமராட்சி வலயப் பாடசாலை களுக்கிடையிலான சதுரங்கப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

வடமராட்சி வலயப் பாடசாலை களுக்கிடையிலான சதுரங்கப் போட்டி கடந்த 18,19ஆம் திகதிகளில் பருத்தித் துறை ஹாட்லிக் கல்லூரியில் நடை பெற்றது. இதில் 15 மற்றும் 19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான குழுப் போட்டிகள் நடைபெற்றன.

வடமராட்சி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். செல்வக்குமரன் தலைமையில் நடை பெற்ற இப்போட்டியில் நடுவர்களாக ஆ. கோகுலராஜன், சு. திருச்செல்வம், தி. இராஜசிங்கம் ஆகியோர் கடமை யாற்றினர்.

இப்போட்டியில் முதல் மூன்று இடங் களைப் பிடித்த பாடசாலைகளின் விப ரம் வருமாறு:

15 வயது பிரிவு ஆண்:

முதலாமிடம் பருத்தித்துறை ஹாட் லிக் கல்லூரி, இரண்டாமிடம் உடுப் பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி, மூன்றாமிடம் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்.

15 வயதுப் பிரிவு பெண்:

முதலாமிடம் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, இரண்டாமிடம் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாட-சாலை, மூன்றாமிடம் வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி.

19 வயதுப் பிரிவு ஆண்:

முதலாமிடம் பருத்தித்துறை ஹாட் லிக் கல்லூரி, இரண்டாமிடம் நெல்லி யடி மத்திய மகாவித்தியாலயம், மூன் றாமிடம் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி.

19 வயதுப் பிரிவு பெண்:

முதலாமிடம் பருத்தித்துறை பெண் கள் உயர்தரப் பாடசாலை, இரண்டா மிடம் பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி, மூன்றாமிடம் உடுப்பிட்டி மக-ளிர் கல்லூரி.

# அனந்திக்கு புனர்வாழ்வு: வாக்களித்த மக்களுக்கும் அவமானம்!

– சாலையூரான் –

இதுவரை தமிழ் கூட்டமைப்பினர் அரசை நோக்கி மேற்கொண்ட எதிர் வினைகளின் தொடர்ச்சியாக கிராமங்களில் செயற்பாட்டிலிருக்கும் உள்ளூரமைப்புக்




களின் விபரங்களை பாதுகாப்பு தரப்பினர் ஏன் சேகரிக்கிறார்கள் என முறையிடும் அளவுக்கு இப்போது தமிழ் சூழல் தள்ளப்பட்டிருக்கிறது.

இதன் மற்றொரு விளைவாக வடமாகாண சபைக்கான விருப்பு வாக்குப் பலத்தில் இரண்டாவது நிலையில் இருக்கும் மாகாண சபை உறுப்பினர் அனந்திக்கு புனர்வாழ்வளிக்க வேண்டும் என்றொரு நிலைப்பாட்டும் வெளிப்பட்டிருக்கிறது.

கூடவே, அரசை நோக்கிய கூட்டமைப்பின் எதிர்வினையான செயற்பாடுகள் தவறானவை, நேர்த்தியான தொடர்புமுறையொன்றை அரசை நோக்கி தமிழ் கூட்டமைப்பினர் கொண்டிருக்க வேண்டும் என்ற காட்டமான விமர்சனங்களும் மக்கள் மத்தியிலிருந்து இப்போது எழ ஆரம்பித்திருக்கின்றன.

இந்த முறைப்பாடுகள் பல்வேறு மட்டங்களிலிருந்தும் எழுந்திருப்பதன் தொடர்ச்சியாக மாகாண சபையை நிர்வகிப்பதில் தாம் எதிர்கொள்ளும் சங்கடங்களை அரசுக்கு விளக்கியிருப்பதாகவும் இருப்பினும் தமது கோரிக்கைகளுக்கு அரசு இணங்கவில்லையென போக்கு காட்டும் பொறிமுறையொன்றும் கூட்டமைப்பினரிடமிருந்து வெளிப்பட்டிருக்கிறது.

எனவே வடக்கு மாகாண சபையை சுமுகமாக நகர்த்திச் செல்வதாயின் தமிழ் கூட்டமைப்பினர் அரசுத்தரப்புடன் நடந்துகொள்ள வேண்டிய முறைமை பற்றி இவ்விடத்தில் தொட்டுக்காட்ட வேண்டியிருக்கிறது..

மாகாண சபையின் செயற்பாட்டுக்கு மிக அவசியமான நிதியும் நிர்வாகமும் மத்தியில் அரசிடமே உள்ளன. சபையின் செயற்பாடுகளை நிர்வாக ரீதியாக முறையாக முன்னெடுப்பதற்கு மாகாணசபைகளில் நிலவும் வெற்றிடங்கள் நிரப்பப்படுவது அவசியம். இதற்கான அங்கீகாரமும் ஆளுநர் ஊடாகவே வழிப்பட வேண்டியிருக்கிறது.

தேவையான நிதிக்காக திட்டங்களை முன்மொழியும் அதிகாரம் சபை உறுப்பினர்களுக்கு இருப்பினும் அந்நிதியை மத்தியிலிருந்து பெற்றுக்கொள்வதற்கான சிபார்சும் திட்டங்களை அங்கீகரிப்பதற்கான அதிகாரமும் ஆளுநரிடமே இருக்கிறது.

அரசுடன் முரண்படுவதிலேயே பழக்கப்பட்டுப்போன தமிழ்க் கூட்டமைப்பின் தலைவர்கள் சிலவேளை இதனை கவனத்திலெடுக்க தவறியிருக்கலாம்.

ஆனால் சட்டத்தின் செயற்பாடுகளில் நன்கு பரிச்சயமான வடக்கின் முதல்வர், அதுவும் மக்களுக்கு ஏதாவது நன்மைகளை பெற்றுக்கொடுப்பதிலேயே தான் எப்போதும் குறியாக இருப்பதாக கூறிக்கொண்டிருக்கும் முதல்வர், எடுத்த எடுப்பிலேயே வடக்கின் ஆளுநருடன் தன்னை எப்படி முரண்படுத்திக் கொண்டார் என்பதை புரிந்து கொள்ள முடியாமலே இருக்கிறது.

இப்போது பிந்தியதாக அனந்தி எதிர்கொண்டிருக்கும் சங்கடம் மிகவும் பரிதாபகரமானது. எதனைக்கொண்டாவது அரசை நெருக்கடிக்குள் தள்ளிவிட வேண்டும் என்கிற பேரவாவில் அனந்தியை தாம் எவ்வாறு கையாள்கிறோம் என்பதை அறியாமலே அவரை தமிழ் கூட்டமைப்பினர் கையாண்டதால் ஏற்பட்டிருக்கும் நிலை இது.

அனந்தியின் கணவரை தொடர்புபடுத்தி அவரை நோக்கி எச்சரிக்கையான பார்வை பாதுகாப்பு தரப்புக்கு இருப்பது தமிழ் கூட்டமைப்பினருக்கு தெரியாத விடயமல்ல. எனவே அனந்தியின் செயற்பாடுகள் எவ்வாறு இருக்க வேண்டும். அவர் எதைப்பற்றி எவ்வாறு கருத்துக் கூறலாம் என்பதை கூட்டமைப்பின் தலைவர்கள் கண்டிப்பாக வழிப்படுத்தியிருக்க வேண்டும்.


ஆனால், மார்ச் ஜெனிவா தொடரில் சர்வதேசத்தைக் கொண்டு பாடம் புகட்டப் போவதாக தமிழ் மக்களை ஏமாற்றுகின்ற அவதியில் அரசின் மனித உரிமைகள் விவகாரத்தில் அனந்தியின் செயற்பாடு எவ்வாறு அவரைப்பாதிக்கும் என்பதை தமிழ் கூட்டமைப்பினர் காணத்தவறியதன் விளைவை இப்போது அனந்தி அனுபவிக்க நேரிட்டிருக்கிறது.

அனந்தி புனர்வாழ்வுக்குட்படுத்தப்படுவதை தமிழ் கூட்டமைப்பினர் அரசியலாக்கி ஆதாயம்பெற முனையலாம்.

ஆனால் தமிழ் மக்களி[illegible]மிருந்து சுமார் எண்பதாயி[illegible] வாக்குகளை பெற்றுக் கொண்ட அனந்தி புனர்வாழ்வுக்குட்படுத்தப்படுவது வடக்கு மாகாண சபைக்கு மட்டுமல்ல: அவருக்கு வாக்களித்த தமிழ் மக்களுக்கும் பெருத்த அவமானமென்பதை முதல்வர் புரிந்துகொள்ள வேண்டும்.

# தேசம் என்கிற கற்பிதத்தின் வன்முறை : அது இன்று வங்கதேச இந்துக்கள் மீது

– அ.மார்க்ஸ் –



"தேசம் ஒரு கற்பிதம். அது இயற்கையான ஒன்றல்ல; அரசியல் ரீதியாக மேற்கொள்ளப்படும் கட்டமைப்பு" என்கிற கருத்தை நான் முதல் முதலாகத் தமிழுக்குக் கொண்டு வந்தபோது, அப்பா எத்தனை எதிர்ப்புகள்! இன்னும் அந்த எதிர்ப்புகளின் மத்தியில்தான் வாழ்ந்து கொண்டுள்ளேன்.. எனினும் அதற்குப் பிந்திய கால் நூற்றாண்டு கால அனுபவத்தில் இந்தக் கருத்தில் எள்ளளவும் மாற்றம் செய்துகொள்வதற்கு எனக்கு எந்தத் தேவையும் ஏற்பட்டுவிடவில்லை.

எத்தகைய அரசியல் முன்னெடுக்கப்படுகிறதோ அந்த நோக்கிலிருந்து தேசத்தின் அடிப்படை அடையாளம் கட்டமைக்கப்படுகிறது. அது மொழி, இனம், மதம் எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம். ஆனால் எதுவும் இயற்கையானதல்ல என்பதுதான் (it is constructed, not natural). அது மாத்திரமல்ல, அந்த அடிப்படையில் தேசம் வரையறுக்கப்படும்போது, அந்த வரையறைக்குள் அனைத்து மக்களும் கையடக்கப்படுவதில்லை. It is not a remainderless பசயளி. ஏதேனும் ஒரு பிரிவினர் அவ் வரையறையின் "மிச்சங்களாக" எஞ்சி விடுகின்றனர். கட்டமைக்கப்படும் தேசம் அவர்களின் மீதான வன்முறையாகி விடுகிறது.

பாகிஸ்தான் என்றொரு தேசம் சென்ற நூற்றாண்டின் இடைப்பகுதியில் இவ்வாறு கட்டமைக்கப்பட்டபோது இப்படி "மதம்" அதன் அடிப்படை அடையாளமாகியது. ஆனாலும் இந்த அடிப்படையில் கட்டமைக்கப்பட்ட பாகிஸ்தானை "இஸ்லாம்" என்கிற மத அடையாளத்தால் இறுக்கிப் பிடித்து நிறுத்திவிட இயலவில்லை. வங்க தேச மக்கள் அதைத் தம் மீதான வன்முறையாகவே உணர்ந்தனர்.

விளைவு, 1973இல் பாகிஸ்தானாகவும் வங்க தேசமாகவும் அது உடைந்தது.

எனினும் இஸ்லாமை தேசத்தின் அடையாளமாகக் கற்பிதம் செய்த இஸ்லாமியவாதிகளால் இதை ஏற்க இயலவில்லை. முஜிபுர் ரஹ்மானின் தலைமையில் எழுந்த விடுதலைப் போரின்போது அதற்கு எதிராக ஜமாத் ஏ இஸ்லாமி பாகிஸ்தானின் படையுடன் இணைந்து செயற்பட்டது. வங்க விடுதலையை ஆதரித்த அறிஜீவிகள் கொல்லப்படுவதற்கும் பெண்கள் பாலியல் வன்முறைக்கு ஆளாக்கப்படுவதற்கும் அது துணை போகியது. ஜமாத் ஏ இஸ்லாமி மீது போர்க்குற்ற விசாரணை இப்போது நடைபெறுகிறது. போர்க் குற்றங்கள் புரிந்த ஜமாத் ஏ இஸ்லாமிகளுக்கு ஆயுள் தண்டனை போதாது என இன்று வங்க தேச முஸ்லிம் இளைஞர்கள் போராடுகின்றனர் (ஷபாகா இயக்கம்).


முன்னதாக, வங்க மொழியினராக இருந்தபோதிலும் மேற்கு வங்கத்தினரும் கிழக்கு வங்கத்தினரும் மதத்தால் வேறுபட்டதை அடையாளமாகக் கொண்டு வங்க தேசத்தை பிரிட்டிஷ் அரசு கிழக்கு, மேற்கு என இரண்டாகப் பிரித்தது (1905). மே. வங்கத்தில் வாழ்ந்த 25 வீதம் முஸ்லிம்களும், கிழக்கு வங்கத்தில் இருந்த 8.5 வீதம் இந்துக்களும் சிறுபான்மை ஆயினர்.

தேசங்கள் என்பன ஒரு மிகச் சமீபத்திய கற்பனை. மூதாதையரின் நாடு என்கிற உணர்வு அதனிலும் பழையது. வாழ்வோடும், வாழ்நிலை உத்தரவாதங்களில் ஒன்றான நிலத்தோடும் இரத்த உறவு கொண்டது அது. அந்த வகையில் கிழக்கு வங்கத்திலுள்ள இந்துக்களுக்கும் மே. வங்கத்திலுள்ள முஸ்லிம்களுக்கும் அது அதுவே அவர்களின் நாடு. ஆனால் ஜமாத் ஏ இஸ்லாமியைப் பொருத்த மட்டில் ஒரு சராசரி கிழக்கு பாகிஸ்தானி அல்லது வங்கதேசத்தவரின் (normative citizen) அடையாளம் என்பது ஒரு "முஸ்லிம் வங்க மொழி ஆண்" அல்லது "வங்க மொழி முஸ்லிம் ஆண்" என்பதுதான். அங்கிருந்த 8.5 சதவீத இந்துக்களும் அவர்களைப் பொறுத்தமட்டில் வங்கதேசிகளல்ல இந்தியாவில் உள்ள இந்துத்துவவாதிகள் எப்படி ஒரு சராசரி இந்திய அடையாளத்தை "இந்து ஆண்" என்கிற வடிவில் வரையறுத்து உணர்கின்றனரோ அப்படி.

இன்று ஷேக் ஹசீனா அரசு தன் பலவீனங்கள், ஊழல்கள் ஆகியவற்றிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ள போர்க் குற்ற விசாரணை என்பதையும் அதற்கான மக்கள் ஆதரவையும் பயன்படுத்திக் கொள்கிறது. பொருளாதார ரீதியிலும், இயக்கக் காட்டுப்பாடு என்கிற அடிப்படையிலும் மிக வலுவான ஜமாத் ஏ இஸ்லாமி இயக்கம் அரசின் இந்த நடவடிக்கைக்கு எதிரான போராட்டங்களை (எ.கா: ஹெ.்.பாஜெட் இயக்கம்) முன்னெடுக்கிறது.

இன்னொரு பக்கம் தங்கள் மீதான தாக்குதலுக்கு ஜமாத் ஏ இஸ்லாமியின் எதிர்வினை 2001இலும், பின்னர் இன்றைய அரசியல் சூழலிலும் வங்கதேச இந்துச்சிறுபான்மையினர் மீது திரும்பியுள்ளது ஏனெனில் இவர்கள் "சராசரி வங்க தேச அடையாளத்தை"ச் சுமந்தவர்களல்ல. பெரிய அளவி[illegible] அவர்கள் தாக்கப்பட்டும், அவர்க[illegible] சொத்துக்கள் அழிக்கப்பட்டும், பெண்கள் வான்முறைக்குள்ளாக்கப்பட்டும் உள்ளனர்.

ஒன்றைச் சொல்ல வேண்டும் இந்துச் சிறுபான்மையினர் மீதான இவ்வன்முறைக்குக் காரணமாக வெறும் ஜமாத் ஏ இஸ்லாமி மற்றும் அதன் கூட்டணிக் கட்சியாகிய கலிதா ஸியாவின் வங்க தேசியக் கட்சியை மட்டும் சொல்லி நிறுத்தி விட இயலாது. ஓரளவு மதச்சார்பற்ற அடையாளத்திற்குரிய ஹஸீனாவின் அவாமி லீகிற்குள்ளும் கூட இந்துக்களை அந்நாட்டிற்கு உரியவர்களாகப் பார்க்காத நிலை ஏற்படுள்ளது.



# ஜில்லா - வசீகர கனவுப் பொய்கை!

– சுரேஷ் கண்ணன் –

ஜில்லா திரைப்படம் கண்டு மகிழ்ந்தேன். நிற்க, இங்கே வணிக நோக்கு சினிமாக்களின் அபத்தங்களைப் பற்றியோ அதன் மூலம் பார்வையாளனாக எனக்கு நிகழும் மனத்துன்பியல்களையோ அல்லது விஜய்யையும் அவர் படங்களையும் பிரத்யேகமாக குறி வைத்து கிண்டலடிப்பதோ என் நோக்கமல்ல. ஒரு அப்பட்டமான வணிகமசாலா திரைப் படத்தில் குரசேவாவின் குறியீட்டு படிமங்களை தேடிப் பார்க்குமளவிற்கு புத்தி பேதலித்தவன் அல்ல நான்.

ஜில்லா திரைப்படம் அதன் பிரத்யேக பார்வையாளர்களை திருப்திப்படுத்தும் நோக்கத்தை முழுமையாக நிறைவேற்றியிருக்கிறது. விஜய் ரசிகர்களின் எதிர்பார்ப்புகளை குறைவில்லாமல் பூர்த்தி செய்திருக்கிறது. தங்களின் முயற்சியில் விஜய்யும் இதன் இயக்குநரும் வெற்றி பெற்றிருக்கிறார்கள் என்பதை மறுப்பதற்கில்லை.

"இந்தப் பையன் தமிழ் சினிமாவில் பெரிய ஆளாக வருவான்" - என்று விஜய் நடிக்கத் துவங்கிய காலத்திலேயே மாண்புமிகு மாணவனின் ஒரு ஸ்டில்லை வைத்தே தீர்க்க தரிசனம் கூறிய சுந்தரராமசாமியின் கூற்றை, (நன்றி; நினைவின் நதியில்) விஜய் வருடத்திற்கு வருடம் மெய்ப்பித்துக் கொண்டே போகிறார்.

80-களின் தமிழ் சினிமாக்கள் போலவே இந்த சமகால திரைப்படமும் நாயகனின் சிறுவயதுக் காட்சிகளுடன் துவங்குகிறது. தனது தந்தை காவல்துறை அதிகாரி ஒருவரால் படுகொலை செய்யப்படுவதை கண்ணெதிரே பார்த்ததின் காரணமாக காவல்துறை மீதும் காக்கி நிறத்தின் மீதும் வெஞ்சினமும் வெறுப்பும் கொள்கிறார் சிறுவிஜய். தமிழ் சினிமா நாயகர்களின் அடிப்படைத்தகுதியான "அநாதை" என்கிற நிலையை விஜய் அடைவதால், தன் குடும்பத்தைக் காப்பாற்றிய சிறுவன் என்கிற காரணத்தின் மீது எழுந்த அபிமானத்தில் அந்த ஊரின் தாதாவான மோகன்லால் இவரை தத்தெடுத்துக் கொள்கிறார். எவ்வித குற்றவுணர்வுமில்லாமல் தாதாவின் தீயசெயல்களுக்கு ஜாலியாக துணைபோகிறார் விஜய்.

ரவா உப்புமாவின் மீது வெறுப்புற்று வீட்டை விட்டு வெளியேறி வேறு உணவு தேடிப் போகும் ஒருவன் செல்லுமிடமெல்லாம் ரவா உப்புமாவால் துரத்தப்பட்டு கடைசியில் வீட்டில் செய்யப்பட்ட உப்புமாவையே உண்ண நேரும் ஒரு கர்ணபரம்பரைக் கதை போல் காவற்துறையின் மீதும் காக்கி நிறத்தின் மீது கடும் வெறுப்புக் கொண்டிருக்கும் விஜய் சந்தர்ப்ப சூழ்நிலையால் உலகிலேயே மிகப் பெரிய காவல்துறை அதிகாரியாக ஆகும்படியான திடுக்கிடும் திருப்பத்துடன் திரைக்கதை சிறப்பாக அமைந்திருக்கிறது.

பெருவிஜய் அறிமுகமாகும் துவக்க காட்சியே அமர்க்களம். கிறித்தவ சேவை அமைப்பொன்று (மத நுண்ணரசியல் தேடுபவர்களுக்கான வாய்ப்பு) தங்களது மருத்துவமனையை ரவுடிகள் கைப்பற்றிக் கொள்ளுவதால் காவல்துறையிடம் புகார் தருகிறது. பொலீஸ்காரர்கள் அனைவரையும் பொறிபறக்க துரத்தி விடுகிறார் ரவுடிசார். (எதற்கு வம்பு). சட்டரீதியான இந்த முயற்சி சரிவராமல் போகவே தாதா மோகன்லாலிடம் வந்து முறையிடுகிறது கிறித்தவ அமைப்பு. லால் 50 பேர்களை அனுப்புகிறார். அவர்களும் ரவுடிசாரிடம் தோற்றுப் போய் சுவர் உடைபட பறந்து வெளியே வந்து விழுகிறார்கள். அதன்பிறகுதான் தன்னுடைய பிரம்மாஸ்திரத்தை பயன்படுத்த முடிவுசெய்கிறார் மோகன்லால். அந்த பிரம்மாஸ்திரம்தான் விஜய்.

"கலெக்டராலயே சாதிக்க முடியலையாம். நம்ம கிட்ட வர்றாங்க... டைவர்ஸ் கேசெல்லாம் வருதுப்பா...." என்கிற கவுண்டரின் வசனம் உடனடி நினைவிற்கு மனதில் தோன்றினாலும் அதை அழித்து விட்டு சராசரி மனநிலை-யோடு பார்க்கும் போது பரவசமாக இருக்கிறது. சாமான்யர்கள் யாராலும் செய்ய முடியாத சாதனையை நிகழ்த்துவதுதானே நாயகனுக்கு முன்னுள்ள சவால் என்கிற அடிப்படையை பூர்த்தி செய்யும் விதமாக அந்த ரவுடிக்கூட்டத்தை துரத்தி அநீதியை நிலைநாட்டுகிறார் விஜய். (தப்பெல்லாம் அவர் மட்டும்தான் செய்வாராம்).




காக்கி நிறத்தின் மீது கடும் கடுப்பு கொண்டிருக்கும் கதா நாயகன், தன்னுடைய பால்ய நண்பனொருவன் காவல்துறையில் இணைந்து அதற்கான சீருடையை முதன்முதலில் இவரிடம் காண்பிக்க முன்வரும் போது கோபம் தாங்காமல் அவர் மீது பாய்ந்து சீருடை-யைக் கிழித்து முக்கால் நிர்வாணமாக்கி விடுகிறார். படத்தின் நாயகியான காஜல்அகர்வாலும் இது போன்றதொரு காக்கி சீருடையில் அறி-முகமாகும் போது, பால்ய நண்பனுக்கு நிகழ்ந்த அதே முக்கால் நிர்வாண விபத்து இவருக்கும் நிகழாதா என்று பாலியல் வறட்சிகொண்ட தமிழ் சமூகம் ஆவலாக எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் போது, தான் ஒரு தமிழ் கலாசார வெளியில் திரையிடப்போகும் பிரதி ஒன்றினுள் இயங்கிக் கொண்டிருக்கிறோம் என்கிற தன்னுணர்வு காரணமாக அந்த விபத்தை தவிர்த்து விடுகிறார் விஜய். வாழ்க. (அல்லது ஒழிக).

படத்தில் மோகன்லால் சிவனாகவும் விஜய் சார் சக்தியாகவுமான உருவகப் பாத்திரங்களில் நடித்திருக்கிறார்கள். நியாயமாகப் பார்த்தால் இந்தப் படத்தை எதிர்ப்பதற்கு இந்து அமைப்பைச் சார்ந்தவர்களுக்கு ஒரு பொன்னான வாய்ப்பு இந்தப் படத்தில் மறைமுகமாக உறைந்திருக்கிறது. இப்படியொரு டம்மியான சிவனை தமிழ் சினிமா உலகம் கண்டதேயில்லை. "நான் சிவன்டா.. அழிக்கப் பிறந்தவன்" என்று ஆக்ரோஷமாக முழங்கி விட்டு உடனேயே தொண்டைக் கமறலுடன் ஒடுங்கும் ஹொலிவுட் சினிமா கம்பெனியின் சிங்கம் போல அமைதியாக அமர்ந்து விடும் மோகன்லால் ஏன் இந்தப் படத்தை ஒப்புக் கொண்டார் என்றே தெரியவில்லை. சேட்டனுக்கு அப்படியென்ன பணப்பிரச்சினை?

"ஊருக்கே ராஜாவாக இருந்தாலும் முடிவெட்டும் போது தலைகுனிந்துதான் ஆக வேண்டும்" என்கிற மேற்கோளுக்கிணங்க உலகமே போற்றிப் புகழும் நடிகனாக இருந்தாலும் தமிழ் சினிமாவிற்குள் வந்தால் அதன் பிரத்யேக கட்டமைப்பிற்குள் புழுங்கி நாறத்தான் வேண்டும்.

அதுவரை தாதாவாகிய தன்னுடைய வளர்ப்புத் தந்தையுடன் இணைந்து கடத்தல்களையும் அநீதி-களையும் செய்து வந்திருந்த நாயகன் (அவர் செய்வதால் அது நமக்கு நன்மையாகத்தான் தெரியும்) காவல்துறை சீருடை அணிந்தவுடன் ஒரு பெரிய விபத்தில் இழக்கும் மனித உயிர்களையும் அதற்குப் பின்னே புதைந்து போகும் ஆயிரம் கனவுகளையும் கண்டவுடன் மாமன்னர் அசோக சர்க்கவர்த்தி போல மனம் வெதும்பி திருந்தி, தன் தாதா தந்தையையே எதிர்க்கத் துணிகிறார். முதல் காட்சியிலேயே மோகன்லாலும் விஜய்யும் இணைந்து வாஞ்சையோடு ஆடும் நடனக் காட்சியைக் கண்டவுடனேயே, பிறகு இருவரும் சண்டைக் கோழிகளாக சிலுப்பிக் கொள்ளப் போகிறார்கள் என்பதையும் கிளைமாக்சில் மீண்டும் இணைந்து விடப் போகிறார்கள் என்பதையும் நீங்கள் யூகிக்காவிட்டால், தமிழ்நாட்டில் இருக்கவே தகுதியில்லாத ஒரு நபராக மாறி விடுகிறீர்கள்.

எல்லாப் பாடல்களுமே கடுமையான ரொக் இசையின் பின்னணியில் நூறு எல்.ஆர்.ஈஸ்வரி இணைந்து பாடுவது போன்ற அதிதீவிர கடுமைத்தன்மையுடன் இருக்கின்றன. காலம் காலமாக நூற்றிருபது வார்த்தைகளுக்குள் இயங்கும் தமிழ் சினிமாப் பாடல்களை வைத்து ஒரு மென்பொருளை உருவாக்கியிருக்கிறாராம் வைரமுத்துவின் மகன் மதன்கார்க்கி. அது போலவே சமகால இசையமைப்பாளர்களும் தான் விரும்புகிற நகலெடுக்கிற எல்லா ஒலிகளையும் மிக்சியில் போட்டு அரைத்து நாராசமான சங்கீதத்தை உருவாக்குவதில் பாண்டித்தியம் உள்ளவர்களாக இருக்கிறார்கள். அதிலும் டிஎஸ்பி என்கிற ஒருவர் ஒரே ஒரு டப்பாங்குத்து டியூனை வைத்துக் கொண்டு ஆந்திராவையே ஆட்டிப் படைக்கும் அதகளம் இருக்கிறதே... சொல்லி மாளாது.

சரி போதும் நிறுத்திக் கொள்கிறேன். எனக்கு வெகுஜன சினிமாவின் மீது எவ்வித கோபமும் கிடையாது. ஆனால் அதில் ரசிக்க வைக்கிற மாதிரி ஏதாவது ஒரு அம்சம் இருந்தால் கூட போதும். சகித்துக் கொண்டு பாராட்டி விடலாம். ஆனால் நீண்ட காலமாக சில குறிப்பிட்ட டெம்ப்ளேட் திரைக்கதைகளை வைத்துக் கொண்டு அந்தந்த நாயகர்களுக்கு ஏற்றாற் போல் எக்ஸ்டரா பட்டன் வைத்து அல்லது நீக்கி ரெடிமேட் சட்டைகளை தொடர்ந்து சலிப்பில்லாமல் தயாரித்துக் கொண்டே இருக்கிறதே.. இவர்களுக்கெல்லாம் சலிப்பாகவே இருக்காதா? மனச்சாட்சியே உறுத்தாதா? வணிக வெற்றியும் தன் இருப்பை தக்கவைத்துக் கொள்வதுமான போராட்டமும்தான் பிரதானமானதா? நகலெடுப்பதற்க்க பார்க்கும் ஹொலிவுட் மற்றும் கொரியத் திரைப்படங்களில் இருக்கும் சுவாரசியத்தைக் கூட நகலெடுக்க வேண்டும் என்று தோன்றாதா என்று வழக்கமான பல கேள்விகள் தோன்றுகின்றன. இதையே காலம் காலமாக நம் பார்வையாளர்களும் எப்படி ரசிக்கிறார்கள் என்கிற மர்மத்தின் உளவியலையும் புரிந்து கொள்ள முடியவில்லை.

தமிழ் சினிமாவை திட்ட மாட்டேன் என்று சொல்லி விட்டு... ஏன் இப்படி என்று சிலருக்குத் தோன்றலாம். ஒரு திரைப்படத்தில் அந்நியரான செந்திலை காரணமேயில்லாமலே தன்னிச்சையான உந்துததால் அடித்துக் கொண்டேயிருப்பார் கவுண்டமணி. சில பல தாக்குதல்களுக்குப் பிறகு பொறுக்க முடியாமல் செந்தில் இது குறித்து பஞ்சாயத்து கூட்ட எல்லோரும் கவுண்டமணி யை கண்டித்து அறிவுரைப்பார்கள்.... "என்னமோ தெரியல.. இவனைப் பார்த்தாலே எனக்கு அடிக்கணும்னே தோணுது... சரி. இங்க வாடா... உன்னை இனிமே அடிக்க மாட்டேன். பயப்படாதே.. கிட்ட வா..." என்று சொல்லும் கவுண்டமணி அவர் அருகே வந்தவுடன் தன்னையறியாமல் அடிக்க ஆரம்பித்து விடுவார்.

அப்படித்தான் தமிழ் சினிமாவைப் பற்றி எழுதுவதும்.

---

## ஐந்து நூல்கள்!

ஐந்தாவது வேதம் எனப்படும் மகாபாரதத்தில் ஐந்து. சிறப்பான நூல்கள் உள்ளன.

- ☐ கிருஷ்ணன், அர்ஜுனனுக்கு அருளியது "பகவத்கீதை"
- ☐ பீஷமர், கிருஷ்ணர் முன்னிலையில் அருளியது "விஷ்ணு சஹஸ்ரநாமம்"
- ☐ விதுரர், திருதிராஷ்டிரனுக்கு அருளியது "விதுரநீதி"
- ☐ ஸநத்ஸஜாதர், திருதாஷ்டிரனுக்கு அருளியது "ஸநத்ஸஜாதீயம்"
- ☐ யஷர் கேட்ட கேள்விகளுக்கு தருமர் கூறிய விடைகள் "யஷப்ரச்நம்".

---

## ஏரிகள்... சில சேதிகள்!




- உலகில் உயரமான ஏரி பொலிவியாவிலுள்ள டிடிகாகா ஏரி. கடல் மட்டத்திற்கு மேல் 12,000 அடிகள்.
- கடல் என்று அழைக்கப்படும் உலகிலேயே மிகப்பெரிய ஏரி காஸ்பியன்.
- உலகிலேயே பெரிய உப்பு நீர் ஏரியும் காஸ்பியன்தான்.
- ஆயிரம் ஏரி நாடு என்று அழைக்கப்படுவது பின்லாந்து.
- உலகில் பெரிய நன்னீர் ஏரி சுபீரியர் ஏரி. வட அமெரிக்காவில் உள்ளது. 31,200 சதுர மைல் பரப்புள்ளது.
- உலகில் மனிதனால் உருவாக்கப்பட்ட மிகப்பெரிய ஏரி நாசர் ஏரி (எகிப்து).
- பூமிக்கடியில் உள்ள ஏரியும் உண்டு! அண்டார்டிகாவில் உள்ள ரஷ்யாவின் வோஸ்டோக் நிலையத்தின் கீழே ஓடும் வோஸ்டோக் ஏரி சுமார் 250 கி.மீற்றர் நீளமும், 40 கி.மீற்றர் அகலமும் கொண்டது. ஆனால், இந்த ஏரியின் நீரை இதுவரை எவரும் தொட்டதில்லை. ஏனெனில், இந்த ஏரி சுமார் நான்கு கி.மீற்றர் ஆழமுள்ள பனிக்கட்டிகளின் அடியில் உள்ளது. அப்போதும், இந்த ஏரி தண்ணீராகவே அவ்வளவு ஆழத்தில் ஓடுவதுதான் இதன் சிறப்பம்சம். பூமியின் மையக் கருவிலிருந்து வரும் வெப்பமே, இந்த ஏரி அவ்வளவு ஆழத்திலும் உறையாமல் தண்ணீராகவே ஓடுவதற்குக் காரணமாகும்.

# சிறுவர் முரசு



# அன்பான பிள்ளைகளே!... காலை உணவைத் தவிர்க்காதீர்கள்!





நலந்தானா? உடலும் உள்ளமும் நலந்தானா? நன்றாகப் படிப்பது, நன்றாக விளையாடுவது, அளவான நேரத்திற்கு நண்பர் - நண்பிகளுடன் இருப்பது - உரையாடுவது, பிறகு நன்றாகத் தூங்கி எழுந்து, அன்றாடக் கடமைகளைச் செய்வீர்கள் என்பது எமக்குத் தெரியும். எள் என்பதற்குள் எண்ணையாக இருக்கும் சுறுசுறுப்புக்குச் சொந்தக்காரர்களான தேனீக்கள் அல்லவா நீங்கள்! ஒரு முக்கியமான செய்தியை உங்களுக்கு வேண்டுகோளாக சொல்லப் போகிறோம்.

ஏனென்றால் உங்களைப்போல் பிள்ளைகள் அறிவுரை, ஆலோசனை என்றாலே முகம் சுளிக்கிறீர்கள் அல்லவா? அதனால் தான் வேண்டுகோள் என்றேன். உங்களில் பலரும் பள்ளிக்குப் புறப்படும்முன் காலை உணவை - சிற்றுண்டியை - (Break fast) சரியாகச் சாப்பிடாமல் உரிய நேரத்தில் அதிகாலையிலே எழாமல், தாமதித்து எழுந்து, உங்கள் அம்மாவைப் போட்டு வதைக்கிறீங்க - சாப்பிடாமலேயே - பஸ் வந்ததும் வகுப்புக்கு நேரமாகிவிட்டது என்று நெருக்கிக் கூறி, பட்டினியாகவோ, அல்லது அரை வயிற்றுக்குச் சாப்பிட்டு, மீதியை அப்படியே போட்டுவிட்டு அரக்கப் பறக்க ஓடுகிறீர்கள்! அது உங்க வளர்ச்சியை ரொம்ப ரொம்பப் பாதிக்கும். உடல் வளர்ச்சியை மட்டுமல்ல அறிவு வளர்ச்சி, வகுப்பில் அமர்ந்து பாடங்களைக் கேட்டு உள்வாங்கி மனதில் பதியவைப்பதற்கு - காலை உணவைத் தவிர்த்தல் உதவவே உதவாது - மாறாக, வகுப்பில் சொல்லிக் கொடுப்பதை மூளை ஏற்பதில் சுறுசுறுப்பு காட்ட இயலாது. ஏன் தெரியுமா? நமது உணவு - உங்களுக்குத் தெரியுமா? செரிமானமாகும்போது, அதனைச் சர்க்கரையாக மாற்றித்தானே நமது மூளையை இரதத ஓட்டத்தின் மூலம் மிகவும் சுறுசுறுப்புடன் இயங்க வைக்கிறது.

காலை உணவை - முதல்நாள் இரவோ, மாலையோ சாப்பிட்டு பொழுது விடிந்து எழுந்தவுடன், வயிறு மிகவும் காலியாகி இருக்கும். அதனை நன்கு உண்டு நிரப்புவது அவசியமோ அவசியம்! தெரிகிறதா தம்பிகளே, தங்கைகளே?

ஒழுங்காக காலைச் சிற்றுண்டி உணவை, சரியாகச் சாப்பிட்ட பல பள்ளிக் குழந்தைகள் நல்ல நினைவு வன்மை (Memory) ஏற்படுவதால் பாடங்களை ஆசிரியர்கள் சொல்லிக் கொடுக்கும் போது நல்ல முறையில் உள்வாங்கி, மனதில் நிலைநிறுத்த முடிகிறது.

எனவே, நீங்கள் நல்ல மதிப்பெண் பெறுவதற்கு காலை உணவை ஒழுங்காக நல்ல முறையில் சாப்பிட்டுப் பள்ளிகூடத்திற்குச் செல்லுங்கள் நன்றாகப் படிக்கவும், தேர்வில் ஏராளமான மதிப்பெண் பெறவும், வீட்டில் தாய், தந்தை மகிழும் நிலை உங்களுக்கு ஏற்படும் - செய்வீர்களா செல்லங்களே.....!

# பூமிக்குள் ஒரு பயணம்



நீங்கள் பேலம் குகைகளுக்குப் போயிருக்கிறீர்களா? (Belum caves) அது, நமது அண்டைய நாடான இந்தியாவின் கர்னூல் மாவட்டத்தில் அமைந்துள்ளது. இந்தியக் குகைகளிலேயே இது இரண்டாவது நீண்ட பெரிய குகையாகும். இந்தக் குகைக்குப் போனால், நீங்களாகத் தனித்துத் திரிய ஆரம்பித்து விடாதீர்கள்.

ஏனென்றால், நீங்கள காணாமற்போகக்கூடும். தொண்டை கிழிய நீங்கள் கத்தினாலும், உங்கள் உதவிக்கு வரயாரும் அருகே இருக்கமாட்டார்கள்.

இந்தக் குகைகள், விவசாய நிலங்களுக்குக் கீழே உள்ளன. 3.5 கிலோ மீற்றர் நீளமுள்ள இந்தக் குகையில், வெறும் 2 கிலோ மீற்றர் தூரம்தான் பொதும்க்களுக்குத் திறந்துவிடப்பட்டுள்ளது.

வழிகாட்டியின் உதவியோடுதான் உங்கள் பயணத்தைத் தொடரமுடியும். உண்மையிலேயே அது உங்கள் மூச்சை நிறுத்தக்கூடிய இடம்தான் உள்ளே அவ்வளவு இறுக்கமாக இருக்கிறது. நல்வாய்ப்பாக, ஆந்திரப்பிரதேச சுற்றுலாக் கழகம், காற்று போய்வர, ஆங்காங்கே சில அமைப்புகளை நிறுவியுள்ளது. அதனால் அது ஓரளவுக்குச் சிரமமில்லாமல் இருக்கிறது.

குகைக்குள் நுழைவதற்கு ஒரு சிறு ஓட்டை வழியாக நீங்கள் இறங்க வேண்டும். அந்தக் குகை, ஒன்றுக்கொன்று தொடர்புடைய அறைகளாக இருப்பதைக் காணலாம்.

நிலத்துக்கடியில் உள்ள ஆறு, மெதுவான சுண்ணாம்புக் கற்களை ஊடுருவி அறுத்துக் கொண்டு போனதால், இந்தக் குகை உண்டாகியிருக்கிறது. குகையின் சில இடங்களில் பாறையிலிருந்து நீர்வடிவதைப் பார்க்கலாம். இந்தக் குகையில் நீங்கள் அதிகம் நடக்க வேண்டியிருக்கும்.

சில இடங்களில் தவழ்ந்தும் போக நேரலாம். ஆகவே, விரைவில் களைப் படைந்து விடுவீர்கள். அதற்குத்தக்க ஆடைகளும், காலணிகளும் நீங்கள் கொண்டு செல்ல வேண்டும்.

இந்தக் குகைக்கு, தரை மட்டத்திலிருந்து மூன்று இடங்களிலிருந்து பாதைகள் உள்ளன. ஆனால், அவற்றில் இரண்டை மூடிவிட்டார்கள். பல இடங்களில் நீங்கள் தவழ்ந்து, நகர்ந்து செல்ல வேண்டியிருக்கிறது.

குகையின் ஆழமான பகுதி, தரை மட்டத்திலிருந்து 150 அடிக்குக் கீழே

# பேலம் குகைகள்



இருக்கிறது. அதை பாதாள கங்கா என்று அழைக்கின்றனர். அங்கே, ஒரு வற்றாத நீரூற்றுக் காணப்படுகிறது. மற்றொரு அறைக்கு கோடி வீங்காயலு எனறு பெயரிட்டுள்ளனர். அங்கு, கொமபு போன்ற வடிவத்தில் சுண்ணாம்புக்கல் அமைப்பு இருக்கிறது. வேறொரு அறையை சப்தஸ்வரலகுகர் என்று அழைக்கின்றனர். அதாவது, ஏழு சுவரங்கள் (ராக இயல்புகள்) கொண்ட குகை.

அங்கு அமைந்துள்ள சுண்ணாம்புப்



படிவங்களிலிருந்து உலோக ஒலிகள் கேட்கின்றன.

திரும்பி வரும்போது, ஊர்ந்து செல்லும் ஒரு வழியில் சென்றால் இருட்டான ஒரு பகுதி வருகிறது. அது மிகவும் அச்சமூட்டக்கூடியதாகவும், வியப்பூட்டக் கூடியதாகவும் உள்ளது. வீர சாகசம் செய்த ஓர் உணர்வை, அந்த இடத்திற்குச் சென்று வருவதன் மூலம் நாம் பெற முடியும். அந்தக் குகையில், மக்கள் சென்றறியாத சில இடங்களும், குகை வெடிப்புகளும் உள்ளன.


இந்தக் குகைகளுக்கு முடிவே இல்லாதது போலத் தொடராக உள்ளன.1,000 ஆண்டுகளுக்கு முன்னதாகவே உள்ளூர்வாசிகளுக்கு இந்தக் குகை பற்றித் தெரியும் என்று வழிகாட்டி சொன்னார். இயேசு கிறிஸ்து பிறப்பதற்கு 4,500 ஆண்டுகளுக்கு முன்பாகவே, மனிதர்கள் அங்கு வாழ்ந்து



வந்ததாகச் சொல்லப்படுகிறது.

1884 இல் தான் முதன்முதலாக, ஆங்கிலேய நிலவியல் வல்லுனரும், தொல்பொருள்இயல் வல்லுனருமான ராபர்ட் புஷரூஸ் என்பவர்தான் இந்தக் குகைகளைப் பற்றி முதன்முதலில் பதிவு செய்துள்ளார்.

ஆனால், சில சுற்றுப்பயண ஆர்வலர்கள், பூமிக்கடியில் உள்ள இந்தப் பல நூற்றாண்டுகளுக்கு மேலான அமைப்



பினை நினைவிருத்திக் கொள்வதற்காக சுண்ணாம்புப் படிமங்களைச் சுரண்டிச் செல்வதுதான் வருத்தமளிக்கிறது என்கிறார் ஓர் இயற்கை ஆர்வலர்.

# சுவைமிகு செய்திகள்



பையில் குட்டியுடன் காணப்படும் தோற்றத்தையும், தாவித் தாவிச் செல்லும் இயல்புடைய கங்காருவினை இரசித்திருக்கிறோம்.

இந்த விலங்கிற்கு கங்காரு என்ற பெயரினை வைத்தவர் யார்? அந்தப் பெயர் எப்படி வந்தது தெரியுமா? கங்காரு என்ற பெயர் கேப்டன் ஜேம்ஸ் குக் என்பவரால் சூட்டப்பட்டது.

குக் முதன்முறையாக அவுஸ்ரேலியாவை அடைந்தபோது தாவித் தாவி ஓடிவரும் கங்காருக்களைக் கண்டார். குக்குடன் இருந்த ஆங்கிலேயர்கள் அந்த விலங்குகளை, குதித்தோடித் தாவி வரும் வாலுள்ள அரக்கர்கள் என நினைத்தனர்.

அங்கு வாழ்ந்த ஆதிக்குடி மக்களிடம் இதன் பெயர் என்ன? என்று கேட்டார் குக். அவர்கள், தங்கள் மொழியில் - கங்காரு என்றனர். (கங்காரு என்றால் தங்களுக்குத் தெரியாது என்று பொருள் அந்த விலங்கினங்களுக்குக் கங்காரு என்ற பெயரையே வைத்துவிட்டார் குக்.

# அடிப்படை வசதிகளின்றி இயங்கும் சின்னச்சாளம்பன் ஈஸ்வரன் வித்தியாலயம்



(கிளிநொச்சி)

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் சின்னச் சாளம்பன் ஈஸ்வரன் வித்தியாலய மாணவர்கள் அடிப்படை வசதிகளின்றிய நிலையில் கல்வியை தொடர்வதாக தெரிவிக்கப்படுகிறது.

யுத்த பாதிப்புக்களை எதிர்கொண்ட மேற்படி பாடசாலையின் கல்விச் செயற்பாடுகள் யுத்தத்திற்குப் பின்னர் மக்கள் மீள் குடியேறியதைத் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்ட நிலையில் எவ்வித அடிப்படைவசதிகளும் இன்றியே இதுவரை இயங்கி வருகின்றது.

குறிப்பாக இப்பாடசாலையில் கட்டடவசதிகள் எதுவுமற்ற நிலையில் தகரக்கொட்டகையில் மாணவர்கள் வெயில் மழை பாராது கல்வி கற்று வருவதாகவும் பிரதேசமக்கள் தெரிவிக்கின்றனர்.

சமாதான சூழல் ஏற்பட்டுள்ள தற்காலத்தில் மாவட்ட ரீதியாவும் பிரதேச ரீதியாகவும் பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றது.

இந்நிலையில் பின்தங்கிய நிலையிலுள்ள இக்கிராமத்தின் மேற்படி பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்களின் எதிர்கால கல்வி நடவடிக்கைக்காக நிரந்தர கட்டடம் அமைக்கப்படுமிடத்து மாணவர்கள் சீரான மகிழ்ச்சியான கல்வியை தொடர்வதற்கு வாய்ப்பு ஏற்படும் எனவும் பெற்றோர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனவே மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை கருத்தில் கொண்டு இப்பாடசாலையின் அடிப்படை வசதிகளை ஏற்படுத்துவதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரதேசமக்களும் மாணவர்களின் பெற்றோர்களும் கோரிக்கை விடுக்கின்றனர். (90)

## அனுமதியின்றி பசுமாட்டை ஏற்றிச்சென்ற 4 பேர் பொலிஸ் பிணையில் விடுதலை

யாழ். மாதகல், சங்கரத்தை பகுதியிலிருந்து வட்டுக்கோட்டைக்கு அனுமதிப்பத்திரமின்றி கன்டர் ரக வாகனத்தில் பசுமாடு ஒன்றை ஏற்றிச்சென்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட 04 பேரையும் பொலிஸ் பிணையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை விடுவித்ததாக இளவாலை பொலிஸார் தெரிவித்தனர்.

வட்டுக்கோட்டைப்பகுதியைச் சேர்ந்த குறித்த நான்கு பேரும் மேறபடி குற்றச்சாட்டில் கடந்த சனிக்கிழமை இரவு கைதுசெய்யப்பட்டதுடன், இவர்களிடமிருந்து அப்பசு மாட்டை மீட்டதாகவும் பொலிஸார் கூறினர்.

இவர்களை நாளை புதன்கிழமை மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவுள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

குறித்த பகுதியில் போக்குவரத்துக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார், மேற்படி வாகனத்தை மறித்துச் சோதனையிட்டபோது பசுமாடு ஏற்றிச்செல்வதற்குரிய அனுமதிப்பத்திரம் இல்லாமை தெரியவந்தது. அத்துடன், இவர்கள் பசுமாட்டின் 02 கால்களையும் கட்டிவைத்து வாகனத்தில் கொண்டு சென்றதால் மிருக வதைச் சட்டத்தின் கீழ் இவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் பொலிஸார் மேலும் கூறினர். (48)

# அதிக கட்டண அறவீட்டால் விசனமடையும் பேருந்துபயணிகள்

(மன்னார்)

மன்னாரில் இருந்து சங்குப்பிட்டி வீதியூடாக யாழ்ப்பாணத்திற்குச் செல்லும் தனியார் பேருந்து ஒன்று மன்னார் தனியார் பேருந்து சங்கத்தினால் நியமித்த கட்டணத்தை விட அதிகமான கட்டணம் அறவீடு செய்யப்படுவதாக பயணிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மன்னாரில் இருந்து சங்குபிட்டி வீதியூடாக யாழ்ப்பாணம் செல்வதற்காக நியமிக்கப்பட்ட கட்டணம் 180 ரூபாய் மாத்திரமே என மன்னார் தனியார் பேருந்துச் சங்கம் அறிவித்துள்ளது.

ஆனால் மன்னாரில் இருந்து சங்குப்பிட்டி வீதியூடாக யாழ்ப்பாணம் செல்லும் பேருந்து 195 ரூபாய் கட்டணம் அறவீடு செய்வதாக பயணிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் யாழ்ப்பாணத்தில் இருந்து சங்குப்பிட்டி வீதியூடாக மன்னார் சென்ற குறித்த பேருந்தில் 195 ரூபாய் கட்டணமாக அறவீடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த பேருந்து உணவகங்கள் எங்கும் நிறுத்தவில்லை என பயணிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதனால் பெண்கள்,சிறுவர்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துள்ளதாக பயணிகள் விசனம் தெரிவித்துள்ளதோடு கடந்த சனிக்கிழமை மாலை மன்னார் தனியார் பேருந்து சங்கத்திடம் முறைப்பாடும் செய்துள்ளனர்.

எனவே மனிதாபிமானமற்ற முறையில் கட்டுப்பாடுகளையும் மீறிச் செயற்படும் சாரதி, நடத்துனருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர். (48)

## வழிபாட்டுப் பயிற்சிக்கூடம் அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

சைவநெறிக்கூடம் தமிழ் வழிபாட்டு பயிற்சிக் கூடம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படவுள்ளது.

இவ் நிகழ்வு நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணி முதல் இணு வில் தெற்கு அருள்மிகு ஞானலிங்கேஸ்வரா திருக்கோவிலில் இடம் பெறவுள்ளது.

மறவன்புலவு சச்சிதானந்தன் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் தமிழ் அருட்சுனைஞர் பயிற்சிக் கூடத்திற்கான கால் கோள் விழாவும் இடம்பெறவுள்ளது.

அத்துடன் தமிழ் வழிபாட்டு மெய்யுணர்வுக் கருத்துப் பகிர்வும் நடைபெறவுள்ளது.

ஞ்சைவத்தமிழ் அறிஞர்கள் பலரும் பங்கெடுக்கவுள்ள இந் நிகழ்வில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு சைவநெறிக் கூடத்தினர் கேட்டுள்ளனர். (48)



யாழ். கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற பொலிஸ் நடமாடும் சேவையில் பொலிஸ் அதிகாரி சமன் சிகேரா மங்கள விளக்கேற்றுவதையம் இராணுவ அதிகாரியொருவர் இரத்ததானம் செய்வதையும் காணலாம். (105)

# பதிவிருக்கப் பெட்டகம்

மூணு நாலு வருஷத்திற்கு முன்பு இறந்துவிடுவேன் என நினைத்தேன். நினைவே இல்லாமல் இருந்தேன். எல்லோரும் அழுதார்கள். எனக்கு ஒரு நாளில் வாழ்வதே கஷ்டமாக இருக்கிறது. இப்போது தமிழ் வளர்ச்சித் துறையின் திருவிக விருது கிடைத்துள்ளது. தொண்டு கிழம் ஆன பிறகு விருது கொடுக்கிறார்கள். பலபேர் விருது இல்லாமலே இறந்துவிடுகிறார்கள். எனக்கு 82 வயதாகிவிட்டது.

இந்த விருதுக்கான நிகழ்ச்சி சென்னை மியூசியம் தியேட்டரில் நடப்பதாகச் சொன்னார்கள். அங்கே 20 படிகள் இருக்கும். கைப்பிடி இருக்காது. உள்ளே போனால் அது உடனே கீழிறங்கும். உள்ளே ஒரு படி மாதிரி இன்னொரு படி இருக்காது. அத்துடன் எனக்கு என்ன கவலை என்றால் விருதைப் படியேறி வாங்க வேண்டும். நான் அங்கு ஒரு நாடகத்திற்குச் சென்றபோது கால் தவறிக் கிழே விழுந்திருக்கிறேன். அந்தக் காயம் ஆற ஆறு மாதம் ஆனது...

நான் எழுதுகிறேன். பல பேரைச் சென்றடைகிறது. அது அவர்களுக்குப் புதிய விஷயமாக இருக்கிறது. சமீபத்தில் வைரம் என்று ஒரு சிறுகதை எழுதியிருந்தேன். பல பேருக்கு ஆச்சரியம், 500 ரூபாய்க்கு வைரத்தோடு கிடைக்குமா என்று. இதெல்லாம் இந்தக் கதை மூலம் அவர்களுக்குத் தெரியவருகிறது. மனித உறவுகள் எப்படியெப்படி எல்லாம் இருந்தது, எப்படியெல்லாம் மாறியிருக்கிறது எனச் சொல்கிறது அந்தக் கதை...

ரொமண்டிஸிஸம் என் கதைகளில் இல்லை என்றால், அது என்னுடைய இயல்பு. நான் என் கதைகளுக்குள் இது இதையெலாம் தவிர்க்க வேண்டும் என்றெல்லாம் நினைக்கவில்லை. சிலர் ரொமண்டிக் தன்மையுடன் எழுதுகிறார்கள் என்றால் அவர்களுடைய் இயல்பில் எங்காவது ரொமண்டிஸிஸம் இருக்கும்.

காண்டேகர் என்று ஒரு எழுத்தாளர். எல்லா ஹிந்திப் படங்களும் அவர் கதைகள் மாதிரியே இருக்கும் 2 ஆண்கள், 2 பெண்கள். காண்டேகரின் படைப்புகளை மு.வ. மிகவும் வியப்பார். ஆனால் மு.வ.வின் எழுத்தில் அவ்வளவு ரொமண்டிஸம் இல்லை. நன்னெறி கூறுவது போல இருக்கும். கல்கி எழுத்து நன்றாகத்தான் இருக்கும். ஆனால் கதை முடிவில் ஒரு ரொமண்டிஸிஸத்தைக் கொண்டுவந்துவிடுவார்...

பெரிய நாவலாக இருந்தாலே அதன் இலக்கியத் தரம் குறைந்து போய்விடும். நாவல் வடிவத்திற்கே குறைபாடு உள்ளது. உடனே டால்ஸ்டாய் எழுதவில்லையா? என்பார்கள். War and Peace நாவலில் நிறைய பிழைகள் உண்டு. அந்தப் பிழைகளைச் சரிசெய்வதற்காக ஒரு பின்னுரை, பிறகு ஒரு பின்னுரை, அதற்குப் பிறகு இன்னொரு பின்னுரை என அந்நாவலில் நான்கு பின்னுரைகள் இருக்கும். நாவல் எழுதிவிட்டு ஒருத்தன் பின்னுரை எழுதுகிறான் என்றால் அந்த நாவலில் அவனுக்குத் திருப்தி இல்லை என்றுதானே அர்த்தம்? ஆனால் அதே மனுஷன் ரொம்ப சின்ன நாவல்களும் எழுதியிருக்கிறார்...

படைப்புக்கு எடிட்டர் ரொம்ப அவசியம். எடிட்டர்கள் ரொம்பச் சிறிய மாற்றத்தில் அந்தக் கதையைச் சிறப்பாக்கிவிடுவார்கள். நான் கணையாழியில் இருந்தவரை ஒரு கதையை இரண்டு முறை படிக்காமல் வெளியிட்டதில்லை. உடனே உடனே எப்படி எழுதுகிறார்கள் என இன்று இணையத்தில் எழுதுபவர்களைப் பார்த்தால் எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது...

நான் கவிதை எழுதியதில்லை. ஆனால் எனக்கு நெருங்கிய நண்பர்கள் கவிஞர்களாக இருக்கிறார்கள். வைத்தீஸ்வரன், ஞானக்கூத்தன் போன்றோர். எப்போதும் எனக்குக் கவிதை குறித்துச் சந்தேகம் உண்டு. கவிதையைப் புனித வாக்கு என்கிறார்கள். கொஞ்சம் முயற்சி எடுத்தால் யார் வேண்டுமானாலும் அந்தப் புனித வாக்கை எழுதிவிட முடியும்.

ஆரம்பத்தில் கவிதை ஏன் அப்படி எழுதப்பட்டது என்றால் எழுதிய அந்தச் சாதனம் வெகுநாள் இருக்காது. ஓலைச் சுவடிகள் 150 வருஷத்திற்குள் உதிர்ந்துபோய்விடும். அதனால் மனப்பாடமாக வைத்துக்கொள்வதற்காக எதுகை, மோனை, அலங்காரங்கள் வைத்து எழுதினார்கள். மகத்தான படைப்புகள் இருக்கின்றன. இல்லை என்று சொல்லவில்லை...

ஆங்கிலத்தில்தான் முதலில் எழுதினேன். டெக்கான் ஹெரால்டில், இல்லஸ்ரேட் வீக்லியில் எழுதி இருக்கிறேன். தொடர்ந்து ஆங்கிலத்திலே எழுதியிருக்க வேண்டும். ஆனால் தொடர்ந்து எழுதவில்லை. தமிழில் நிறைய செய்வதற்கு இருக்கிறது என நினைத்தேன். அதுவும் ஒரு மாதிரி ரொமண்டிஸிஸம்தான்.

– அசோகமித்திரன்

# தந்தையின் கொள்கையை பின்பற்றி மக்களுக்கு சேவையாற்றுவேன்



தந்தையின் கொள்கைகளை பின்பற்றி, கொழும்பு மக்களுக்கு சேவையாற்ற உள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய கொழும்பு இணை அமைப்பாளர் ஹிருணிகா பிரேமச்சந்திர தெரிவித்துள்ளார்.

கொலன்னாவையில் பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரவின் உருவச்சிலைக்கு மலரஞ்சலி செலுத்தி, தனது அரசியல் பிரசார நடவடிக்கைகளை ஆரம்பித்த போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எனது தந்தையான பாரதலக்ஷ்மன் பிரேமச்சந்திரவின் கொள்கைகளை முன்னெடுக்க அந்தச் சிங்கத்தின் சிங்கப் புதல்வி தயாராகியுள்ளார். தந்தை உயிருடன் இருந்திருந்தால் அவருக்கு 58 வயது எனவே கொலன்னாவையில் மாத்திரம் அல்ல மத்திய கொழும் பில் சிறிய ஊர்வலம் ஒன்று நடத்தி சகல மக்களையும் சந்திக்க தீர்மானித்துள்ளேன்.

# மீண்டும் வலுப்பெறுகிறது தனிநாட்டுக் கோரிக்கை

## எச்சரிக்கிறது ஜாதிக ஹெல உறுமய

தனிநாட்டுக் கோரிக்கை மீளவும் வலுப்பெறுகின்றது. போர் இடம்பெற்ற காலத்தில் உறங்கிக் கொண்டிருந்த வெள்ளையர்கள் தற்போது விழித்துக் கொண்டுள்ளனர் என ஜாதிக ஹெல உறுமய கட்சியின் தலைவர் எல்லாவல மேதானந்த தேரர் தெரிவித்துள்ளார்.


30 ஆண்டுகள் புலிகள் குற்றச செயல்களில் ஈடுபட்ட போது வெள்ளைக்காரர்கள் எவ்வித குரலும் எழுப்பவில்லை. உள்நாட்டு, வெளிநாட்டு ரீதியில் தனிநாட்டுக் கோரிக்கை ஆதரவளிக்கப்படுகின்றது.

இதன் ஓர் கட்டமாகவே இலங்கைக்கு எதிராக மனித உரிமை மீறல் குற்றச்சாட்டு சுமததப்படுகின்றது,

வேற்று மத அமைப்புக்களும் இந்த சூழ்ச்சித் திட்டத்தில் இணைந்து கொண்டுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார்.

# பெரிய பரந்தன் அபிவிருத்தியில் அதிக கவனம் செலுத்தப்படும்

## வடமாகாணசபை உறுப்பினர் வை.தவநாதன் உறுதியளிப்பு



(பரந்தன்)

பெரியபரந்தன் கிராமமக்களின் வாழ்வியல் மேம்பாடு மற்றும் உட்கட்டுமான அபிவிருத்தியில் அதிக கரிசனை கொண்டுள்ளதாக ஈ.பி.டி.பி.யின் வடக்கு மாகாணசபை உறுப்பினர் வைதவநாதன் தெரிவித்துள்ளார்.

பெரியபரந்தன் கிராமத்தில் கடந்த 23 ஆம் திகதி பொது நோக்கு மண்டப நிர்மாணப் பணியை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில், மீள்குடியேற்றத்தின் ஆரம்பகாலம் தொடக்கம் பெரியபரந்தன் கிராமத்தின் அபிவிருத்தியில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் உட்பட அனைவரும் அதிக கரிசனையுடன் செயற்பட்டு வருகின்றனர்.

இப்பகுதிக்கு மின்சாரத்தினை வழங்குவதற்கான வேலைத்திட்டமும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது இக கிராமத்தின் அபிவிருத்தியில் நாம் தொடர்ந்தும் கரிசனையுடன் செயற்படுவோம் என்றார்.

யு.என்.ஹபி.டாட் நிறுவனத்தின நிதி அனுசரணையுடன் பெரியபரந்தன் கிராமத்திற்கான பொது நோக்கு மண்டபம் அமைக்கும் பணி வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதனால் அடிக்கல் நாட்டப்பட்டு ஆரம்பித்து வைக்கப்பட்டது. சுமார் 26 இலட்சம் ரூபா செலவில் இம் மண்டபம் அமைக்கப் படவுள்ளது.

பெரியபரந்தன் கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர் நடராசாவின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கரைச்சி பிரதேச உறுப்பினர்களான மனோகரன் இராமச்சந்திரன் கரைச்சிப் பிரதேச செயலர் நாகேஸ்வரன், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராமசேவையாளர் சிம்சன் போல் ஆகியோரும் அரச திணைக்களங்களின் பிரதிநிதிகள் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து சிறப்பித்தனர்.

# இளைஞர் சேவையில் முதலாமிடம்

இளைஞர் சேவை உத்தியோகத்தர் மதிப்பீட்டில், 2013 ஆம் ஆண்டு தேசிய ரீதியில் முதல் இரண்டு இடங்களையும் மட்டக்களப்பு மாவட்டத்தில் கடமை புரியும் அதிகாரிகள் பெற்றுள்ளனர்.

இளைஞர் விவகார மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சு, தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் என்பன அகில இலங்கை ரீதியாக இந்த மதிப்பீட்டை மேற்கொண்டது.


2013 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை இளைஞர் சேவை அதிகாரிகள் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வேலைத்திட்டங்கள், வெளி நிறுவனங்களுடன் இணைந்து மேற்கொள்ளப்படும் வேலைத் திட்டங்கள், இளைஞர கழகங்களினூடாக சுயமாக மேற்கொள்ளப்படும் வேலைத் திட்டங்கள், உத்தியோகத்தர்களின் முகாமைத்துவத்திறன் உட்படப் பல்வேறு தர ரீதியாக மேற்கொள்ளப்படும் மதிப்பீட்டின் மூலமே அதி கூடிய புள்ளிகளைப் பெற்று மட்டக்களப்பு மாவட்டத்தில் கடமையாற்றும் இளைஞர் சேவை அதிகாரிகள் தேசிய ரீதியில் முதல் இரண்டு இடங்களையும் பெற்றுள்ளனர். தேசிய ரீதியில் 25 பேர் தெரிவு செய்யப்பட்ட நிலையிலேயே இவர்கள் முன்னணியில உள்ளனர்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்ற மட்டக்களப்பு மாவட்டப் பணிமனையில் கடமைபுரியும் மண்முனை மேற்கு வவுணதீவுப் பிரதேச இளைஞர் சேவை அதிகாரி மா.சசிகுமார் 4986 புள்ளிகளைப் பெற்று தேசிய ரீதியாக முதலாமிடத்தினைப் பெற்றுள்ளார்.

அத்துடன் மண்முனை வடக்குப் பிரதேச இளைஞர் சேவை அதிகாரி நா.குகேந்திரா 4876 புள்ளிகளைப் பெற்று இரண்டாமிடத்தினைப் பெற்றுள்ளார்.

இவர்களுக்கு இளைஞர் விவகார திறன் அபிவிருத்தி அமைச்சர் டலஸ் அழகப்பெருமவினால், கடந்த வெள்ளிக்கிழமை இரவு மகரகம இளைஞர் மத்திய நிலையத்தில் இடம் பெற்ற நிகழ்வின் போது பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

# இறந்தது 12 வயது முதலை



மட்டக்களப்பு ஆரையம்பதி பகுதியில் 13 அடி முதலை ஒன்று இறந்த நிலையில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

ஆரையம்பதி 1 - தி.எஸ். ஊர் வீதி ஆற்றங்கரையோரப் பகுதியில் ஆடு, மாடு, நாய் போன்ற மிருகங்களை வேட்டையாடி வந்த, இந்த இராட்சத முதலையை, நேற்றுமுன்தினம் வன ஜீவராசிகள் பாதுகாப்புத் திணைகளத்தின் மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய காரியாலய அதிகாரிகள், பொலிஸாரின் உதவியுடன் பிடித்தனர்.

இறந்த நிலையில் கண்டு பிடிக்கப்பட்ட இம் முதலைக்கு 12 வயது என்றும் இதனை வைத் திய பரிசோதனைக்காக மட்டக் களப்பு மாவட்ட வன ஜீவராசி கள் பாதுகாப்புத் திணைக்களத் திற்குக் கொண்டு சென்றுள்ளதாக வும் மட்டு மாவட்ட வன ஜீவரா சிகள் பாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

வைத்திய பரிசோதனையின் பின்னரே இம் முதலை இறந்த காரணத்தைக் கண்டறிய முடியுமென்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

# விசாரணைக்கு உத்தரவு

(கொழும்பு)

கொழும்பு,கொம்பனி வீதிப் பகுதியில் தனக்குச் சொந்தமான கட்டடத்தில் சூதாட்டவிடுதியை நடாத்துவதற்கு இடமளித்ததாக கூறப்படும் அந்த விடுதியின் உரிமையாளரான வஜிரா நெத்தி குமாரவிற்கு எதிரான வழக்கை எதிர்வரும் 3 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துகொள்வதற்கு கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் நேற்று தீர்மானித்தது.

இவருக்கு எதிராக பொலிஸார் நேற்று குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்தனர். தான் குற்றவாளியல்ல என்று அவர் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

சாட்சியாளர்களுக்கு கட்டளை அனுப்புமாறு உத்தரவிட்ட கோட்டை நீதவான் திலின கமகே விசாரணைகளை 3 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.






கைதடி சரஸ்வதி இளைஞர் கழகத்தால் கல்வியை முன்னெடுக்கும் வகையில் சரஸ்வதி முன்பள்ளி மாணவிக்கு சரஸ்வதி இளைஞர் கழகத்தால் சீருடை வழங்கும் நிகழ்வில் சரஸ்வதி இளைஞர்கழக தலைவர் ந.நதீசன் மங்களவிளக்கேற்றுவதையும், முன்னாள் இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ரீ.விமலதாஸ் உரையாற்றுவதையும், மாணவிக்கு எஸ்.ரீ. விமலதாஸ், இளைஞர் கழக சம்மேளன உறுப்பினர் எஜ்.மதியுகன் இருவரும் இணைந்து சீருடை வழங்குவதையும் காணலாம். (51)

20) சமனான நிறையுடைய பழங்கள் எவை?
1) அப்பிள்பழம், தோடம்பழம்　　2) கொய்யாப்பழம், வாழைப்பழம்
3) மங்குஸ்பழம், கொய்யாப்பழம்　　4) கொய்யாப்பழம், அப்பிள்பழம்

**கீழ்க்காணும் பெட்டியில் உருவத்துக்குஒத்த இலக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இதனைக் கொண்டு சரியான விடையின் கீழ் கோடிடுக.**




21) △ x □ x ○ இன் விடை என்ன?

I. 45　　II.. 12
**III. 60**　　**IV. 65**

22) □ + ○ - △ இன் விடை என்ன?


I. 6　　II. 9
**III. 12**　　**IV. 45**

23) கீழ்க்காணும் படத்தில் நான்கு படம் ஏதோ ஒரு விதத்தில் ஒன்றுக்கொன்று சம்பந்தப்பட்டவை மற்றையவை சம்பந்தம் இல்லாதவை அதனைக் கண்டுபிடித்து அதன்கீழ் கோடிடுக.




**கீழே கொடுக்கப்பட்டுள்ள மாதிரிகளை உணர்ந்து புள்ளிக்கோடிட்ட இடத்துக்கு வரவேண்டிய எண்ணைக் கண்டுபிடித்து அதன்கீழ் கோடிடுக.**

**24)**




**1 ) 28　　2) 32　　3) 40　　4) 12**

**25)**



**1) 11　　2) 9　　3) 15　　4) 17**

**கீழே பெரிய காகித அட்டைத்துண்டு வெவ்வேறு வடிவங்களாக பிரிக்கப்பட்டு அவற்றுள் ஆங்கில எழுத்துக்கள் எழுதப்பட்டுள்ளன.**



ஆங்கில எழுத்துக்களுக்கான பெறுமானங்கள்

A=6　　B=1　　C=9

E=7　　F=8　　D=0



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2014


பகுதி - II
1 மணி 15 நிமி

# கல்வி முரசு 01



## பகுதி -1







**1 ஆம் 2 ஆம் வினாக்களில் உள்ள குறைபாட்டை புள்ளிக் கோ... ட்டில் எழுதுக**

01) இது ஒரு சேவல் இதில் காணப்படும் குறைபாடு என்ன ? -----------------------

02) இது ஒரு கடிகாரம் இதில் காணப்படும் குறைபாடு என்ன? -----------------------




03) உருவில் வெற்றிடத்துக்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்து கீறிடுக




**4 ஆம் 5 ஆம் வினாக்களுக்கு கீழே தரப்பட்டுள்ள முதலாம் படத்திற்கு ஒத்து வராத படத்தின் கீழ் கோடிடுக**

04)



05)



**6 ஆம் 7 ஆம் வினாக்களில் உள்ள படங்களுக்கு மிகப் பொருத்தமாகக் கூடிய வசனத்தின் கீழ் கோடிடுக**




06) 1) இது மாலை நேரம்
2) இது காலை நேரம்
3) இது பூரணை நள்ளிரவு நேரம்




07) 1) இரவில் பயிர்களைப் பாதுகாக்கும் விவசாயி
2) ஒரு கூடாரத்தில் இருக்கும் விவசாயி
3) பகல் நேரத்தில் பயிர்களைப் பாதுகாக்கும் விவசாயி

8 ஆம் 9 ஆம் வினாக்களுக்கு முதலில் கொடுக்கப்பட்டுள்ள உருவை ஆக்குவதற்குப் பொருத்தமான எல்லா பொருட்களையும் கொண்ட கூட்டத்தின் கீழ்க்கோடிடுக


08)





09)




10) கொடுக்கப்பட்டுள்ள உருக்களை அவதானித்து பொருத்தமற்ற படத்தின் இலக்கத்தைப் புள்ளிக்கோட்பாட்டில் எழுதுக





11) கீழே தரப்பட்டுள்ள படத்தை நன்கு அவதானித்து புள்ளிக்கோடிடப்பட்டுள்ள இடத்துக்கு வர வேண்டிய எண்ணைக் கண்டு சரியான விடையின் கீழ் கோடிடுக




1) 10 2) 9 3) 8 4) 2


12)



அருகில் தரப்பட்டுள்ள சதுரத்தில் நிழற்றியுள்ள பகுதியின் பரப்பளவு 10 சதுர சென்ரிமீற்றர் ஆகும்

1) $160cm^2$ 2) $180cm^2$ 3) $80\ cm^2$ 4) $100cm^2$


13)




இவ்வுருவில் காணப்படுவது ஒரே அளவு ஆரையுடைய இருவட்டம் ஆகும். வட்டம் ஒன்றின் ஆரை 3 cm ஆகும். இச் செவ்வகத்தின் நீளம், அகலம் முறையே காட்டப்படும் விடையின் கீழ் கோடிடுக.

1) 12cm, 6 cm 2) 32 cm, 16 cm
3) 16cm, 16 cm 4) 8 cm, 32 cm

14)





இக்கடதாசி ஒன்றில் வரையப்பட்ட WXYZ என்ற கட்டத்துக்குள் உருவில் காட்டப்பட்டுள்ள ஒழுங்கில் ஒரே சம அளவான நான்கு வட்டங்கள் வரையப்பட்டுள்ளன. வட்டம் ஒன்றின் ஆரை 7 cm எனின் இக் கட்டத்துக் குள் வரையத்தக்க மிகப் பெரிய வட்டத்தின் ஆரை யாது?

1) 12 cm 2) 14 cm 3) 21cm 4) 28 cm




15) தராசு ஒன்றின் ஒரு தட்டில் மாவும், அரிசியும் அடுத்ததட்டில் $\frac{3}{4}$ kg , 1500g , 4kg நிறையுடைய படிகளும் வைக்கப்பட்டுள்ளன மாவின் நிறை 1500g ஆகும். தராசு சமநிறையைக் கொண்டுள்ளது எனின் அரிசியின் நிறையைக் காண்க?




I. 4kg 750g II. 3kg 500g
III. 5kg 500g IV. 2kg 900g


16)




இந்தவட்டவடிவமான வளையத்தின் மீது ஒரு எறும்பு 6 முறை பயணம் செய்தது எனின், அது பயணம் செய்த முழுத்தூரமும் என்ன?

I. 182 cm II. 192 cm
III. 120cm IV. 32 cm

17)




இவ்வமைப்பில் மொத்தமாக எத்தனை கட்டங்கள் உள்ளன.


I. 334 II. 234
III. 432 IV. 134

18) பின்வரும் குறுக்கெழுத்துப் புதிரில் இடமிருந்து வலமாகவும் மேலிருந்து கீழாகவும் கருத்துள்ள சொற்களை அமைத்து இப்புதிரை நிரப்புக. தரப்பட்டுள்ள உதவிக் கூற்றுக்களைப் பயன்படுத்துக.

இடமிருந்துவலம்
1) எழிலுக்கு ஒத்தது 2) காற்றின் அனர்த்தம்
மேலிருந்து கீழ்
1) பரிவுக்கு ஒத்தது 2) கூவும் பறவை




பழங்களின் நிறைகள் சில கீழே தரப்பட்டுள்ளன அதனை நன்கு அவதானித்து 19 ஆம் 20 ஆம் வினாக்களுக்கு விடை தருக.




19) நிறை கூடிய பழம் எது? 1) மாம்பழம் 2) தோடம்பழம் 3) வாழைப்பழம் 4) மங்குஸ்பழம்

# நிறைவேற்று ஜனாதிபதி முறைமை இல்லாது ஒழிக்கப்பட வேண்டும்

## லங்காசமசமாஜ கட்சி கோரிக்கை

(கொழும்பு)

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை இல்லாதொழிக்கப்பட வேண்டுமென லங்கா சமசமாஜ கட்சி கோரியுள்ளது.

இந்த ஆண்டுக்கான கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை இரத்து செய்யப்பட வேண்டுமென ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தற்போதைய பதவிக் காலம் முடிவடைவதற்கு முன்னதாக நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையில் மாற்றம் செய்யப்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

பிரதமர் மற்றும் அமைச்சர்கள் நாடாளுமன்றிற்கு பொறுப்புச் சொல்லக் கூடிய வகையிலான அரசாங்கமொன்று உருவாக்கப்பட வேண்டும். மற்றுமொரு ஜனாதிபதி தேர்தல் நடத்தக் கூடாது என்பதே கட்சியின் தீர்மானமாகும்.

17ஆவது திருத்தச் சட்டத்தை மீள அமுல்படுத்துமாறும் ஜனாதிபதியிடம் கோரப்படவுள்ளது. கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களும் அமைச்சர் திஸ்ஸ வித்தாரன மற்றும் பிரதி அமைச்சர் வை.ஜீ.பத்ம சிறி ஆகியோரும் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது,

# ரொட்டியில் "அற்புதம்" மட்டக்களப்பில் சம்பவம்



(மட்டக்களப்பு)

காத்தான்குடி பிரதேசத்திலுள்ள வீடொன்றில் கடந்த ஐந்து தினங்களுக்கு முன்னர் காலை உணவுக்காக தயாரிக்கப்பட்ட ரொட்டியில் அல்லாஷ் முகம்மத எனும் எழுத்து காணப்பட்டுள்ளது.

இது பற்றி தெரியவருவதாவது,

காத்தான்குடி பி.ஜே.எம். வீதியிலுள்ள மர்சூக் என்பவரின் வீட்டில் காலை உணவுக்கான ரொட்டி தயாரிக்கப்பட்ட வேளை ரொட்டியை தயாரித்து முடிந்த பிறகு அந்த ரொட்டியின் மேல் பகுதியில் அல்லாஷ், முகம்மத் என காணப்பட்டுள்ளது. இதையடுத்து இந்த ரொட்டியை சாப்பிடாமல் விட்டுள்ளனர்.

இந்த ரொட்டியை தயாரித்த ரொட்டிக் கல்லில் எந்த வொரு எழுத்தும் இருக்கவில்லையெனவும். இதில் அல்லாஷ் என்ற எழுத்தைக் கண்டவுடன் தான் அதிர்ச்சியடைந்ததாகவும், இது ஒரு அற்புதமாகும் எனவும் இந்த ரொட்டியை தயாரித்த அந்த வீட்டின் சகோதரி தெரிவித்தார். இதைப் பலரும் அந்த வீட்டுக்கு சென்று பார்வையிட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# வழிபாட்டுத் தலங்களுக்கு முன் குழப்பத்தை ஏற்படுத்திய 18 பேர்

## நீதிமன்றில் ஒப்படைப்பு

ஹிக்கடுவை பிரதேசத்திலுள்ள வழிபாட்டுத் தலங்கள் இரண்டிற்கு முன்னால் குழப்பத்தை ஏற்படுத்தும் வகையில் செய்யபட்ட 18 பேர் நேற்று நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

குழப்பத்தை எற்படுத்திய சம்பவம் தொடர்பில் பௌத்த தேரர்கள் 7 பேர் மற்றும் பொது மக்கள் 11 பேரைக் கைது செய்யுமாறு நீதிமன்றம் அறிவுறுத்தல் வழங்கியிருந்தது.

இந்நிலையில் இவர்கள் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளனர்.

இதன்போது காலி மேலதிக நீதவான் குணேன்ர குமார முனசிங்கவினால் தலா ஒருவர் ஐந்து லட்சம் ரூபா பெறுமதியான சீரப்பிணை இரண்டில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். கடந்த 12ஆம் திகதி குறித்த இரு வழிபாட்டுத் தலங்களுக்கும் முன்பு சந்தேகநபர்கள் குழப்பத்தை ஏற்படுத்தும் வகையில் நடந்து கொண்டனர். இந்த வழக்கு தொடர்பான விசாரணைகள் எதிர் வரும் 17ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

# போலிச் சாரதிகளை உருவாக்கினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்

## பிரதிப் பொலிஸ் மா அதிபர் எச்சரிக்கை

(கொழும்பு)

சாரதி பயிற்றுவிப்பாளர்ளுக்கான அனுமதியை பெற்றிராமல் அத்தொழிலை மேற்கொள்வோருக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என பிரதிப் பொலிஸ் மா அதிபர் அமரசிறி சேனாரத்தின தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் நாட்டிலுள்ள சகல பொலிஸ் நிலையங்களுக்கும் பணிப்புரை விடுககப்பட்டுள்ளது.

நாட்டில் சிலர் சாரதி பயிற்றுவிப்பாளர்ளுக்கான அனுமதியின்றியே இத்தகைய பயிற்றுவிப்பு நிலையங்களை நடாத்தி வருவது தெரியவந்துள்ளது.

இதனால் நாட்டில் போலி சாரதிகளைத்தான் சந்திக்க நேரிடும் இதனால் இத்தகைய நிலையங்களை முற்றுகை இட நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

# வேலைவாய்ப்புக்காக வெளிநாடுசென்ற 285 இலங்கையர்கள் சிறைகளில்

(கொழும்பு)

வேலைவாய்ப்புக்கென இலங்கையிலிருந்து வெளி நாடுகளுக்குச் சென்றவர்களில் 285 பேர் 14 நாடுகளின் சிறைகளில் கைதிகளாக உள்ளனர் என வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் பொது முகாமையாளர் மங்கள ரந்தெனிய தெரிவித்தார்.

இவ்வாறு சிறைகளில் உள்ளவர்களில் ஒரு பெண்ணும் அடங்குவதாகவும் அவர் லெபனான் சிறையில் இருப்பதாகவும் சவுதி, குவைத், லெபனான் போன்ற நாடுகளிலேயே அதிகளவில் இலங்கையர்கள் சிறையில் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை சவுதி அரேபியா புதிய நடை முறையை அறிவித்துள்ளது. இதன்படி ஒப்பந்த காலம் நிறைவடைந்த நிலையில் பணிபுரி வோருக்கு கடுமையான சிறைத்தண்டனையும் தண்டப்பணமாக 5 இலட்சம் சவுதி றியாலும் விதிக்கப்படும் எனவும் தகுந்த காரணங்களான உடல் நலக்குறைவு, வன்முறை, சட்டச் சிக்கல் போன்றவற்றை காட்டுவதன மூலம் மன்னிப்பைப் பெறலாம் எனவும் அறிவித்துள்ளது.

இந்தச் சட்டத்தை மீறிய 3 இலங்கையர்கள் 5 இலட்சம் சவுதி றியால்களை செலுத்தும் வரைக்கும் அங்கு சிறைவைக்கப்பட்டுள்ளனர்.

தற்போது இப்புதிய சட்ட விதிமுறைகள் குறித்து வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தினூடாக சவுதி அரேபியா செல்வோருக்கு விளக்கமளிக்கப்படுகின்றது.

அதுமட்டுமல்லாது ஏற்கனவே வெளிநாடுகளில் உள்ளவர்களின் உறவினர்களுக்கும் இவ் விளக்கம் அளிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ)

# வவுனியா மாவட்ட செயலகத்தில் இருமொழி உதவு நிலையம் திறப்பு



(வவுனியா)

இரு மொழி உதவு நிலையம் நேற்று வவுனியா மாவட்ட செயலகத்தில் திறந்து வைக்கப்பட்டது.

வவுனியா மாவட்ட அரச உத்தியோகத்தர்களுக்கும் மக்களுக்கும் இடையில் நிலவிவரும் மொழிசார்ந்த பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் முகமாக மகிந்த சிந்தனைத் திட்டத்தின் கீழ் இரு மொழி உதவு நிலையம் மொழி ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவினால் திறந்து வைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் அமைச்சர் உரையாற்றுகையில் கலாசாரம், பண்பாடு, மொழி அடையாளங்கள் பேணிப் பாதுகாக்கப்படவேண்டும் என்றும் கற்றுக்கொண்ட பாடங்களை நல்லிணக்க ஆணைக்குழு அறிகையில் குறிப்பிடப்பட்டுள்ள இரு மொழிக்கொள்கை மற்றும் மொழிசார்ந்த ஒருமைப்பாட்டை பேணிப்பாதுகாக்க வேண்டுமென்ற நோக்கோடு இந் நிலையம் திறந்துவைக்கப்பட்டது என்றார்.

இந் நிகழ்வில் மொழி ஒருமைப்பாட்டு அமைச்சின் அதிகாரிகள், வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர், ஜனாதிபதி செயலகத்தின் வவுனியா இணைப்பாளர சிவநாதன் கிசோர், வவுனியா மாவட்டத்தின் நான்கு பிரதேச செயலாளர்கள், அரச திணைக்கள அதிகாரிகள் ஊழியர்கள், பாடசாலை அதிபர்கள் ஆசிரியர்கள் உட்பட நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

# கடந்தவருடம் 20 இலட்சம் பேருக்கு ஆவணங்கள் வழங்கப்பட்டுள்ளன



20 இலட்சம் பேருக்கு கடந்த ஆண்டில் ஆள் அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம், மற்றும் கடவுச்சீட்டு என்பன வழங்கப்பட்டுள்ளதாக திணைக்கள புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

ஆட்பதிவுத் திணைக்களத்தால் 9,69,617 பேருக்கு ஆளஅடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும், மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தினால் 5,16,912 பேருக்கு சாரதி அனுமதிப் பத்திரங்களும் குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தினால் 4,97,592 பேருக்கு கடவுச்சீட்டுக்களும் வழங்கப்பட்டுள்ளதாக அந்தந்த திணைக்கள புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

(இ)

# இலங்கை நிலைமை கனடாவில் பேச்சு

இலங்கையின் நிலைமைகள் குறித்து மனித உரிமை கண்காணிப்பகமும், கனடாவும் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. அமெரிக்காவை மையமாகக் கொண்டு இயங்கி வரும் மனித உரிமை கண்காணிப்பக பிரதிநிதிகளும், கனேடிய பிரதிநிதிகளும் இந்தச் சந்திப்பை நடத்தியுள்ளனர்.

கனேடிய வெளிவிவகார அமைச்சர் ஜோன் பயார்ட், மனித உரிமை கண்காணிப்பகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கெனத் ரொத் ஆகியோர் இலங்கையின் மனித உரிமை நிலைமைகளின் முன்னேற்றம் குறித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

இந்தச் சந்திப்பின் போது வடகொரிய நிலைமைகள் குறித்தும் பேசப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# சுதந்திர தினத்தை முன்னிட்டு கேகாலையில் புகைப்படக் கண்காட்சி

(கொழும்பு)


தேசிய சுதந்திர தினத்தை முன்னிட்டு அரசாங்க தகவல் திணைக்களம் ஏற்பாடு செய்துள்ள நிதஹச (சுதந்திரம்) புகைப்படக் கண்காட்சி நாளை, நாளை மறுதினம் மற்றும் 31ஆம் திகதிகளில் கேகாலை நகரசபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கையின் தேசிய சுதந்திர தினத்தை கொண்டாடும் சந்தர்ப்பத்தில் வரலாற்றுப் சிறப்புமிக்க புகைப்படங்களை காட்சிப்படுத்த தீர்மானிக்க பட்டுள்ளது.

இதற்கமைய புகைப்படக் கண்காட்சியுடன் விவரணச்சித்திரங்களும் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

இக்கண்காட்சியை நாளை தொலை தொடர்புகள மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய ஆரம்பித்து வைக்கவுள்ளார். மேலும் பல அமைச்சர்கள் அதி காரிகள் இவ் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளனர்.

# 20 கோடி வாக்காளர்கள் பா.ஜ.க.வுக்கு ஆதரவு வழங்குவர்



பா.ஜ.க.,வுக்கு 20 கோடிக்கும் மேலான வாக்காளர்கள் ஆதரவு அளிப்பார்கள் என யோகா ஆசிரியர் பாபா ராமதேவ் நேற்று முன்தினம் ஹைதராபாத்தில் தெரிவித்துள்ளார்.

லோக்சபா தேர்தலில் பிரதமர் வேட்பாளராக உள்ள நரேந்திர மோடிக்கு ஆதரவாக நாடு முழுவதும் யோகா மஹோற்சவம் மார்ச் மாதம் 23இல் ஆரம்பிக்க உள்ளேன். இதில் பா.ஜ.க.,வுக்கு ஆதரவு திரட்டும் முயற்சியில் ஈடுபட உள்ளேன். யோகா மஹோற்சவம் மூலம் 23 கோடி பேர் ஏற்கனவே சேர்ந்துள்ளனர். இவர்களில் பா.ஜ.க.விற்கு 20 கோடிப்பேர் ஆதரவளிப்பார்கள்

லோக்சபா தேர்தலில் பா.ஜ.க., 340 இடங்களில் வெற்றி பெற்று தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி அமைப்பதுதான் எங்கள் இலக்கு ஆகும். நான் கடந்த ஜனவரி 5ஆம் திகதி ராஜ்நாத் சிங் மற்றும் நிதின்கட்காரி ஆகிய தலைவர்களைச் சந்தித்துப் பேசினேன். அவர்கள் வெளிநாட்டில் உள்ள கறுப்புப் பணத்தை வெளிக்கொண்டுவருவதற்கும் வரி சீர்திருத்தம் குறித்தும் எங்களின் முக்கிய திட்டத்திலும் உறுதியாக உள்ளனர் என்றார்.

# பாகிஸ்தானுக்கு வேண்டப்பட்ட நாடாக அறிவிக்கப்படும் இந்தியா

சுமார் 300 பாகிஸ்தான் பொருட்களுக்கு சுங்க வரியை குறைத்தால், இந்தியாவுக்கு அடுத்த மாதம் முதல் மிகவும் வேண்டப்பட்ட நாடு வழங்க பாகிஸ்தான் தயாராக இருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளது.

இந்தச் சலுகை குறித்து இந்தியாவிடம் சமீபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக பாகிஸ்தான் வர்த்தக அமைச்சக உயரதிகாரி ஒருவர் கூறியதாக டான் நாளேடு தெரிவித்துள்ளது.

இந்தியப் பொருட்களுக்கு பாகிஸ்தான் சந்தையை பாகிஸ்தான் மக்கள் கட்சி அரசு 2012இல் திறந்தது. அந்நாட்டில் கடந்த ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தல் காரணமாக இந்த உடன்பாடு முழுவதும் நடைமுறைக்கு வரவில்லை. தற்போது இந்தியா பொதுத் தேர்தலை சந்திக்கவுள்ளது. இந்நிலையில் காங்கிரஸ் தலைமையிலான இந்திய அரசுடன் உடன்பாடு காண இது சிறந்த நேரம் என பாகிஸ்தானின் ஆளும் அரசு கருதுகிறது. மிகவும் வேண்டப்பட்ட நாடு அந்தஸ்து விவகாரத்தில் பாகிஸ்தானின் இந்த மனமாற்றத்துக்கு, உள்நாட்டு நிலவரமே காரணம் என்றும் அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பிரிட்டன் குடியுரிமைக்காக போலித் திருமணங்கள் அதிகரிப்பு

பிரிட்டனில் குடியுரிமை பெறுவதற்காக ஆசிய நாட்டவர்கள் பலர் போலியான திருமணங்கள் செய்வது அதிகரித்துள்ளது.

சுற்றுலா வீசா மூலம் சென்று வேலை பார்ப்பதாகக் கூறி, அங்கேயே முறைகேடாக தங்கி விடுவது, அங்குள்ள பெண்களை திருமணம் செய்து கொள்வதன் மூலம் குடியேற்ற உரிமை கிடைக்கும் என்பதால், போலித்திருமணம் செய்து கொள்வது போன்ற செயல்களில் ஈடுபடுகின்றனர். இதனை அறிந்த பிரிட்டன் குடியேற்றத்துறை அதிகாரிகள், தொடர்ந்து சோதனை நடாத்தி, பலரை கைது செய்து வருகின்றனர். இன்னும் சிலரை அங்கிருந்து வெளியேற்றியுள்ளனர்.

பிரிட்டனைச் சேர்ந்தவர்களை திருமணம் செய்து கொள்வதன் மூலம், 5 ஆண்டுகளில், அந்நாட்டு குடியுரிமை கிடைக்கும் என்ற ஆசையால், இந்தியர்கள் பலர் போலியான திருமணங்களை செய்து வருவதாக அந்நாட்டு குடியேற்றத் துறை அதிகாரி ஜோன் வைன் தெரிவித்துள்ளார்.

மேலும் இதுகுறித்து அவர் கூறுகையில், இந்தியர்களைப் போல பாகிஸ்தான், பங்களாதேஷ் நைஜீரியா ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்களும், அதிக அளவில் போலித்திருமணங்கள் செய்கின்றனர் இதைத் தடுப்பதற்காக திருமணப் பதிவு அலுவலர்கள் உஷார் படுத்தப்பட்டுள்ளனர் எனவும் கூறியுள்ளார்.

# கொண்டாட்டத்தில் வன்முறை எகிப்தில் ஐம்பது பேர் உயிரிழப்பு



எகிப்தில் இடம்பெற்ற வன்முறைகளில் சிக்கி 50 பேர் பலியாகியுள்ளனர்.

எகிப்தில் முன்னாள் அதிபர் ஹோஸ்னி முபாரக்குக்கு எதிராக புரட்சி வெடித்ததன் மூன்றாம் ஆண்டு கொண்டாட்டத்தின் போது, அரசு ஆதரவாளர்களுக்கும் எதிர்ப்பாளர்களுக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் இவர்கள் பலியாகியுள்ளனர்.

முபார்க் ஆட்சியிலிருந்து அகற்றப்பட்டதைக் கொண்டாடும் வகையில், தலைநகர் கெய்ரோவில் உள்ள தஹ்ரீர் சதுக்கம் உட்பட அந்நாட்டின் பல்வேறு முக்கிய இடங்களில் இராணுவ ஆதரவு பெற்ற அரசின் ஆயிரக்கணக்கான ஆதரவாளர்கள் கூடியிருந்தனர்.

அந்த நாட்டின் தேசியக் கொடி மற்றும் பதாகைகளுடன் பேரணியாகச்சென்ற அவர்கள், அதிபர் தேர்தலில் இராணுவத் தளபதி ஜெனரல் அப்துல் பட்டா அல்-சிசி போட்டியிட வேண்டும் என்று வலியுறுத்தினர்.

இதேவேளை, முன்னாள் அதிபர் முகமது மோர்ஸி ஆதரவாளர்கள் கெய்ரோ மற்றும் பிற நகரங்களில் அரசுக்கு எதிராகப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அரசு ஆதரவாளர்களுக்கும எதிர்ப்பாளர்களுக்கும் இடையே மின்யா, கிஸா, அலெக்சாண்டரியா உள்ளிட்ட பல இடங்களில் மோதல் வெடித்தது. சில நகரங்களில் பொலிஸார் மற்றும் இராணுவ வீரர்கள் மீது அரசு எதிர்ப்பாளர்கள் கற்களை வீசி தாக்குதல் நடாத்தினர். இதையடுத்து, பொலிஸார் கண்ணீர் புகைக்குண்டுகளை வீசியும், துபபாக்கியால் சுட்டும் கூட்டத்தைக் கலைத்தனர்.

ஷேக் ஜுவைத் நகருக்கு அருகே ஒரு இராணுவ ஹெலிகொப்டர் சுட்டு வீழ்த்தப்பட்டதாக தகவல் வெளியானது. இதை உறுதி செய்துள்ள இராணுவ செய்தித் தொடர்பாளர், அதற்கான காரணத்தைத் தெரிவிக்கவில்லை.

# குடியரசுத் தலைவரின் உரை பரிசீலிக்கப்படும்


## ஆம் ஆத்மி கட்சி தெரிவிப்பு

குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி நாட்டு மக்களுக்கு ஆற்றிய குடியரசுத்தின உரையை கவனமாக பரிசீலிப்போம் என்று ஆம் ஆத்மி கட்சி நேற்று முன்தினம் தெரிவித்துள்ளது.

இது பற்றி கட்சியின் மூத்த தலைவர் அசுதோஷ் கூறியதாவது: நாட்டின் முதல் குடிமகன் என்ற முறையில், அவர் கூறியவற்றை பற்றிக் கருத்துத் கூற விரும்பவில்லை. எங்களைப் பற்றி அவர் ஏதாவது கூறி இருந்தால் அவற்றை கவனமாக கருத்தில்கொண்டு பரிசீலிப்போம் என்றார்.



# நடுவானில் விமானி மயக்கம்



நடுவானில் விமானி மயக்கமடைந்த போதும் விமானத்தை பத்திரமாக தரை இறக்கிய 19 வயது இளைஞர் சாதனைபடைத்துள்ளார்.

அவுஸ்ரேலியாவில் நியூ சவுத் வேல்ஸ் மாகாணத்தைச் சேர்ந்தவர் டெரக் நெவிலி (வயது-61). என்பவர். இவர் செஸ்னா 150 ரக விமானத்தைச் செலுத்திக்கொண்டிருந்தார். அவருடன் டிராய் ஜென்கின்ஸ் என்ற 19 வயது வாலிபர் உள்ளிட்ட சிலர் பயணம் செய்தனர்.

இவர்களது விமானம் போர்ப்ஸ் விமான நிலையத்தை நெருங்கிக் கொண்டிருந்தவேளை விமானிக்கு திடீரென மயக்கம் ஏற்பட்டது.

அதற்கு முன்னதாகவே யாராவது தனக்கு உதவும்படி விமானி அறையில் இருந்து ஒலிபெருக்கி மூலம் தெரிவித்திருந்தார். உடனே ஜென்கின்ஸ் என்ற இளைஞர் அங்கு விரைந்து சென்றார். அப்போதுதான் விமானி மயங்கிக் கொண்டிருந்தார்.

உடனே சுதாரித்த அவர் விமானத்தை தானே செலுத்தினார். சுமார் 30 நிமிட நேரம் விமானத்தை போர்ப்ஸ் விமான நிலையத்தின மீது வட்டமடித்தார்.

அதற்குள் விமானி மயங்கிய தகவல் விமான நிலையத்துக்கு தெரிவிக்கப்பட்டது. அவர்கள் கொடுத்த வழிகாட்டுதலின்படி இளைஞர் விமானத்தை பத்திரமாக தரை இறக்கினார்.

# 25 வயதுக்கு முன் திருமணம்; ஆண்களின் எலும்புகளுக்கு ஆபத்து

## விஞ்ஞானிகள் தகவல்

இளம் வயதில் திருமணம் செய்து கொள்வதால், ஆண்களின் எலும்புகளுக்கு ஆபத்து ஏற்படுவதாக, விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். அமெரிக்காவின், பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் நடாத்திய ஆய்வில் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது. வயதில் திருமணம் செய்வோரை விட, 25 வயதுக்குள் திருமணம் செய்யும், இளைஞர்களின் முதுகெலும்பு, பலம் குறைந்து காணப்படுகிறது.

மேலும், இள வயதில் திருமணம் செய்வோரிடம், விவாகரத்து செய்வது அதிகளவில் காணப்படுகிறது.

குறைவான கல்வி குறைந்த வருமானம் உடையவர்களின், இள வயது திருமணத்தால், முதுகெலும்பு திண்மை ஆண்டுதோறும் குறைந்து, அவர்களுடைய குடும்ப வாழ்க்கை பாதிக்கப்படுகிறது. எனவே, திருமணத்தை, 25 வயதிற்குப் பின் செய்வது நல்லது. பெண்களைப் பொறுத்தவரை, வாழ்கைத் துணையின் ஆதரவே பெரிய பலமாக அமைந்து விடுவதால், அவர்களுக்கு இத்தகைய பிரச்சினைகள் ஏற்படுவதில்லை. என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சீன விண்கலத்தில் கோளாறு




சந்திரனுக்கு அனுப்பப்பட்ட சீன விண்கலத்தில் இயந்திரக் கோளாறு ஏற்பட்டுள்ளது.

கடந்த டிசம்பர் 14ஆம் திகதி சீனா சந்திரனுக்கு “யுது“ என்ற விண்கலத்தை அனுப்பியது. சந்திரனின் வான் பரப்பு மற்றும் சுற்றுச்சூழல் குறித்து ஆய்வு செய்வதற்காக அனுப்பப்பட்டது.

அந்த விண்கலத்தில் திடீரென இயந்திரக்கோளாறு ஏற்பட்டுள்ளது. இதனால் விண்கலத்தின் செயற்பாடு நின்றுவிட்டது. தற்போது திருத்தப்பணிகள் இடம்பெறுகின்றன.

# அச்சுவேலி கைத்தொழில் பேட்டையை விரைவாக இயக்குவதற்குப் பணிப்பு



(கொழும்பு)

அச்சுவேலி கைத்தொழிற் பேட்டையை விரைவாக இயக்குவதற்கான நடவடிக்கையை துரிதப்படுத்துமாறு துறைசார்ந்தோருக்கு அமைச்சர் டக்ளஸ் தேவாநந்தா பணிப்புரை விடுத்துள்ளார்.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கீழான கைத்தொழில் அபிவிருத்திச் சபையினால் நடைமுறைப்படுத்தப்படும் தொழிற்பேட்டைகளின் முன்னேற்றங்கள் தொடர்பான கலந்துரையாடல் நேற்றைய தினம் கொழும்பு மருதானையில் அமைந்துள்ள அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றபோதே அமைச்சர் மேற்கண்டவாறு பணிப்புரை விடுத்தார்.

அச்சுவேலி கைத்தொழில் பேட்டை இயங்கும் பட்சத்தில் அதனூடான தொழிற்துறை நடவடிக்கைகளை உடனடியாகத் தொடங்குவது தொடர்பாக இதன்போது கவனம் செலுத்திய அமைச்சர் முதற்கட்டமாகத் தெரிவு செய்யப்பட்ட ஐந்து தொழில் வழங்குநர்களுக்கு கைத்தொழில் பேட்டை வளாகத்தில் அவர்களுக்குரிய பகுதிகளை எதிர்வரும் திங்கட்கிழமை வழங்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதன்போது கைத்தொழில் அபிவிருத்தி சபையினால் நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் கைத்தொழிற் பேட்டைகளினது தொழிற்துறை நடவடிக்கைகள் தொடர்பிலும், கைத்தொழிற் பேட்டைகள் எதிர்நோக்கி வரும் இடர்பாடுகள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.

முக்கியமாக கைத்தொழிற் பேட்டைகளின் உள்ளக வீதிகள், மின்சாரம், நீர்விநியோகம், வாடகை மற்றும் உட்கட்டு மானங்கள் தொடர்பாகவும் ஏனைய விடயங்கள் தொடர்பாகவும் அமைச்சர் துறைசார்ந் தோரிடம் கேட்டறிந்து கொண்டார்.

இதில் பள்ளேகல பகுதியில் அமைந்துள்ள கைத்தொழிற் பேட்டை தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டிருந்தது.

இதனிடையே கைத்தொழிற் பேட்டைகளின் ஊடாக தொழிற்துறை நடவடிக்கைகளை மேலும் விரிவுபடுத்துவது தொடர்பாகவும்

அத்துடன், 2013 ஆம் ஆண்டில் குறித்த கைத்தொழிற் பேட்டைகளினது தொழிற்துறை மற்றும் செயற்திட்ட நடவடிக்கைகள் தொடர்பாக அமைச்சர் கேட்டறிந்து கொண்டார்.

முக்கியமாக கைத்தொழிற் பேட்டைகளின் உள்ளக வீதிகள், மின்சாரம், நீர்விநியோகம், வாடகை மற்றும் உட்கட்டுமானங்கள் தொடர்பாகவும் ஏனைய விடயங்கள் தொடர்பாகவும் அமைச்சர் துறைசார்ந்தோரிடம் கேட்டறிந்து கொண்டார்.

இதனிடையே கைத்தொழிற் பேட்டைகளின் ஊடாக தொழிற்துறை நடவடிக்கைகளை மேலும் விரிவுபடுத்துவது தொடர்பாகவும் அதனூடாக வருமானங்களை மேம்படுத்திக் கொள்வதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன், 2013 ஆம் ஆண்டில் குறித்த கைத்தொழிற் பேட்டைகளினது தொழிற்துறை மற்றும் செயற்திட்ட நடவடிக்கைகள் தொடர்பாக அமைச்சர் கேட்டறிந்து கொண்டார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த அமைச்சர் குறித்த கைத்தொழிற் பேட்டைகளினது தொழிற்துறை நடவடிக்கைகள் தொடர்பாக தாம் நேரில் ஆராயவுள்ளதாகவும் அவற்றின் ஊடாக தொழிற்துறை நடவடிக்கைகளை எதிர்காலத்தில் மேம்படுத்துவதில் தொழிற்பேட்டைகள் எதிர்நோக்கி வரும் இடர்பாடுகளை களைந்து அவற்றை மேலும் முன்னேற்றகரமாகவும் இலாபகரமுள்ள பேட்டைகளாக மாற்றியமைப்பதுமே தமது முக்கிய நோக்கமென்றும் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், கைத்தொழிற் பேட்டைகளுக்கான உட்கட்டுமானம் மற்றும் ஏனைய மேம்பாட்டுத்துறைகளுக்கான ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 70 பில்லியன் ரூபாவினை வரும் ஆகஸ்ட் மாதத்திற்கு இடையில் செலவு செய்ய வேண்டுமெனவும் அமைச்சர் தெரிவித்தார்.

அத்துடன் பனையிலிருந்து பெறப்படும் பதனீரை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கும் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பிலும் அமைச்சர் அதன்போது கவனம் செலுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இக்கலந்துரையாடலில் அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி, அமைச்சரின் ஆலோசகர் திருமதி வீ. ஜெகராஜசிங்கம், கைத்தொழில் அபிவிருத்தி சபையின் தலைவர் நவாப் ரஜாப்தீன், பொது முகாமையாளர் ரட்னமலால ஆகியோர் உடனிருந்தனர்.

## ஜெனிவாவில் இந்திய...

ஆணைககுழுவின் சிபாரிசுகள் நடைமுறைப்படுத்தப்பட்ட விதம் மற்றும் அவ ற்றுள் வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டுள்ள அம்சங்கள் தொடர்பாக விளக்கமளிக்கும் நோக்கில் கடந்த வாரம் வொஷிங்டன் பயணமானார்.

அந்த வகையில் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸூம் புதுடில்லியிலுள்ள வெளிநாட்டு தூதுவர்களுக்கு நாட்டின் உட்கட்டமைப்பு அபிவிருத்தி, பொருளாதார இலக்கு, புனர்வாழ்வு, நல்லிணக்கச் செயற் பாடுகள் என்பன குறித்து விரிவாக விளக்கமளிபாரெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

## ஜெனிவாவை...

லலித் வீரதுங்க தலைமையில் முன்னெடுக்கப்படவுள்ளது.

அதேவேளை, ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்துக்கு முன்னதாக, சுமார் 90 கூட்டங்கள், சந்திப்புகளை நடத்தி, இலங்கைக்கு ஆதரவு தேடவும் திட்டமிடப்பட்டுள்ளது.

ஜெனிவாத் தீர்மானத்தை எதிர்கொள்வதற்காக, வெளிவிவகார அமைச்சில் மனித உரிமை விவகாரங்களைக் கவனிப்பதற்காக தனி அலகு ஒன்றும் உருவாக்கப்பட்டுள்ளது.

## மாகாண...

கால்நடை' என்பது போல பாவம் முதலமைச்சர் ஐயா நிர்க்கதியாக நின்று கொண்டிருக்கிறார். இதற்கு அரசாங்கத்தரப்பும், ஜனாதிபதியும் வெட்கப்பட வேண்டும் என்றார். (இ)

## மாகாண அமர்வில் கமலேந்திரன்

(யாழ்ப்பாணம்)

நீதிமன்றம் வழங்கிய அனுமதியை அடுத்த பொலிஸ் மற்றும் சிறை அதிகாரிகளின் பாதுகாப்புடன் நேற்று வடமாகாண சபை அமர்வில் கமலேந்திரன் கலந்து கொண்டார்.

சபை அமர்வுகளில், தான் கலந்து கொள்வதற்கு அனுமதி அளிக்குமாறு நீதிமன்றில் கோரியதையடுத்து நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் நேற்று இடம் பெற்ற 5 ஆவது அமர்வில் கலந்து கொள்ள கமலேந்திரன் பாதுகாப்புடன் கொண்டு வரப்பட்டிருந்தார்.

சபை அமர்வில் கலந்து கொண்டதுடன் அவர் அங்கு உரை நிகழ்த்தினார்.

அமர்வின் நிறைவில் மீண்டும் பாதுகாப்புடன் சிறைச்சாலைக்கு அவர் அழைத்துச் செல்லப்பட்டார். (இ)

# முல்லையில் புதிய நீதிமன்றம் அமைக்க காணி ஒதுக்கீடு

(முல்லைத்தீவு)

முல்லையில் கோயில் குடியிருப்பு கிராம அலுவலர் பிரிவில் சிறந்த வசதிகளுடன் கூடிய நீதிமன்றம் அமைப்பதற்கு இரண்டு ஏக்கர் நிலப்பரப்புடைய காணி ஒதுக்கப்பட்டுள்ளது. முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மா. கணேசராஜா, பதிவாளர் மற்றும் சட்டத்தரணிகளான சுதர்சன், பரஞ்சோதி முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தின் சட்டத்தரணிகள் சங்கத்தலைவர் கங்காதரன் ஆகியோரின் முயற்சியால் அரச அதிபர் இக்காணியை சிறந்ததொரு வசதிகளுடன் கூடிய நீதிமன்றம் ஒன்றை அமைப்பதற்கு ஏதுவாக நேற்றைய தினம் எழுத்து மூலமாக இக்காணியை நீதிமன்றுக்கு கையளித்துள்ளார். நீதியமைச்சின் அனுசரணையுடன் இந்நீதிமன்ற கட்டடத்திற்கான பணிகள் தொடங்கப்படவுள்ளது. (170)

# கற்றல் உபகரணங்கள் நாளை கையளிப்பு

ஆனையூர் இளைஞர் கழகத்தினரின் ஏற்பாட்டில் மயிலிட்டி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை கையளிக்கும் நிகழ்வு நாளை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது ஆனையூர் இளைஞர் கழகத்தினரின் கன்னிச்செயற்பாடு என்பதோடு, இச்செயற்பாடுகள் தொடர்ந்து இடம்பெறும் என்பது குறிப்பிடத்தக்கது. இதைத்தொடர்ந்து வரும் வெள்ளிக்கிழமை பாடசலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியை முன்னிட்டு சிரமதானமும் இடம்பெறும் என்று ஆனையூர் இளைஞர் கழகத்தின் தலைவர் அறிவித்துள்ளார்.(114)

## பிரதம...

இடமாற்றுவது உடன் நிறுத்தப்பட வேண்டும் என்னும் தலைப்பில் எழுதப்பட்ட கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வடமாகாணத்தின் அபிவிருத்திக்கு மக்கள் தேவை அறிந்த அர்ப்பணிப்புடன் செயலாற்றுபவர் திருமதி ரமேஷ் விஜயலட்சுமி.

வடமாகாணத்தில் மாகாணசபை மீளர்வதற்கு முன்னரும், மாகாண சபை உருவான பின்னரும் 34 அரச திணைக்களங்களை ஒன்றிணைத்து அர்ப்பணிப்புச் சிந்தனையுடன் பணியாற்றுபவர் திருமதி ரமேஷ் விஜயலட்சுமி.

வடக்கு மாகாணத்தின் பிரதம செயலாளராக திருமதி ரமேஷ் விஜயலட்சுமி பதவியேற்ற காலம் முதல் இன்று வரை மாகாணத்தின் கீழ்வரும் அமைச்சுகளுக்கு ஊடாக பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை முன்வந்து செயலாற்றி செயலுருப்பெற வைத்தவர்.

தற்போது வடக்கு மாகாண சபையின் பிரதம செயலாளரை காரணமின்றி இடமாற்றம் செய்யவோ அன்றி அவரைப் பதவியிலிருந்து விலக்குவதற்கான நடவடிக்கையில் மாகாண அமைச்சர்கள் ஈடுபட்டு வருவதையிட்டு மிகக் கவலையடைகின்றோம்.

எனவே வடக்கின் துரித அபிவிருத்திக்கு முனைப்புடன் செயலாற்றி வரும் வடமாகாண பிரதம செயலாளரை ஜனாதிபதியாகிய தாங்கள் இவ்விடயத்தில் கூடுதல் முக்கியத்துவம் கொடுத்த இடமாற்றத்தை அல்லது பதவி விலக்குவதனை இடைநிறுத்த வேண்டும் எனக் கோரிக்கை விடப்பட்டு கடிதம் எழுதியுள்ளது.

## எல்லைதாண்டிய...

ங்கை மீனவளம் மற்றும் கடல்வாழ் உயிரினங்கள் துறை தலைமை இயக்குநர் நிமல் ஹெட்டியராச்சி தலைமையிலான அதிகாரிகள் உட்பட 18 பேர் இந்தப்பேச்சு வார்த்தைகளில் கலந்துகொண்டனர்.

பேச்சுவார்த்தைகளின் முடிவில், மாலையில், செய்தியாளர்களிடையே, சிறிது நேரம் பேசிய மீனவர் சங்கப் பிரதிதிகள் அருளானந்தம் (தமிழகம்) மற்றும் சதாசிவம் (இலங்கை) ஆகியோர், இந்தக் கூட்டத்தில் மீன் பிடிப்பது தொடர்பாக சுமுகமான முடிவுகள் எடுக்கப்பட்டன. மனம் விட்டுப்பேசினோம் என்றனர்.

கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளை தமிழக முதல்வருக்கும், இரு நாட்டு அரசுக்ளுக்கும் தெரிவித்து, அவர்களின் ஒப்புதல் பெற்ற பின்னர், செயல்படுத்தப்படும் என்றும் அவர்கள் கூறினர்.

மீன் பிடிப்பு நடவடிக்கைகள் தொடர்பாக, இரு தரப்பிலும், எல்லை தாண்டி மீன்பிடிப்பது உள்ளிட்ட சில தடைகள் உள் ளன. அவற்றையும் விவாதித்து, அரசுகள்தான் முடிவு எடுக்க வேண்டும் என்றனர்.

## வடக்கில்...

கட்டத்தை நெருங்கியுள்ளது. எனவே இதற்குத் தேவையான உதவிகளை வழங்குவதுடன், வட,கிழக்கு மாகாணங்களில் உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களை விரைவில் மீளவும் குடியமர்த்த வேண்டும்.

கடந்த 2003 ஆம் ஆண்டிலிருந்து ஜப்பானிய அரசாங்கம் இலங்கையின் வட,கிழக்குப் பிரதேசங்களில் கண்ணிவெடிகளை அகற்ற 27 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கியுள்ளது.

அத்துடன் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் முல்லைத் தீவு மாவட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் ஜப்பான் உதவியளித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## மன்னாரில்...

ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

அகழ்வில் மீட்கப்பட்ட மனித எச்சங்கள் மன்னார் வைத்திய சாலையின் பிரத்தியேக அறையொன்றில் வைத்து, அதன் பொறுப்பை நீதிமன்றத்தில் ஒப்படைக்குமாறு நீதவானினால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# காணாமற்போனவர் பொலிஸாரிடம் சரண்

யாழில் கடந்த 24 ஆம் திகதி காணாமல்போனதாக கூறப்படும் கொட்டடியினைச் சேர்ந்த இரு இளைஞர்களில் ஒருவரான மனோ கரன் யதுசன் (வயது - 17) என்பவர் யாழ்.பொலிஸ் நிலையத்தில் நேற்று சரணடைந்தததாக யாழ்.பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்டி இளைஞனும் ரவி பிரதீபன் (வயது - 17) என்ற இளை ஞனும் கடந்த 26 ஆம் திகதி தங்களின் பெற்றோர்களது பணத் தினை எடுத்துக்கொண்டு கொழும்பு சென்றதாகவும் அதில் ரவி கண்டிக்கு செல்வதாக கூறிவிட்டு சென்றமையால் தான் யாழ்ப் பாணத்திற்கு பஸ் ஏறி வந்துள்ளதாக குறித்த இளைஞன் பொலி ஸாருக்கு தெரிவித்துள்ளான்.

யாழ்.கொட்டடிப் பகுதியில் கடந்த 24 ஆம் திகதி நடைபெற்ற இசை நிகழ்ச்சியினைப் பார்வையிடுவதற்காக சென்ற மனோகரன் யதுசன், மற்றும் ரவி பிரதீபன், ஆகியோர் காணாமல் போனதாக அவர்களது உறவினர்களால் யாழ்.பொலிஸ் நிலையத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை முறைப்பாடு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# குடிநீர் விற்பனையில் மோசடியா? அவசர அழைப்புக்கு வாய்ப்பு

பதிவுசெய்யாது விற்பனை செய்யப்பட்டும் குடிநீர்ப் போத்தல் கள் தொடர்பில் அறியத்தருமாறு சுகாதார அமைச்சு கேட்டுக் கொண்டுள்ளது.

அவ்வாறு விற்பனை செய்யப்படும் குடிநீர்ப் போத்தல்கள் தொடர்பில் 011 307 1013 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அறியத்தர முடியுமென அமைச்சு தெரிவித்துள்ளது. சுகாதார அமைச்சில் பதிவுசெய்யப்பட்டதாக குடிநீர்ப் போத்தல்கள் சந்தை யில் விற்பனை செய்யப்படுவதாக தமக்கு தகவல்கள் கிடைத்துள்ள தாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

# அபிவிருத்தியின் இலக்கை எட்ட பொதுமக்கள் சந்திப்புக்கள்

## ஈவினை கிராமத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் ... றை

(யாழ்ப்பாணம்)

ஈவினை கிராம மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர் பாக ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) குறித்த கிராமத்திற்கு விஜயம் மேற் கொண்டு பார்வையிட்டார்.

வலி. தெற்கு பிரதேசசபை எதிர்க்கட்சித்தலைவர் அரிகர னின் ஏற்பாட்டில் இடம்பெற்ற ஈவினை ஞானவைரவர் ஆலய ஒன்று கூடலில் மக்களது வாழ் வாதார பிரச்சினைகள், போக்கு வரத்து, வீதி அபிவிருத்தி, மின் சாரம், கல்வி, கிராமத்தின் அடிப்படை வசதிகள் தொடர் பாக ஆராய்ந்ததுடன் முதியவர் களுக்கான நாற்காலிச்சக்கர வண்டி, முதியவர்களுக்கான கருவிகள், வீதி மின்விளக்கு, விளையாட்டு உபகரணங்கள்



ஆகியவை வழங்கி வைக்கப் பட்டன.

இதில் கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர், கிரா மத்தின் முதுகெலும்பாக விளங் குவது அக்கிராமத்தின் பொது நிர்வாகமாகும். ஒவ்வொரு கிரா மத்திலும் மக்கள் மத்தியில் சிறந்ததொரு நிர்வாகம் கட்டி யெழுப்பபடும் பட்சத்தில் அக்கி ராமம் பூரணமடைந்து அபிவி ருத்திப்பாதையினை நோக்கிச் செல்லும் எனத்தெரிவித்ததார்.

இக்கிராமத்தின் அனைத்து தேவைகளையும் படிப்படியாக நிறைவேற்றுவதாக உறுதிய ளித்ததுடன் அக்கிராமத்தில் சுகா தார சீர்கேட்டை உருவாக்கும் வகையில் குடிமனைக்கு மத்தி யில் அமைந்துள்ள மயானத்தி னையும், குன்றும் குழியுமாக உள்ள வீதிகளையும் பார்வையிட் டதுடன் அவை தொடர்பாக மக் களுடன் கலந்துரையாடினார்.

இந்நிகழ்வில் ஈழமக்கள் ஜன நாயகக்கட்சியின் வலி.தெற்கு பிரதேசசபை எதிர்க்கட்சித்தலை வர் அரிகரன், கிராம நலன் விரும்பிகள் பொதுமக்கள் ஆகி யோர் கலந்து கொண்டனர்.

# பொலிஸ் அதிகாரங்கள் இராணுவத்திற்கு வேண்டாம்

## அரசைச்சாடுகிறார் திஸ்ஸ

(கொழும்பு)

நாட்டில் பொலிஸாருக்குள்ள அதிகாரங்களை இராணுவத் துக்கு வழங்கி எழுச்சி கொள் ளும் மக்களை அடங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத் துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித் துள்ளார்.

தண்ணீர் பீச்சியடிக்கும் இயந்திம் மற்றும் கண்ணீர் புகை ரவைகளை வீதியில் இறங்கி போராட முயற்சிக்கும் மக்களை கட்டுப்படுத்துவதற் காக அரசாங்கம் கொள்வனவு செய்வதாகவும் அவர் குற்றஞ் சாட்டியுள்ளார்.

சுமார் 5000 கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட நுரைச்சோலை அனல் மின் நிலையம் இதுவரை 28 தடவை கள் பழுதடைந்துள்ளதாகவும் ஒரு தடவை பழுதடையும்போது அதனை திருத்துவதற்கு ஒரு கோடி ரூபாவுக்கும் அதிகமாக செலவிடவேண்டியுள்ளதாக திஸ்ஸ குறிப்பிட்டார்.

இங்கு பன்படுத்தப்பட்டுள்ள இயந்திரங்கள் காலாவதியான இயந்திரங்கள் என உள்ளகத் தகவல்கள் தனக்கு கிடைத்துள் ளதாக அவர் கூறினார்.

இயந்திரக் கோளாறு ஏற்பட்டு அதனை திருத்துவதற்கு மக்க ளின் வரிப்பணம் செலவிடப்படு வதாக திஸ்ஸ குறிப்பிட்டார்.

இதேபோல் களனி திஸ்ஸ, கெரவலபிட்டிய, ரன்தெனிகல மின்சார திட்டம் என்பன பழுத டைந்துள்ளமையினால் தனியார் நிறுவனங்களிலிருந்து அதிக பணத்திற்கு மின்சாரத்தை பெற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ள தாக திஸ்ஸ சுட்டிக் காட்டினார்.

# சுவிஸ் தூதரக அரசியல் செயலாளர்; வடமாகாண சபை அமர்வில்

சுவிட்சர்லாந்தின் இலங்கைத் தூதுவரின் முதலாவது அரசி யல் செயலாளர் டேவிட் வின் னாதி நேற்று வடமாகாண சபை அமர்வில் கலந்து கொண் டார்.

நேற்று இடம்பெற்ற வட மாகாண சபையின் 5 ஆவது அமர்வில் இவர் விசேட அதி திகள் கலரியில் அமர்ந்து கொண்டு சபை நடவடிக்கை களை அவதானித்ததுடன், தேநீர் இடைவேளையின் போது முதல்வலர் சி.வி.விக்னேஸ் வரனைச்சந்தித்தக் கலந்துரை யாடினார்.

இவருடன் தூதரகக் குழு ஒன்று விஜயம் மேற்கொண்டுள் ளது. (இ)

# வாதப்பிரதிவாதங்கள் நிறைந்த வடமாகாண சபையின் நேற்றைய அமர்வு

(யாழ்ப்பாணம்)

வடமாகாண சபையின் 5 ஆவது அமர்வு நேற்றுக்காலை 9.30 மணியளவில் பேரவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் தலை மையில் ஆரம்பமானது.

நேற்றுக்காலை மங்கள வாத்தியக் கச்சேரி ஒன்றும் இடம்பெற்ற துடன், கலைஞர்களும் கௌரவிக்கப்பட்டனர். தொடர்ந்து சபை ஆரம்பத்தில் அறிவிப்புகள் அவைத்தலைவரினால் அறிவிக்கப் பட்டதுடன், பதின்னான்கு பிரேரணைகள் [illegible] பில் பிரேரிக்கப்பட்டு உறுப்பினர்களால் முன்மொழியப்பட்டு [illegible] மொழியப்பட்டடு 13 பிரரேணைகள் நிறைவேற்றப்பட்டது.

இதன்போது விசேட உரையினை 5 உறுப்பினர்கள் நிகழ்த்தினர். இடையிலேயே வாதப்பிரதிவாதங்களும் இடம்பெற்றன. தர்ம பாலவின் பேச்சில் குறுக்கிட்டு சில உறுப்பினர்கள் சலசலப்பை ஏற்படுத்தினர். நண்பகல் 1.30 மணியளவில் சபை நடவடிக்கைகளை அவைத்தலைவர் எதிர்வரும் 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமைக்கு ஒத்திவைத்ததுடன், சபை அமர்வுகள் நிறைவு பெற்றன. (இ)

# ஜே.வி.பி.யின் புதிய செயலாளர் யார்? வலுவடையும் பனியுத்தம்



(கொழும்பு)

பெப்ரவரி முதல் வாரத்தில் ஜே.வி.பி.யின் தலைவராக தற் போதைய பொதுச்செயலர் ரில் வின் சில்வா நியமிக்கப்பட வுள்ள நிலையில் கட்சியின் பொதுச்செயலாளர் பதவிக்கு இருவருக்கிடையே கடும் போட்டி நிலவிவருவதாக தக வல்கள் தெரிவிக்கின்றன.

ஜே.வி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸ நாயக்க மற்றும் முன்னாள் நாடாளுமன் உறுப்பினர் லால் காந்த ஆகியோருக்கிடை யேயே பனிப்போர் நிலவி வருவதக தெரிவிக்கப்படுகிறது.

ரில்வின் சில்வாவை தலை வராக நியமிக்க எவரும் எதிர் க்கவில்லை எனினும் கட்சியின் பெரும்பான்மையானவர்கள் லால்காந்தாவை செயலாளராக நியமிக்கவிருப்பம் தெரிவித் துள்ளனர். அநுரகுமாரா திஸ நாயக்க ஐ.தே.க.வுடன் நெருங் கிய தொடர்பு கொண்டவ ரெனவும், அவர்களாலேயே இவர் வழிநடத்தப்படுவதாகவும் இவர் ஒரு சந்தேகப்போர்வழி எனவும் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை மற்றுமொரு குழுவினர் அநுரதிஸநாக்க வையே செயலாளராக தெரிவு செய்யவேண்டுமெனத் தெரி வித்துள்ளனர்.

லால்காந்த அரசின் ஒப்பந்த காரரெனவும், அரசாங்கத்திற்கு சகல தகவல்களையும் வழங்கி வருபவரெனவும் தெரிவித்துள் ளனர்.

இதனிடையே கட்சியின் பொதுச்செயலராக பிமல் ரத் நாயக்கவை நியமிப்பதற்கு சோமவன்ச அமரசிங்க முன் மொழிந்துள்ளதனை மேற்படி குழுவின கடுமையாக எதிர்த்து ள்ளதுடன். இது தொடர்பாக பெலவத்தையிலுள்ள ஜே.வி. பி.யின் தலைமை அலுவலகத் தில் கடும் விவாதங்கள் இடம் பெறுவதாகவும், சிலவேளைக ளில் அது எல்லை மீறிச் செல் வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# மின் உற்பத்தி நிலையங்கள் செயலிழப்பு அரசுக்கு 16 பில்லியன் இழப்பு

(கொழும்பு)

நாட்டில் மின்சேவையை வழங்கும் ஆறு மின் உற்பத்தி நிலையங்கள் பழுதடைந்த காரணத்தினால் 16 பில்லியன் ரூபா வினை தனியார் மின் சேவையாளர்களுக்கு வழங்கப்பட்டடுள்ளதாக தெரிவிக்கப்பட்டுகிறது.

நுரைச்சோலை அனல் மின்நிலையம், கண்யொன், புதிய லக்ஸபான, ரன்தெனிகல, ரண்தம்பே மற்றும் களனிதிஸ்ஸ ஆகிய ஆறு மின் உற்பத்தி நிலையங்கள் அண்மைய நாட்களாக பழு தடைந்திருந்தமையினால் நாட்டில் மின்சேவை பாதிக்கப்படும் நிலைக்கு தள்ளப்பட்டது.

இதனை நிவர்த்தி செய்யும் வகையில் இலங்கை மின்சாரசபை 600 மெகாவோட்ஸ் மின்சாரத்தினை தனியாரிடமிருந்து பெற்றுக் கொண்டதுடன், இவ்வாறு தனியாரிமிருந்து பெறப்பட்ட மின்சார சேவைக்குரிய கட்டணமாகவே 16 பில்லியன் ரூபா செலுத் தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.


## வன்னி மாவட்டத்திற்கான பத்திரிகை விநியோகஸ்தர் தேவை

வன்னி மாவட்டத்தின் சகல பகுதிகளுக்கும் பத்திரிகை விநியோகம் செய்யக்கூடியவர்கள் உடனடியாக தேவைப்படு கின்றனர்.

தகைமைகள் - 45 வயதிற்கு உட்பட்டவராக, உடல் ஆரோக்கியம் உள்ளவராக இருத்தல் வேண்டும், சொந்தமாக மோட்டார் சைக்கிள் வைத்திருப்பவர்கள், (சாரதி அனு மதிப்பத்திரம்) உள்ளவர் தினமுரசு காரியாலயத்திற்கு அலுவலக நேரத்தில் நேரில் வரவும்.

விநியோக முகாமையாளர்,
'தினமுரசு' 373, பிரதான வீதி
யாழ்ப்பாணம்.

(இ)


இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 ஜனவரி 28 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.